விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
**Valampurii**

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 08 வியாழக்கிழமை (24.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ஜெனிவா கூட்டத் தொடரில் மீண்டும் இலங்கை விவகாரம்

## நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கம்

(கொழும்பு) ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. போர்க் குற்றம் உள்ளிட்ட மனித உரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசாங்கம் இன்னும் உறுதியான வடிவத்தை வெளியிடாததினால் இந்த விடயம் குறித்து நிகழ்ச்சி நிரலில் காணப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## 31ஆம் திகதி உயர்தர பெறுபேறு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் 31ஆம் திகதி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளை தயாரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தை 24ஆம் பக்கம் பார்க்க....

## இணையத்தளத்தில் வாக்காளர் விபரம்

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு நேற்று முதல் தேர்தல்கள் செயலகத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வாக்காளர் இடாப்பு இணையத்தளத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

# கூட்டமைப்புக்கு எதிரான நோக்கம் தமிழ் மக்கள் பேரவையிடம் இல்லை

## சிவாஜிலிங்கம் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவை கூட்டமைப்புக்கு எதிராக உருவாக்கப்பட்டதாக சில தரப்பினர் கூறினாலும் அவ்வாறு அந்த நோக்கம் இருப்பதாக நான் நினைக்கவில்லை என வடக்கு மாகாண உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர் நிலைப்பாட்டை எடுத்தால் தமிழ் மக்கள் அதனை நிராகரிப்பார்கள் என வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் 24ஆம் பக்கம் பார்க்க....



லும் அவ்வாறு அந்த நோக்கம் இருப்பதாக நான் நினைக்கவில்லை


கும் தமிழ் மக்கள் பேரவை, தமிழ்

சந்திப்பில் 24 ஆம் பக்கம் பார்க்க....



நத்தார் பண்டிகையினை முன்னிட்டு கோட்டை ஜனாதிபதி மாளிகையில், கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு சிறப்பித்தார். ஜனாதிபதி செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வில் அமைச்சர்கள், எதிர்க்கட்சித்தலைவர் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கொலைச் சந்தேக நபர்கள் மூவர் வவுனியாவில் கைது



(வவுனியா)

ஆயுதங்களுடன் நடமாடிய மூவரை நேற்று கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தின் எஸ்.ஐ.குமார நலவன்ச தலைமையில் ரோந்து சென்ற பொலிஸார், பேருந்து நிலையம் அருகில் வைத்து 24 ஆம் பக்கம் பார்க்க....

# பெண் சிறைக்கைதி பலவந்த இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கட சிறைச்சாலையின் பெண் கைதிகளின் சிறைக் கூடத்தில் இரகசியமாக நடந்து வரும் சட்டவிரோத வியாபாரங்கள் தொடர்பான தகவல்களை பெண் சிறைக் 24 ஆம் பக்கம் பார்க்க....

# பிரதமர் ரணில் பிரி. பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவுக்கான தனிப்பட்ட விஜயமொன்றை மேற் கொண்டுள்ளதாக 24 ஆம் பக்கம் பார்க்க....

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு விளக்கமறியலில் இருந்த 35 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 27 மீனவர்களும் புதுக்கோட்டையைச் சேர்ந்த 8மீனவர்களும் நெடுந்தீவு கடல் பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விளக்க 24 ஆம் பக்கம் பார்க்க....

# கிராம இராச்சிய உருவாக்கம் வடக்கு மாகாண சபையை பாதிக்காது

## அரசாங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராம இராச்சியம் வடகிழக்கை பாதிக்காது என்று தெரிவித்துள்ள அரசாங்கம் வடகிழக்கின் தனித்துவம் பேணும் வகையிலேயே கிராம இராச்சியம் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கிராம இராச்சியத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பதில் எந்தவித அர்த்தமும் கிடையாது என்றும் அதனால் வட மாகாண சபைக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

# தற்போது வெள்ளை வான் இல்லை டிபெண்டரால்தான் ஆபத்து

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



வெள்ளைவான் அச்சுறுத்தல் காணப்படுவதாக கூறப்பட்டாலும் இன்று அவ்வாறான ஒரு நிலை இல்லை.

ஆனாலும் தற்போது டிபெண்டர் அச்சுறுத்தல்காணப்படுவதாக பாராளுமன்ற 24 ஆம் பக்கம் பார்க்க....

## வெற்றிலைக்கேணி உணவத்தை கண்ணகியம்மன் ஆலய பரிபாலன சபை

ஆலய காணி அளப்பனவு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

மேற்படி ஆலயத்துக்குச் சொந்தமான 40 (நாற்பது) நிலப்பரப்பு அளப்பனவு இடம் பெற்று ஆலய எல்லை வரையறுக்கப்பட இருக்கின்றது. இவ்வாலய வளாகத்தினுள் தங்களது நிலங்கள் உண்டெனில் அவற்றிற்கான உறுதிப்பத்திரங்களை 06-01-2016 புதன்கிழமைக்கு முன்னதாக ஆலய பரிபாலன சபை தலைவர் / செயலாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்வதோடு இத் திகதிக்கு பின்னதாக ஒப்படைக்கப்படும் ஆவணத்துக்கு எழும் பிரச்சினைகளுக்கு ஆலய பரிபாலன சபை எவ்வித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளமாட்டாது என்பதனை பகிரங்கமாக அறிவித்து கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: திரு.க. கனகேஸ்வரன்
தலைவர்
TP. 0772395900

திரு.ந. குகானந்தம்
செயலாளர்
TP. 0779168968

(C-3097)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

### அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக கடை என்பன 2016ஆம் ஆண்டிற்கு பகிரங்க ஏலத்தில் விடல்**

பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை என்பன மானிப்பாயிலுள்ள எமது சபையின் தலைமை அலுவலகத்தில் 2015.12.30 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. மேற்படி ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் மீளளிக்கப்படாத தொகையாக ரூபாய் 102.00 இனையும் (NBT 2% உள்ளடங்கலாக) மீள ளிப்புத் தொகையாக ரூபாய் 5000.00 இனையும் மானிப்பாய் தலைமைஅலுவலகத்தில் மு.ப.10.00 மணிக்கு முன்பாக வைப்புச் செய்து மேற்படி ஏலத்தில் பங்குகொள்ளலாம் என்ப தனைத் தங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| | **மானிப்பாய் பட்டின உபஅலுவலகம்** |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை |
| | **மானிப்பாய் கிராம உபஅலுவலகம்** |
| 03 | காக்கைதீவுப் பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் தவிர்ந்து) |
| 04 | நவாலி பிரசாத் சந்தை |
| 05 | சாவற்கட்டு சந்தை |
| 06 | ஆனைக்கோட்டை சந்தி கோழி இறைச்சிக் கடை |
| | **பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம்** |
| 07 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை |
| 08 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கருவாட்டுக்கடை |
| | **பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம்** |
| 09 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை |
| 10 | இளவாலை பொதுச் சந்தை |
| 11 | இளவாலை பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை |

**திருமதி ஜெயந்தா சோமராஜ்,**
**செயலாளர்,**
**வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

**22.12.2015**

(சி-3094)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு சாவித்திரிதேவி



கரவெட்டி மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாக கொண்ட கந்தப்பு சாவித்திரிதேவி 21-12-2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற சிதம்பரப்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் மகளும் காலம் சென்ற வேலுப்பிள்ளை நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலம் சென்ற வேலுப்பிள்ளை கந்தப்பு அவர்களின் பாசமிகு மனைவியும் இராஜசேகர், இரகுநாதன், யோகேஸ்வரன், சுதாகர், சிவாகர் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24/12/2015) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிரந்தர முகவரி:**
**விக்கினேஸ்வரா வீதி,**
**கரவெட்டி மேற்கு, கரவெட்டி.**

**தகவல் :-**
**குடும்பத்தினர்**

(C-3091)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### பொது அறிவித்தல் - 2016

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2016**

2016ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கெனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2016ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக்கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**02. வியாபார அனுமதிப்பத்திரம் - 2016**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொரு ட்களை விநியோகிப்போர் 2016ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினை 2016ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப பூரணப்படுத்தி சுன்னாகம்,உடுவில்,ஏழாலை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2016ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2016ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 பிரகாரமான அறிவித்தல்**

3.1 வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் செய்தல் சட்டத்தின் பிரகாரம் தண்டனைக் குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டடவிண்ணப்பத்தின் மூலம விண்ணப்பம் செய்து சபையின் முன் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்ட ஈடும் வழங்கப்படாமலும் முன்னறிவித்தல் வழங்கப்படாமலும் சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கெனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.4 எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து தர வீதிகளின் இரு மருங் கிலும் எல்லைவேலி மற்றும் எல்லைச்சுவருக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூமரக்கன்றுகள், புல்பூண்டுகள், பார்த்தீனியம் மற்றும் அலங்கார சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை அகற்றித் துப்புரவு செய்யுமாறு வேண்டுகின்றேன். தவறின் சபையினரால் அகற்றப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**04. துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமம் பெறல்**

2016ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05. சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலக ஆதன வரி அறிவித்தல் ஆதனங் கள மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதற்கான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

**06. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் எனக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.25ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடாத்துகின்ற உரிமையாளர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2016ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தரு கின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமான அறிவித்தல்களை சுன்னாகம்/உடுவில்/ஏழாலை உப அலுவலகங்களில் பார்வையிட முடியும்.

**07. வீதி ஒழுங்கைப் பேணுதல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் நகர மையப்பகுதியில் அதிகரித்த வாகன போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தை தவிர்ப்பதன் நோக கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகைகள் முக்கிய இடங்களில் நிறுவப் பட்டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப்படுகின்றனர். மீறுவோர் மீது பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**08. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

இப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்க ளுக்கான கட்டணத்தை 31.01.2016ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/நிறுவனங க ள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலைய ங்களிலிருந்து 01.02.2016ஆம் திகதிக்கு பின் முன்னறிவித்தல் இன்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**09. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச்சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(சி-3092)

# மகிந்த ராஜபக்ஷ எம்.பிக்கு தண்டனை வழங்க வேண்டும்

## விக்கிரமபாகு கோரிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவை கைது செய்து அவருக்கு தண்டனை வழங்க வேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய 2000 நாட்கள் கடந்துள்ள நிலையில், விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவினால் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற பாரிய குற்றங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவே காரணம் என விக்கிரமபாகு கருணாரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

அதனால், மகிந்த ராஜபக்ஷ கைது செய்யப்பட வேண்டியது அத்தியாவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## போதையில் வாகனம் செலுத்தினால் கைது

புதிய சட்டம் நேற்றுமுதல் அமுல்

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்வதற்கான விசேட சட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தையொட்டியே இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த விசேட சட்டம் நேற்று முதல் எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பற்ற இடங்களான ஆறு, கடல், குளங்களில் பொதுமக்கள் குளிக்க வேண்டாம்என கோரிகை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## அவன்கார்ட் நிறுவனத்தினை மாலைதீவுக்கு மாற்றமுயற்சி

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் அவன்கார்ட் நிறுவனத்தை மாலைதீவுக்கு இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கடலில் பயணிக்கும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த அவன்கார்ட் நிறுவனம் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்ததுடன், அனுமதியற்ற செயற் பாடுகளிலும் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டு அதன் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனத்தின் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது கடற்படையினரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவன்கார்ட் நிறுவனத்தின் செயற்பாடுகளை மாலைதீவில் இருந்து தொடர்வதற்கு அதன் தலைவர் நிஸங்க சேனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்காக மாலைதீவு அரசாங்கத்துடனான இராஜதந்திர தொடர்புகளுக்கு அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவரும் அவருக்கு உதவிகள் செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (இ)

## யாழில் 109மில்.ரூபா செலவில் பல்வேறு வீட்டுத்திட்ட உதவிகள்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் சமட்ட சேவா வீட்டுத்திட்டத்தின் கீழ் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 109.275 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வீட்டுத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய வீடமைப்பு அதிகார சபையால்பல்வேறுவேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில்யாழ்.மாவட்டத்தில் புதிய வீடு நிர்மாணித்தல் மற்றும் வீடு புனரமைத்தலுக்கான கடன்களும் வீடு கட்டுவதற்கு மானிய அடிப்படையிலான சீமெந்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

புதிய வீடு நிர்மாணித்தலுக்காக 73.500 மில்லியன் ரூபா செலவில் ஆயிரத்து 3 பேருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வீடு புனரமைப்பு பணி மேற்கொள்வதற்காக 25.775 மில்லியன் ரூபாய் செலவில் 343 பயனாளிகளுக்கு தலா 75 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீடு புனரமைப்பு பணிக்கென 10 ஆயிரம் மில்லியன் ரூபாய் செலவில் ஆயிரத்து 226 பயனாளிகளுக்கு தலா 8 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியுடையசீமெந்து பைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று பிரிவின்கீழும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 94 பயனாளிகளும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் 102 பயனாளிகளும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 163 பயனாளிகளும் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 139 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 185 பேரும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 148 பேரும் சங்காணை பிரதேச செயலர் பிரி வில் 159 பேரும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 178 பேரும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 256 பேரும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 132 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 314 பேரும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 261பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 124 பேரும்மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 82 பேரும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 235 பேரும் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்தில் 90 வீதமான வேலைகள் பூர்த்திடைந்துள்ளதையும் மிகுதி வேலைகள் அடுத்த வருட முற்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஹிருணிகா மிரட்டினார்



ஹிருணிகா பிரேமச்சந்திரவின் ஆதரவாளர்களால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இளைஞன், ஹிருணிகாவால் நேரடியாகவே மிரட்டப்பட்டதாகத் தெரிவித்துள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

டிபெண்டர் வாகனத்தில் வைத்து, ஹிருணிகாவின் ஆதரவாளர்கள் அறுவரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இவ்விளைஞன், 26 வயதான யு. பிரியங்கர எனவும் ஆடைத தொழிற்சாலையொன்றின் ஊழியர் எனவும் அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இவ்விளைஞன், கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணியளவில, தெமட்டகொடை பொலிஸ் நிலையத்துக்கு, வெளிக்காயங்களுடன் சென்றுள்ளார். கடத்தப்பட்ட தான், அடையாளந்தெரியாத இடமொன்றுக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு வைத்து ஹிருண்காவால் மிரட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தனது நெருங்கிய ஆதரவாளரொருவரின் மனைவியோடு கொண்டுள்ள உறவை நிறுத்துமாறே, அவர் மிரட்டியதாக, அவ்விளைஞன் தெரிவித்துள்ளார். எனினும், ஹிருணிகாவைச் சந்திப்பதற்கு முன்னதாகவா அல்லது அதன் பின்னரா, அவ்விளைஞன் தாக்கப்பட்டான் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 62-1859 என்ற இலக்கத்தைக்கொண்ட டிபெண்டர் ரக வாகனத்தை, பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இளைஞன், ஆபத்தான நிலையில் இல்லை என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு சொந்தமான டிபெண்டர் ரக வாகனத்தில் வந்து ஆறுபேர் கொண்ட குழுவினரே, தெமட்டகொடையில் வைத்து, கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30க்கு அவ்விளைஞனைக் கடத்தியுள்ளனர்.

அவ்விளைஞன், செவனகல பகுதியைச் சேர்ந்தவன் என்பதுடன் தொழில்நிமிர்த்தமாக அவர், கொலன்னாவை பகுதியில் தற்காலிகமாக தங்கியுள்ளார். (இ)

## அனுமதிப் பத்திரம் தொடர்பில் சர்ச்சை

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு வாகன அனுமதிபத்திரம் வழங்கப்படும் என கூறப் படுகின்ற சம்பவம் தொடர்பில் தற்போது சர்ச்சை தோன்றியுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறைபாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங் கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

எனினும். வாகன அனுமதி பத்திரம் வழங்கப்படுகின்றமை தொடர்பில் இதுவரை தீர்மான மொன்று எட்டப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாஸிம் தெரிவித்தார்.

வாகன அனுமதிப்பத்திரம் இம்முறை வரவு செலவுத்திட்டத் தில் அகற்றப்பட்டமையை அடுத்தே இந்த சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

வாகன அனுமதிப்பத்திரம் இர த்து செய்யப்பட்டமைக்கு எதிராக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தது.

வாகன அனுமதிப்பத்திரம் உள் ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரச வைதத்திய அதிகாரிகள் சங்கம் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்திருநதது.

அதனைத் தொடர்ந்து அரச ஊழியர்களுக்கு 10 வருடங்களுக்கு ஒருமுறை வாகன அனுமதிப் பத்திரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நேபாளத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 5சிறுமிகள் மீட்பு

நேபாளத்தில் இருந்து இலங் கைக்கு கடத்தப்படவிருந்த ஐந்து சிறுமிகள் மீட்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். தெ ஹிமாலயன் டைம்ஸ் இதனை தெரிவித்துள்ளது.

குறித்த சிறுமிகள் ஐவரும் இந்தி யா ஊடாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்படுவதற்காக இவர்கள் நேபாளத்தின் தலைநகரில் இருந்து மஹேந்திர நகருக்கு அழைத்துவரப் பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் சிறுமிகளுடன் இருந்த இருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ)

## மின்கம்பத்தில் மோதி மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் சுழிபுரத்தைச் சேர்ந்த சண்முகநாதன் தனானன் (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் பயணித்துள்ளதாகவும் அதில் பின்னால் இருந்து பயணம்செய்த இளைஞரே படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞர் எவ்வித காயங்களுமின்றித் தப்பித்துள்ளார் எனவும் தெரியவந்தது. (இ-5-30)

## தேசிய வாசிப்பு மாத விருது வழங்கும் விழா

### கொக்குவில் பொதுநூலகம் விருதுக்கு தெரிவு

தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழா-2015 டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் கொழும்பு 7 தேசிய சுவடிகள் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

2014 ஆம் ஆண்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சியில் சிறப்பாக ஈடுபட் மைக்காக இவ்வருட தேசிய வாசிப்பு மாத தேசிய விழாவில் கொக்குவில் பொது நூலகம் விருது வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

# வட மாகாண கல்வி அமைச்சினால் பல்கலை மாணவர்களுக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட மாகாண கல்வி அமைச்சினால் வருடாந்தம் வழங்கப்படும் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிதி உதவியைப் பெறும் மாணவர்களது பெயர் விபரங்கள் அறிவிக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் அலுவலக நேரத்தில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் அலுவலகத்தில் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தை சமர்ப்பித்து காசோலைகளை பெற்றுக் கொள்ளும் படி கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். மாணவர்களின பெயர் விபரங்கள் வருமாறு...

**Eastern University**

Miss.Pavitha Balachchandran
Miss.Sriskantharasa Kirusha
Miss.Sajeevana Kanakarasa
Miss.Kovintharaj Koneswary
Miss.Kowshika Periyasamy
Mr.Magenthirarasa Pushpasanth
Mr.Kanthaiya Thayalan
Mr.Tharmarasa Laxshan
Miss.Saraniya Sivabalasubramaniyam
Mr.Selvaratnam Rajinthan
Miss.Vinoja Tharmalingam
Mrs.Navaneethan Kirisha
Mr.Rasanayagam Emilraj
Mr.Kannaiyan Joyal
Mr.Gunaratnam Ketheeswaran
Miss.Tharshana Ramachchandran
Miss.Nurudjala Parameswaran
Miss.Rishanthini Somasundram
Miss.Juvavathany Sachchithanantham
Mr.Rasenthiram Ajanthan
Mr.Balasingam Senthushan
Miss.Suvethaki Arumainayagam
Miss.Angelin Kamadchi Suntharam
Mr.Sivanathan Kajenthiran
Miss.Premaja Sivanesan
Miss.Eelaamala Panchalingam
Mr.Alagesan Santhirakumar
Miss.Sathiachelvi Arumugam
Miss.Tharshini Jeyalingam
Miss.Gilany Inthirakumar
Miss.Tharmathevi Joseph
Miss.Saranya Thavarasa
Mr.Kunasegaram Kobitharan
Miss.Sivaakila Rasaijah
Mr.Kanapathy Ragulan
Mr.Yokanathan Jaken
Miss.Vigi Kathirkamaththamby
Miss.Lakshika Pakkiyanathan
Miss.Thivya Kanakalingam
Miss.Thuvarathy Iyaththurai
Miss.Jinthuka Pushpanathan
Mr.Thirunavukkarasu Viyasan
Miss.Kugapriya Thiyagarasa
Miss.Prathajini Suntharalingam
Miss.Lingeswary Mathavan
Miss.Shobika Ramachchandran

**Rajarata University**

Miss.Bamini Thevarasa
Mr.Abthul Raheem Mahamed Aslam
Mr.Puvanenthirarasa Thavakumar

**Sabaragamuwa University**

Mr.Balasubramaniyam Pavithan
Miss.Amirthalingam Anoja
Miss.Keerthika Sivalingam
Miss.Surenthini Muniyan
Miss.Prasala Sivasubramaniam
Miss.Kobika Atputhalingam
Miss.Praveena Rasathurai
Miss.Shanthiramathy Perumal
Mr.Yogarasa Karikalan
Mr.Kamalenthiran Kaviyarashan
Mr.Balasingam Dilakshan
Mr.Sivasubramaniam Sivatharshan

**South Eastern University**

Mr.Sanmugam Sivalokan
Miss.Keerththana Thangavadivel
Miss.Vanitha Ellansingam
Miss.Lavanja Anton Rednarasa
Mr.Sithamparappillai Niroshan
Mr.Gnanasegaram Pushpalingam
Mr.Sothilingam Thuvaragan
Miss.Keshala Suntharampillai
Miss.Fathima Roohi Gowthu
Miss.Yakitha Sivakumar
Mr.Kanapathy Langeswaran
Miss.Rokshayini Jesurasa
Mr.Ravichchandran Logeswaran
Miss.Kamalini Nadarasa
Mr.Thangarasa Gowthaman
Miss.Tharshika Mahenthiran
Miss.Komina Kumarasamy
Miss.Thanushanthy Yogarasa
Miss.Shiyanthini Selvanayagam
Miss.Vanathy Thangavel
Miss.Saranya Thaventhirarajah
Mr.Vijayasinga Sajeevan
Miss.Niroja Niththiyananthan
Mr.Kanesharasa Nitharshan

**University of Colombo**

Miss.Kokila Ponnurasa
Miss.Gayathri Kanagaratnam
Miss.Kirushanthi Thiyagarasa

**University of Kelaniya**

Mr.Krishnakumar Thusyanthan
Mr.Thevashakayam Jenistan
Miss.Malarvily Sakthivel

University of Moratuwa

Mr.Srithanantharaja Manoj
Mr.Arulrasa Kiriyangan
Miss.Ekshipa Ganeshan
Mr.Suntharalingam Aksharan
Mr.Kathirkamarajah Pratheep

**University of Peradeniya**

Miss.Eliliny Suthanantharasa
Mr.Kaneshalingam Nijanthan
Mr.Kumarasamy Kunatheepan
Mr.Thevathasan Thelaxsan
Mr.Mahalingam Nelsan Prasath
Miss.Prinshiya Thambirasa
Miss.Sumitha Selvarasa
Miss.Selvalogini Selvanayagam
Miss.Akitha Nageswaran
Miss.Prashanthy Thiruchchelvam
Miss.Viththiya Sivanantham
Mr.Thevarasa Kajeeban
Miss.Jeshintha Nelson
Miss.Raniththa Rasenthiram
Mr.Ananthan Pushparasa
Miss.Pamathy Nagarajan
Miss.Sharmila Sanmuganathan
Mr.Nagarasa Sajiprasanth
Mr.Velummylum Thuwaragan
Miss.Sasipriya Ketheeswaran
Miss.Mithunna Gunasegaram
Mr.Nimalarasa Niroshan
Miss.Mathusha Sivanesan
Mr.Ratnam Theeparaja
Miss.Tharmini Thanabalasingam
Mr.Kirubainayakam Thirosan
Miss.Hamshalini Rasenthiran
Miss.Bakeerathy Thavarasa
Mr.Muththukkumar Kathirkamaththamby
Mr.Tharmarasa Tharan
Mr.Selvachchandran Nirojan
Miss.Valarmathy Kathiravelu
Miss.Sumathy Selvarasa
Mr.Thavanayagam Bartheepan
Miss.Dinusa Saliny Emilianuspillai
Miss.Silojini Sivarasa

**University of Ruhunu**

Miss.Subashini Santhirakumar
mr.Kulendran Anujan

**University of Sri Jayewar denapura**

Miss Tharmalingam Tharnika
Mr.Ramachandran Thanushan
Mr.Jeyaramu Pakeerathan
Mr.Balakrishnan Jathavabalan
Miss.Subajini Balakrishnan
Miss.Thuvaraga Ananatharasa
Miss.Yogananthini Krishnan
Miss.Sayanthiny Navaradnarajah
Mr.Thamakulasingam Vinoth
Mr.Thangarasa Keethan
Mr.Rasasegar Nirojan
Miss.Mery Piula Ganeshan
Miss.Pratha Thei vendram
Mr.Murukananthan Ramanan
Mr.Sakthivel Dil anraj

**Uva Wellasa University**

Miss.Yokalya Iya ththurai

**Wayamba University**

Mr.Karthikesu Arashilankumaran
Miss.Janoya San mugarasa


வலிகாமம் தெற்கு பிரதேச சபை
වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

My No: NP/14/41(15)03/Tender/2016 Date : 2015-12-23

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்**
**2016ம் ஆண்டுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகள், முட்டைக்கடை, பொது மலசலகூடம் என்பவற்றை 01-01-2016 தொடக்கம் 31-12-2016-ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்திப் பற்றுச்சீட்டை 28-12-2015 தொடக்கம் 29-12-2015 காலை 9.30 மணி வரை பெற்றுக்கொள்ளவும்.

| தொ. இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்பு | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | |
| 1 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1000.00 | 10000.00 | 250.00 |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை -02 | 750.00 | 7500.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல -07 | 750.00 | 7500.00 | 250.00 |
| 4 | முட்டைக்கடை இல - 04 | 750.00 | 7500.00 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | 250.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | |

1. காலம் - 29-12-2015 காலை 10.00 மணி
2. இடம் - சுன்னாகம் உப அலுவலகம்

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை 2015-11-12ம் திகதிய உதயன், தினக்குரல்,வலம்புரி பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

**திரு. தியாகராசா தியாகச்சந்திரன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(C-3093)



**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின்**

**கண்ணீர் அஞ்சலி**



**எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும், பழைய மாணவரும், நம்பிக்கை நிதியத்தின் தலைவருமாகிய**

**திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களின் அன்புப் பாரியார்**

**அமரர்**
**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு,
எமது கல்லூரியின் கண்ணீரஞ்சலியைக்
காணிக்கையாக்குவதோடு,
அன்னாரின் பிரிவால் துயருறும் உறவுகளுடன்
நாமும் துயரினைப் பகிர்ந்து அமரர் அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3095)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்**



**வலம்புரி**
விளம்பரத்
தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

# வாகன இறக்குமதியில் இனி புதிய நடைமுறைகள்

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்யும் போது அனைத்து உதிரிப் பாகங்களையும் உள்ளடக்கிய வாகனங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன் போது குறித்த வாகன உற்பத்தி நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்ற விலைப் பட்டியலையே வாகன கொள்வனவாளர்கள் முன்வைக்க வேண்டும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தனியார் துறையினருக்கு அடுத்த வருடத்தில் இருந்து 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளதாகவும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 10 ஆயிரம் கொடுப்பனவில் முதல் கட்டமாக 2 ஆயிரத்து 500 ரூபாவினை அவர்களது அடிப்படை சம்பளத்துடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஏழு வருடத்துக்கு பின்னர் அடிப்படை வேதனத்துக்கு அதிக தொகையான சம்பளம் இணைக்கப்பட்டமை இதுவே முதன் முறையாகும். இதுவரையில் அரசாங்கத்தின். சொத்து 76 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதனை 100 பில்லியன் வரை உயர்த்த வேண்டிய தேவை உண்டு. இன்றேல் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அரச வருமானத்தில் 43 வீதம் ஓய்வூதியத்திற்கும், ஊழியர்களின் சம்பள கொடுப்பனவிற்கும். கடன் மற்றும் வட்டிக்காக வேண்டி 58 வீதமும் செலவிடப்படுகின்றது.

மீதமானவைகளை செய்ய வேண்டியது கடன் மூலமாகவே என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதத்துக்காக வேண்டி முன்னொரு போதும் இல்லாதது போன்று நேரம் வழங்கப்பட்டதாகவும், அவ்வாறான சமூக கருத்துக்களுக்கு இடமளிக்கப்பட்டதாகவும் மற்றும் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இவ் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# அறநெறி மாணவர்களின் திறன் மதிப்பீட்டுப் போட்டி

நாட்டிலுள்ள சகல அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குமான இவ்வாண்டுக்கான திறன் மதிப்பீட்டுப் போட்டி நாளை 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நாளை 25 ஆம் திகதியன்று அனைத்து போட்டியாளர்களுக்குமான பதிவுகள் இடம்பெற்ற பின்னர் மறு நாளான 26 ஆம் திகதி அனைத்து போட்டிகளும் இடம்பெறும். நடைபெறவுள்ள போட்டியினைத் தொடர்ந்து வெற்றி பெறுபவர்களுக்கான பரிசுகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் நடைபெறும். 22 மாவட்டங்களிலிருந்தும் சுமார் 792 மாணவர்கள் பங்கு கொள்ளவுள்ள இப் போட்டி நிகழ்வில் 36 வகையான விதவிதமான போட்டிகள் நடைபெறவுள்ளன.

களனி பல்கலைக்கழகத்தின் வேந்தரும் அகில இலங்கை அறநெறி கழக தலைவருமான அதி வணக் கத்துக்குரிய வலமிட்டியாவே குசல தம்ம தேரர், அகில இலங்கை அறநெறி கழக செயலாளர் வணக்கத்துக் குரிய கொனே டுவ குணாநந்த தேரர், நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சின் செயலாளர் வசந்த ஏக்கநாயக்க மற்றும் பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் சந் திரப்பெரும கமகே எனப்பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)


**டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி**

பழைய பொலித்தீன் மற்றும் பழைய பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்.

TP: 021 222 8680, 077 592 5088

(சி-3042)



**ஈழத்துச் சிதம்பர தரிசனம்**

திண்ணபுர சுந்தரேசா சரணம்

கோவை தந்த வாசகர்க்குக்
குருந்தின் அடியிற் குருவாகிச்
சாவையறுக்கும் பேரின்ப
சாரம் பொழிந்த தனி முதலே
நாவை அசைத்துன் புகழ்பாட
நயந்து வியந்துன் அடி அடைந்தேன்
தேவை அறிந்து வரம் தருவாய்
திண்ணபுரத்து பதியின் சுந்தரனே

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தம்

இன்று 24.12.2015 8 ஆவது திருவெம்பா தரிசனம்

சி-3031



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:56<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:HNDA, M.COM/ அரசதொழில்<br>தொ.இ: B/3579 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/3874 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:- கார்த்திகை<br>கி.பா: 41<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:NCT/அரசதொழில்<br>தொ.இ: B/3580 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 54<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.COM/அரசதொழில்<br>தொ.இ: G/3877 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3582 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 62 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:DIPLOMA<br>தொ.இ: G/3879 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:- உத்தராடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/3594 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 32 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/3884 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

24.12.2015
(மார்கழி 08, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு,
சதுர்த்தசி மாலை 6.33 மணிவரை
ரோகிணி பிற்பகல் 1.42 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம்<br>இரவு 12.50 இற்கு<br>மிது-சந் | | |
| சூரி புத | சனி | சுக் | குரு ராகு செவ் |

**மீனம்**
உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**மேடம்**
நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்**
குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் செய்து முடிப்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவான நாள், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம்.

**கும்பம்**
எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**
அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்**
செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**சிம்மம்**
தொட்ட காரியம் துளிர்விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

**தனுசு**
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உடல்நலம் சீராகும்.

**விருச்சிகம்**
வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**துலாம்**
பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புது முயற்சிகளில் சிறு தடைகள் தாமதங்கள் ஏற்படலாம், வரவும் செலவும் சமமாகும்.

**கன்னி**
பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

# ஜனாதிபதியின் வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால் பாரியளவில் அறவழிப்போராட்டம் முன்னெடுக்கப்படும்

## மயிலிட்டி மக்கள் எச்சரிக்கை

**ஜனாதிபதி அளித்த வாக்குறுதியின்படி குறித்த கால எல்லைக்குள் எம்மை மயிலிட்டி மண்ணில் மீள்குடியேற்றம் செய்யாமல் இழுத்தடிப்பு செய்தால் பாரிய அறவழிப் போராட்டத்தை முன்னெடுப்போம் என மயிலிட்டி மக்கள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக அவர்கள் அனுப பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் பொறுத்தோம். பின்பு 100 நாட்கள் ஆட்சியிலும் ஒருவருட ஆட்சியிலும் வாக்குறுதிகளை நம்பிக்காத்திருக்கிறோம்.

மீன்பிடி விவசாயத்தில் நாட்டிற்கு முக்கிய பங்கு வகித்த எமது மயிலிட்டி ஊரின் மீள்குடியேற்றம் பற்றி எவ்வித நடவடிக்கையும் இல்லாது தற்போது நாம் வாழ்ந்த மணணில் உள்ள வணக்கஸ்தலங்கள, பாடசாலைகள், தொழிற்சாலைகள். வீடுகள் என்பவற்றை இடித்து நிர்மூலமாக்கி ஆடம்பரமாளிகைகள் உருவாக்கப்பட்டு வருகின்றமையை வன்மையாக எதிர்ப்பதுடன் எம்மை எம் மண்ணில் எந்தவித நிபந்தனைகளையும் விதிக்காது எமது சொந்த உறுதி, உரித்துள்ள பரம்பரைக் காணிகளை எம்மிடம் ஒப்படைத்து எம்மை குடியேற்றம் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

26 வருடங்கள் நாம் பெற்ற துன்பம் போதும். எம் பிள்ளைகளும் அகதிகள் அதுவும் சொந்த நாட்டு அகதிகள் என்ற பெயருடன் எல்லோராலும் ஏளனமாகவும் கல்வி, வாழ்க்கையைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலையும் (ஊர் மாறுவது, வீடு மாறுவது), தொடரக் கூடாது என்பதையும் உரியவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பாதுகாப்பு காரணங்கள் என்ற போலிச்சாட்டை விடுத்த 1999.06.15 வரை நாம் ஊரில் இருந்த போது பாதுகாப்பாக இருந்த படைத்தளங்கள் இடம் பெயர்ந்து மீண்டும் மீள்குடியேறவரும் பொழுது மட்டும் பாதுகாப்பில்லை என்பது நகைப்புக்கிடமாக தெரிகிறது.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஒரு முடிவு கிடைக்காவிடில் உண்ணா நோன்பு மூலமாக உயிர் துறப்பு போராட்டத்துக்கு தயாராக இருக்கிறோம் என்பதை வேதனையுடனும் உறுதியுடனும்தெரிவித்துக் கொண்டு 2010 ஆம் ஆண்டில் எடுத்த கணக்கெடுப்பின்படி மயிலிட்டி வடக்கு ஜே/246 பிரிவில் 900 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 279 பேரும். மயிலிட்டி தெற்கு ஜே/248 பிரிவில் 300 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 100 குடும்பங்களும், மயிலிட்டி வடக்கு ஜே/251 பிரிவில் 527 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 பேரும் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வேதனையுடன் மீள் குடியேறுவதற்காக காத்திருக்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு நாடுகளில் வசிப்பவர்கள் அ.குணபாலசிங்கம் (077 314 4883), டா.ஜெயம் (077 869 0302) என்ற தொலைபேசி இலககங்களுடாக தொடர்பு கொண்டு குடும்ப விபரங்களையும் தற்காலிக விலாசத்தையும் தந்துதவுமாறு இடம்பெயர்ந்த மயிலிட்டி குடியேற்றக் குழு நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ-9)




## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் தொழிற்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும் கடந்த திங்கட்கிழமை இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆறுமாதகால தொழிற்பயிற்சி நெறியைப்பூர்த்தி செய்த 250 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இப் பயிற்சி நெறியில் சிகை அலங்காரம், ஒப்பனை, உடை தயாரித்தல், கேக் வடிவமைத்தல் மற்றும் சிங்கள மொழி கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொண்டதுடன் நிகழ்வுக்கான வரவேற்புரையை வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கனகேஸ்வரன் நிகழ்த்தியிருந்தார். (இ-9)

## இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டுள்ளது

(காரைநகர்)

காரைநகர் சைவ மகா சபை யின். இடைக்கால நிர்வாக சபை கடந்த சனிக்கிழமை உருவாக்கப் பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி தலைமை யில் நடைபெற்ற தெரிவுக் குழுக் கூட்டத்தில்காரைநகர் சைவ மகா சபையின் தலைவராக ப.நந்தகுமார், செயலாளரா்க சிவசிறி தண்டாயுதபாணி சோமசுந்தரக் குருக்கள், பொருளாளராக க.பாலச்சந்திரன், உறுப்பினர்களாக இ.ஜெயராமன், செ.சிற்சபேசன், எஸ்.சண்முகம், பொ.ஆறுமுகம், அம்பலவாணர், பா.நாகேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் சபையின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி தைப்பூச தினத்தில் காலை9.30 மணிக்கு காரைநகர் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இச்சபையின்பழைய உறுப்பினர்கள் மற்றும் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் காரைநகர் பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தர் த.சிறீஸ் கந்தராஜாவை தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என காரைநகர் சைவ மகாசபையினர் அறிவித்துள்ளனர். (இ-9)

## திறந்த போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2) எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பரீட்சை நகரங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்துடன் அல்லது 02122 9981 என்ற தொலைபேசி இலக்க ங்களுடன்தொடர்பு கொள்ளுமாறு வட மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுச் செய லாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ-5)

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


HNDA, HNDM,HNDIT, HND in English, HNDE, HND THM ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை 2016 ஆம் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு உயர் தொழில் நுட்பவியல் நிறுவன உதவிப்பதி வாளர்யோரிசாந்தன்அறிவித்துள்ளார்.

இலங்கை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனமானது உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.


மேலதிக் விபரங்களுக்கு WWW. Sliate.ac.lk என்ற இணையத்தளத்தை பார்வையிட முடியும். (இ-5)





இணுவையூர் ரசிகப்பிரியா சபாகலை வளர்ச்சி மையத்தின்அனுசரணையுடன் பாரிஸ்சிறியின் திருக்குறள் இறுவெட்டு வெளியீட்டு விழா இணுவில் சிவகாமி அம்மன் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இணுவையூர் வி.கே.குகானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

# பாண்டவர் பூமியில் ஸ்ரீ கிருஷ்ணர் தமிழர் பூமியில் விக்னேஸ்வரன்



ஈழம் இதுவரை கண்டு வந்த பெரும் ஜனநாயக அரசியல் தலைவர்களில் ஒருவர் ஈழத்துக் காந்தியென வர்ணிக்கப்படும் தந்தை செல்வநாயகம் இவர் அமரராகி விட்டார். மற்றையவர் 2013 ஆம் ஆண்டு வடமாகாண சபை தேர்தல் மூலம் அரசியலில் அறிமுகமாகி வெற்றி பெற்ற மதிப்புக்குரிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவார்.

இவர்கள் இருவரிலும் ஒரு ஒற்றுமையுள்ளது. இருவருமே இறைவனை நம்பி இறை நம்பிக்கையில் வாழ்பவர்கள். அதனால்தான் பிற தலைவர்களை விட மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவர்களாக இருந்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில் முதல்வர் விக்னேஸ்வரன் குறுகிய காலத்திலேயே மக்கள் மனதில் இடம் பெற்ற ஒரு புனிதமான தீர்க்க தரிசனமான அரசியல் தலைவர் எனலாம்.

முதல்வர் விக்னேஸ்வரன் ஈழ தேசத்தினுடைய ஒரு கறைபடியாத கண்ணாடி. அதில் தமிழர்களின் எதிர்கால அரசியல் தீர்வு மிக பிரகாசமாய்த் தெரிகின்றது. அவர் பார்வையில் புனிதமிருக்கிறது. வார்த்தையில் தர்மம் இருக்கிறது. செயலில் வீரம் இருக்கிறது. அவர் பாதையையேற்று தமிழர்கள் ஒரு அணியாய் பயணித்தால் நிச்சயம் தமிழ் இனத்துக்கு இன்னலற்ற விடுதலை இருக்கிறது.

ஒரு தேசத்தில் பல தலைவர்கள் தன்னிச்சையாகவே உருவாகின்றார்கள். சில தலைவர்கள் தேசத்தின் புதிய மறுமலர்ச்சிக்காக இறைவனால் உருவாக்கப்படுகின்றார்கள். ஏனெனில் இந்த உலகத்தின் இயக்கமும் ஒவ்வொரு மனிதர்களின் நகர்வுகளும் இறைவனால்தான் தீர்மானிக்கப்படுகின்றது. இதை மாற்றும் சக்தி எவருக்கும் இல்லை. அந்த இறை தீர்மானத்தின் பிரகாரம் உருவான ஒருவரே முதல்வர் விக்னேஸ்வரன் என்றால் அது மிகையாகாது.

எந்த அரசியல் பின்புலமும் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய உயர்பீடத்தின் அழைப்பையேற்று 2013 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்த பிரதம நீதியரசரான விக்னேஸ்வரன் வடமாகாண சபை தேர்தல் மூலம் 1 இலட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகளை பெற்று முதலமைச்சர் விக்னேஸ்வரனாக தன் அதிகாரத்தை பெற்றுக் கொண்டார். அவர் பெற்ற விருப்பு வாக்குகளே அவர் இறை மனிதர் என்பதை ஈழத் தேசத்திற்கு பறைசாற்றுகின்றது.

அரசியல் மேடை ஒரு அரசியல்வாதியின் தனிப்பட்ட சுயநலங்களுக்கான மேடை கிடையாது. அது சுயநலத்தை முற்றும் துறந்த பொதுநலப் பாதையில் தன் ஆயுள் வரை பயணிக்கும் தியாக உணர்வுடன் கூடிய தர்ம மேடையாகும். அதில் சிவன்தான் குடிகொள்ள வேண்டுமே தவிர சனி குடிகொள்ளக் கூடாது. அப்படி குடிகொண்டால் அது ஓர் இருண்ட வாழ்க்கைக்குள் ஒடுக்கப்பட்ட தேசத்தினுடைய மக்களை மூழ்கடித்து விடும். இனி ஈழத்தில் சிவன் குடிகொள்ளும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் மெதுவாக துளிர்விட ஆரம்பித்திருக்கின்றது. விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வரனின் அரசியல் பிரவேசமே இதற்கு காரணம்.

விமர்சனகால் மட்டும் இறைவனிட்ட அரசியல் விதிகளையும், அதற்காக அனுப்பப்பட்ட இறை மனிதர்களையும் மக்கள் சேவையில் இருந்து புறக்கணித்துவிட முடியாது.நல்ல கர்மங்களை செயற்படுத்த நினைக்கும் மனிதர்களை இந்த உலகம் காலந்தோறும் விமர்சித்தே வந்துள்ளது. அந்த வகையில் முதல்வர் விக்னேஸ்வரன் மீதான விமர்சனங்களும் அப்படிப்பட்டதே. காலத்தின் பதிவில் இல்லாதவர்கள் காலத்தின் பதிவிலுள்ள முதல்வரை உதாசீனம் செய்வது மிகவும் நகைப்புக்குரிய செயலாகும்.

தவத்தால் மேம்பட்ட இறை மனிதர்கள் மக்களின் நலனில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்போது ஆமையின் வேகத்தால்தான் செயற் படுவார்கள். முயலின் வேகத்தில் அல்ல.

சிறந்த இராஜதந்திரியான ஸ்ரீகிருஸ்ணர் மகாபாரதத்தில் தன் நகர்வுகளை மெதுவாகவே ஆரம் பித்தார். அதனால்தான் பாண்டவர்கள் தங்களுடைய வெற்றிக் கனியை மிக எளிதாக பறிக்க முடிந்தது. இல்லையெனில் பீஷ்மர், துரோணர், கர்ணன் போன்ற பெரும் வீரர்களின் அதி சக்தி வாய்ந்த அஸ்திரங்களுக்கு பாண்டவர்கள் அனைவரும் பலியா கியிருப்பார்கள். ஸ்ரீகிருஸ்ணரின் விவேகம் கூடிய தலைமைத்துவமே படைபலம் இழந்த தமிழர்களுக்கு தற்போது தேவைப்படுகின்றது. அந்த தலைமைப் பண்புகள் முழுவதும் முதல்வர் விக்னேஸ்வரனிடம் பரிபூரணமாய் அமைந்துள்ளது.

பாண்டவர் பூமியில் ஸ்ரீ கிருஸ்ணர் தமிழர் பூமியில் முதல்வர் விக்னேஸ்வரன். இதுவே தமிழர்களுக்கு இறைவனிட்ட தீர்ப்பென்றால் அதை தமிழ் இனம் முழுவதும் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

சாம்-ரமேஸ்குமார்









கோப்பாய் தெற்கு இருபாலையில் அமைந்துள்ள மதுரம் கிட்ஸ் முன்பள்ளியின் மாணவர் கௌரவிப்பும் கலை விழாவும் தலைவர் எஸ்.கே கிருபாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

# வாகன விபத்துக்களில் கொல்லப்படும் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வெளியிடங்களில் விற்பனை



(மல்லாவி)

ஏ-9 வீதியில் இடம்பெறும் வாகன விபத்துக்களின் போது கொல்லப்புடும் கால்நடைகளை பொது சுகாதார பரிசோதகரின் சிபார்சு இன்றி இறைச்சியாக்கி, யாழ்ப்பாணம் உட்பட பல மாவட்டங்களுக்கும் காட்டு விலங்கு களான மான், மரை ஆகியவற்றின் இறைச்சியென கூறி விற்பனை செய்யும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. அதனை வாங்கி சமைத்து உண்ணும் மக்கள் நோய்த் தாக்கத்திற்குள்ளாகுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதுதொடர்பில்தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியில் ஓமந்தையில் இருந்து இயக்கச்சி-பளை வரையிலான வீதியில் கட்டாக் காலியாகத் திரியும் கால்நடைகள் அடிக்கடி இடம்பெறும் வாகன விபத் துக்களின் போது கொல்லப்படுகின் றன.

விபத்து இடம்பெற்ற இடத்தில் பொலிஸாரின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் கால்நடைகளின் உரிமையாளர்களிடம் கொல்லப்பட்ட கால்நடைகளைப் புதைக்கும்படி பொலிஸார் கூறிவிட்டுச் செல்கின்றனர். ஆனால் உரிமையாளர்கள் அதனைப் புதைக்காது சிலருக்கு குறைந்த பணத்திற்கு விற்று விடுகின்றனர்.

அதனை வாங்குபவர்கள் இறைச்சியாக்கி வற்றலாகவும் இறைச்சியாகவும் யாழ்ப்பாணம் உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு மான், மரை இறைச்சியெனக் கூறி பல ஆயிரம் ரூபாய்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறான நிலையில் நோய் வாய்ப்பட்ட கால்நடைகளின் இறைச்சியும் பொது சுகா தார பரிசோதகர்களின் சிபார்சு இன்றி விற்பனை செய்யப்படுவதால் இதனை வாங்கி சமைத்து உண்ணும் மக்களின் உடலில் கொப்புளங்கள் ஏற்படுவதாகவும் ஒருவகை தோல் நோய்களுக்கும் ஆளாகுவதாகவும் கூறுகின்றனர்.

எனவே இவ்வாறான சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தண்டிக்கப்படுவதுடன் எதிர்வரும் காலங்களில் இது போன்ற நடவடிக்கைகள் இடம்பெறாது இருக்க விபத்துக்கள் நடைபெறும் இடங்களுக்கு பொலி ஸாரும் மற்றும் பொதுசுகாதார பரிசோத கர்களும் சமுகமளித்து விசாரணைகளின் பின்னர் கொல்லப்பட்ட கால்நடைகள் புதைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)

# வவுனியாவில் நூல் வெளியீடு

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிடும், கவிஞர் நந்தா எழுதிய "நிலவே நீ சொல்" கவிதைத் தொகுப்பு, நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை, முற்பகல் 10 மணிக்கு, வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில், கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-29)




# நிதிமோசடியில் ஈடுபட்ட நபர் 5 வருடங்களின் பின் கைது

(பனிக்கன்குளம்)

வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்புவதாக தெரிவித்து மக்களை ஏமாற்றி பல இலட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட கிளிநொச்சி பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் 5 வருடங்களின் பின் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார். மன்னார் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 6 பேர் உட்பட பலரை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக தெரிவித்து கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் குறித்த நபர் பணத்தை பெற்றுள்ளார்.

குறித்த நபர் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் பேசாலை கிராமத்திற்குச் சென்று, மக்களிடம் சில மாதங்களாக நட்புறவை ஏற்படுத்திய நிலையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக 5 இலட்சம் ரூபா வீதம் 6 பேரிடம் 30 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதோடு,

மேலும் ஒரு பெண்ணிடம் சுமார் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் தலைமறைவாகியுள்ளனர்.


இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குறித்த 7 பேரும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் தலைமன்னார் பொலிஸாரும், பாதிக்கப்பட்டவர்களும் ஏமாற்றிய நபரையும் அவரது குடும்பத்தினரையும் தேடி வந்தனர்.

குறித்த நபர் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்த நிலையில் ஏற்கனவே குறித்த நபர் தொடர்பில் நிதி மோசடி தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த பிறிதொரு வழக்கு விசாரணைகளிற்காக, நீதிமன்றம் விடுத்த பிடியாணைக்கு அமைவாக குறித்த நபர் இலங்கை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த பண விசாரணைகள் கடந்த 21ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த நபர் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புதல், காணாமல் போனவர்களை கண்டு பிடித்து தருதல் என தெரிவித்து பல இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளை பெற்றுக் கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (2-281)

# இரசாயன பதார்த்தமற்ற கொம்போஸ்ட் கூட்டுப் பசளை மன்னாரில் விநியோகம்



(பனிக்கன்குளம்)

மன்னார் நகரசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட "மன்னார் கொம்போஸ்ட்" எனும் இயற்கை கூட்டுப் பசளையின் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட்டினால் பண்டிகைக் கால தெருவோர வியாபார நிலையத்தில் கடந்த 21 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கூட்டுப் பசளையின் விற்பனையை ஆரம்பித்து வைத்த பின் மன்னார் நகரசபையின் செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

சேகரிக்கப்படும் கழிவுகளில் இருந்து உக்கிய மற்றும் உக்காத பொருட்கள் என தரம் பிரிக்கப்பட்டு உக்கிய சேதன கழிவுகளுடன் மேலதிக சேர்மானங்களாக ஆடு, மாடு போன்ற விலங்குகளின் தோல் மற்றும் எச்சங்கள் போன்றவையும் சேர்க்கப்படுகின்றது. பசளையாக்கல் செயன்முறைக்கு கீழ் மீள்சுழற்சி செய்யப்பட்டு 3 மாத கால பதப்படுத்தலுக்குப் பின்னர் விற்பனைக்காக பொதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், இப்பசளை 100 வீத இரசாயன பதார்த்தமற்றதுடன், பக்க விளைவற்ற, பரிசீலிக்கப்பட்டு வெற்றி ஈட்டிய, நம்பகத்தன்மை வாயந்த இயற்கைப் பசளையாகும்.

இவ் உற்பத்தியானது இயற்கை சமநிலையுடன் இணைந்தவாறு பொதுமக்களின் நலன் கருதி, வீட்டுத் தோட்டங்களுக்காகவும், அழகு சாதன வளர்ப்புச் செடிகளுக்காகவும் மன்னார் நகரசபையினால் தயாரிக்கப்பட்ட அதி உன்னத தயாரிப்பாகும்.

மன்னார் கொம்போஸ்ட் பசளையினை பெற்றுக் கொள்ள ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வரை பண்டிகை கால தெருவோர வியாபார நிலையத்திலும் அதன் பின்னர் எமது நகரசபை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் இயற்கை உற்பத்திப் பொருட்களினாலான நலன்கள் பற்றிய விழிப்புணர்வை எமது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

மீள்சுழற்சியின் நடவடிக்கையினை இலகுபடுத்தும் வகையில் அவற்றை உக்கிய மற்றும் உக்காத பொருட்கள் என தனித் தனியாக சேகரித்து வழங்கி உதவ வேண்டும் என்றும் பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டார். (2-281)

# 6 ஆயிரத்து 665 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு காலபோக நெற்செய்கை

## துணுக்காய் கமநல சேவை நிலையம் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் 6 ஆயிரத்து 665 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்புட்டுள்ளதாக கமநல சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வலது கரைப்பகுதியில் 2ஆயிரத்து 14 ஏக்கர் நிலப்பரப்பிலும் துணுக்காய் பிரதேசத்தில் காணப்படும் 9 நடுத்தரக்குளங்களின் கீழ் 3 ஆயிரத்து473 ஏக்கர் நிலப்பரப்பிலும் 15 வரையான சிறிய குளங்களின் கீழ் 892 ஏக்கர் நிலப்பரப்பிலும் 286 ஏக்கர் மானாவாரிப் பயிர்ச்செய்கை நிலப்பரப்பிலுமாக மொத்தம் 6 ஆயிரத்து 665 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற் சய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வவுனிக் குளத்தின் கீழ் 2ஆயிரத்து 14 ஏக்கரும் மல்லாவிக்குளம், தேறாங்கண்டல் குளம், ஐயன்கன்குளம், மருதன் குளம், தென்னியங்குளம், கல்விளான் குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப் பெருமாள் குளம், பழையமுறிகண்டிக்குளம் ஆகிய 9 நடுத்தரக் குளங்களின் கீழ் 3ஆயிரத்து473 ஏக்கரும் முருங்கன் குளம், துணுக்காய் குளம், கரம்பைக்குளம், ஆலங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்புக்குளம், பட்டங்கட்டிக்குளம், புத்துவெட்டுவான்குளம், மணல்குளம், புதுக்குளம், கீழ்க்குளம், அனிஞ்சியன்குளம், சொக்கன்குளம், குஞ்சுக்குளம், கொல்லன்குளம் ஆகிய 15 சிறிய குளங்களின் கீழ் 892 ஏக்கரிலும் மானாவாரி நிலங்களின் கீழ் 286 ஏக்கரிலும் மேற்படி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் முல்லைத்தீவு ஒட்டு சுட்டான் முத்து விநாயகபுரத்தை சேர் ந்த தெய்வேந்திரம் முத்துலிங்கம் என்பவரின் மருத்துவ செலவுக்காக 30 ஆயிரம் ரூபா பணம் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைவர் கு.பகீரதனினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதைப்படத்தில் காணலாம்.
(படம்:-மல்லாவி செய் தியாளர்)

# ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி



உலகெங்கிலும் வாழும் தமது சகோதர முஸ்லிம்களுடன் இணைந்து இலங்கை முஸ்லிம்களும் பேருவகையுடன் கொண்டாடும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளான மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாள் ஒரு பெரும் சமய, கலாசார, நாகரிக பாரம்பரியத்தை கட்டியெழுப்புவதற்கு வழிவகுத்த, சமாதானம் மற்றும் ஐக்கியத்தின் அடிப்படையில் அமைந்த பெருமானாரின் போதனைகளின்பால் முஸ்லிம்களின் கவனத்தை பெரிதும் ஈர்ப்பதாக அமைந்துள்ளது.

இன்றைய பூகோள உலகில், பன்மைத்துவ சமூகத்திற்காக நபியவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட 'மதீனா சாசனம்' நவீன உலகின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் தரும் ஒரு முக்கிய மூலமாகவுள்ளது. அது கலாசார மற்றும் நம்பிக்கை வேறுபாடுகளின் அடிப்படையில் அமைந்த குழுக்களுக்கிடையே முரண்பாடுகளைத் தவிர்த்து, தீர்வுகளை கண்டடைவதற்கான அணுகுமுறைகளை முன்வைக்கிறது.

சமயத்தில் பலவந்தம் பிரயோகிக்கப்படுவதை இஸ்லாம் நிராகரிக்கின்றது என்பதையும் மனித இருப்பு நெடுகிலும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மிகவும் பயனுறுதி வாய்ந்த வழி மத்தியஸ்தமாகும் என்பதையும் இந்த மதீனா சாசனம் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எல்லா சமூகங்களின் மத்தியிலும் பாதுகாப்பையும் நலனோம்புகையையும் உத்தரவாதப்படுத்துவதுடன், சமூகங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கிறது.

இஸ்லாம் மனித இனத்தை சகோதரத்துவம், பரஸ்பர புரிந்துணர்வு, ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மையின் அடிப்படையிலான சரியான பாதையில் வழிகாட்ட விரும்புகிறது. இலங்கையில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் போதனைகளை பின்பற்றுகின்றவர்கள் சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தால் வளம்பெற்ற ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்ய முடியுமென நான் நம்புகிறேன். இது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை பலப்படுத்தும் என்பது எனது நம்பிக்கையாகும்.

உங்கள்எல்லோருக்கும்மகிழ்ச்சியான மீலாதுன் நபி வாழ்த்துக்கள்.

மைத்திரிபால சிறிசேன

ஜனாதிபதி.

## க.பொ.த (உ/த) பெறுபேற்றில் கிளி.தொடர்ந்தும் முதலிடத்தில்

(கிளிநொச்சி-1)

இலங்கை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ள பகுப்பாய்வின் அடிப்படையில் க.பொ.த.உயர்தரப் பெறுபேற்றின்படி கிளிநொச்சி மாவட்டம் 2013ஆம்ஆண்டிலும்2014ஆம்ஆண்டிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

பரீட்சைத் திணைக்கள பகுப்பாய்வின்படி 2013 ஆம் ஆண்டும் பெறுபேற்றில் 67.41 % சித்தியைப் பெற்று கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்திலும் 63.82 % சித்தியுடன் மன்னார் மாவட்டம் இரண்டாம் இடத்திலும் 61.99 % சித்தியுடன் வவுனியா மூன்றாம். இடத்திலும் காணப்பட்டன. முல்லைத்தீவு நான்காம் இடத்திலும் யாழ்ப்பாணம் ஒன்பதாம் இடத்திலும் உள்ளன.

இதேபோன்று அண்மையில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டு பெறுபேற்றுப் பகுப்பாய்விலும் கிளிநொச்சி மாவட்டம் 69.03 வீதத்தை பெற்று முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. வவுனியா இரண்டாம் இடத்திலும் (65.49%) காணப்பட்டது. முல்லைத்தீவு 7 ஆம் இடத்திலும் மன்னார் எட்டாம் இடத்திலும் யாழ்ப்பாணம் ஒன்பதாம் இடத்திலுமுள்ளன.

கிளிநொச்சிமாவட்டமானது77.37% சித்தியுடன் கலைப்பிரிவில் இரண்டாம் இடத்தையும் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் ஏழாம் இடத்தையும் பெற்றுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டமானதுதொடர்ந்துமுதலிடத்தைதக்கவைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (2-277)

## பாராளுமன்ற உறுப்பினருக்கான ஒருநாள் கொடுப்பனவு 20,000

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு நாள் வருகைக்கான கொடுப்பனவாக வழங்கப்படும் தொகையை 500 ரூபாவிலிருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த பாராளுமன்றத்தில் நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது அரசாங்க தரப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் வருகைக்காக தற்பொழுது ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுவது 500 ரூபா மாத்திரமே. இது 19500 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஒரு மாதத்துக்கு 8 நாட்கள் பாராளுமன்றம் கூடுகின்றது. இதற்கேற்ப, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா கிடைக்கப் பெறும். ஏற்கனவே, வழங்கப்பட்ட கொடுப்பனவின் படி மாதத்துக்கு 4 ஆயிரம் ரூபா மாத்திரமே கிடைக்கப்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழமையாக கொடுக்கப்படும் மாதாந்த சம்பளம், தொலைபேசிக் கட்டணம், எரிபொருள் கட்டணம், அலுவலக ஊழியர்களுக்கான கொடுப்பனவு என்பன தவிர்த்தே இந்த வருகைக்கான கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வெள்ளப் பாதிப்புகளை சரி செய்ய 26,000 கோடி ரூபா நிதி தேவை

### முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம்

தமிழகத்தில் வெள்ள பாதிப்புகளை சரிசெய்ய ரூ.25,912.45 கோடி நிதி தேவை என முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி பெய்த கனமழை காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டது.

ஏராளமான வீடுகளும், வீட்டு உபயோகப் பொருட்களும், வாகனங்களும் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டன.

கன மழை மற்றும் வெள்ளப் பாதிப்புகளை முழுமையாக சரி செய்ய ரூ.25,912.45 கோடி தேவைப்படுகிறது. இந்நிலையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழகத்துக்கு உடனடியாக ரூ.2 ஆயிரம் கோடி விடுவிக்க மத்திய நிதியமைச்சகத்துக்கு பிரதமர் மோடி அறிவுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே நவம்பர் 23 ஆம் திகதி ரூ.8481 கோடி நிதி கோரிய நிலையில், வெள்ளம் பாதித்த பகுதிகளில் தற்காலிக, நிரந்தர சீரமைப்புக்கு கூடுதலாக ரூ.17,431.51 கோடி தேவை என்று ஜெயலலிதா கேட்டுள்ளார். (இ)

## கல்வி வளர்ச்சியை மேம்படுத்த அடுத்தாண்டில் வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

அவுஸ்திரேலியா வாழ் தமிழர் அமைப்பான பட்டதாரிகள் ஒன்றியத்தினரால் போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பல வேலைத்திட்டங்கள், உதவிகள் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் அவர்களினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி குன்றிய நிலையிலுள்ள கிராமங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை மேம்படுத்தும் முகமாக பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டங்கள் குறித்து அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்துள்ள பட்டதாரிகள் ஒன்றிய முக்கியஸ்தரான பாபு நேற்று நண்பகல் 12 மணியளவில் சமூக ஆர்வலர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதற்கமைய சமூக ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்ட யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இதற்கான வேலைகள் அடுத்தாண்டு தை மாதம் ஆரப்பிக்கப்படவுள்ளதாக பட்டதாரிகள் ஒன்றிய முக்கியஸ்தர் தெரிவித்தார். (2-302)

## மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவராக சமல் நியமனம்



அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் பதவி முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான நியமனக் கடிதத்தை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் கடந்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்த கீதா குமாரசிங்கவுக்கு காலி மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி மைத்திரிபாலவினால் அரசியலில் வளர்த்தெடுக்கப்பட்டு, தற்போது அவருடைய கடும் அரசியல் எதிரியாக செயற்படும் சிறிபால கம்லத்துக்கு பொலநறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் பதவியானது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியின் அதிகாரங்களைக் கொண்ட ஒரு பதவியாகும்.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் மாவட்டங்களின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## இரண்டு வலயக்கல்வி அலுவலகங்களை அமைத்து மாணவர்களின் கல்விக்கு உதவுக

### பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் கூட்டாக இணைந்து வடக்கு முதலமைச்சருக்கு கோரிக்கை

(மல்லாவி)

கடந்த 30 வருட கால யுத்தத்தினால் பாதிக் கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் இரு வல யக்கல்வி அலுவலகங்களை உருவாக்கி, தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென பெற்றோர்கள், சமூக ஆர் வலர்கள் கூட்டாக இணைந்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கோரி க்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் தெரியவரு வதாவது,

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலக மானது ஆயிரத்து 237.31 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதுடன் கண்டாவளை, பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு கல்வி கோட்டங்களை உள்ளடக்கியதுடன் 112 பாடசாலை களையும் கொண்டுள்ளது. மக்களின் மீள்குடியமர்வின் பின்னர் 104 பாடசாலைகள் இயங்குகின்ற நிலையில் 32 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இம் மாணவர்களுக்கு நடப்பாண்டில் ஆயிரத்து 694 ஆசிரியர்கள் கல்வி போதி க்கின்றனர்.

இவ்வலயத்தில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு 88 ஆசி ரியர்கள் பற்றாக் குறை காணப்படுவதுடன் ஏனைய பாடங்களுக்கு 47 ஆசிரியர்கள் பற்றாக்குறையுடன் ஒட்டு மொத்தமாக 135 ஆசிரியர்கள், நடப் பாண்டில் பற்றாக்குறை காணப்பட்டது.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருடாந்த இடமாற்றத்தின் போது 120 ஆசி ரியர்கள் இவ்வலயத்தை விட்டு இடமாற்றலாகி வெளி மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் அதிகளவு ஆசிரியர் பற்றாக்குறை பின்தங்கிய கிராமப் பாடசாலை களில் காணப்படுவதால் மாண வர்களினது கல்வி வளர்ச்சியின் சித்தி வீதம் குறைவடைந்து காணப்படுகின்றது. அத்துடன் பல மாணவர்கள் பாடசாலையை விட்டு இடை விலகும் சந்தர்ப்பமும் இடம் பெற்றுள்ளது.

10 ஆயிரத்திற்கு உட்பட்ட மாணவர் தொகையைக் கொண்ட கல்வி வலயங்கள் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள நிலையில் 32 ஆயிரம் மாணவர்களையும் பரந்துபட்ட நிலப்பரப்பில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளைக் கொண்ட கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டு கல்வி வலயங்களாக உருவாக்குவதன் மூலம் எதிர் காலத்தில் மாணவர்களினது கல்வி சித்தி வீதத்தை அதிகரிப்பதுடன் ஆசிரியர் வளப் பங்கீடு, பௌதீக வளத் தேவைகள் உட்பட வலயக் கல்வி திணைக்கள கல்வி அதி காரி களின் பாடசாலைகள் மீதான மேற்பார்வை நடவடிக் கைகளையும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு வலயக்கல்வி அலுவலகங்களை உருவாக்கி தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரிடம் பெற் றோர்கள், சமூக ஆர்வுலர்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# கம்பவாரிதிக்கு ஓர் அன்பு மடல்

01

அன்புமிகு கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

தங்கள் உகரம் இணையத்தளத்தில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்பில் நீங்கள் எழுதியிருந்த கட்டுரையை வாசித்தேன். மிகப்பெரும் அதிர்ச்சி. நீங்கள் இவ்வாறு எழுதியதற்கான காரணம் என்ன? என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஏற்பாட்டுக் குழுவில் ஒருவன் என்ற வகையில் இவ்விடத்தில் உண்மையைக் கூறுவது எனது கடமை என்று நினைக்கிறேன். உண்மையைத் துணிந்து கூறுங்கள் என்ற உங்களின் உரைகள் தான் எனக்கு அப்படியொரு மன உறுதியையும் தந்தது.

வடக்கின் முதல்வர் நீதியரசர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்பில் யார் எந்தக் குறையைக் கூறியிருந்தாலும் அது பற்றி நான் கவலை கொண்டிருக்கமாட்டேன். ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு மிகப்பெரும் பெருமை என்று நான் நம்புகின்ற கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் குறை காணும் போது நான் பேசாமல் இருந்தால் அது மிகப் பெரும் பாவமாகும்.

அன்புக்குரிய கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களே! அண்மையில் நீராவியடி பிள்ளையார் கோயில் அறங்காவலர் திருமதி சாந்தா ரகுநாத முதலியார் அம்மையார் அவர்களைச் சந்தித்தேன்.

சமய சமூக அக்கறை கொண்ட நல்ல பொறுப்புள்ள ஒருவர் அவர். கூடவே பெரியார் மறவன் புலவு சச்சிதானந்தம் அவர்களின் சகோதரி. தமிழகத்தில் உள்ள சிதம்பரத்தில் ஈழத்தமிழர்கள் அமைத்த மடாலயங்கள் தொடர்பில் ஆராய்வதே அந்தச் சந்திப்பின் நோக்கம்.

அந்தச் சந்திப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் நினைத்தால்- அவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து உரையாற்றினால் எங்கள் இளைஞர்கள் நிச்சயம் நல்வழிப்படுவர் என்று கதைத்துக் கொண்டோம். இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டோம்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை நான் சந்தித்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்காதது மிகப் பெரும் குறை.

கம்பவாரிதிக்கு கலாநிதிப் பட்டம் வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பெருமைப்பட்டுக் கொள்ளும் என்றேன்.

நிச்சயமாக இந்தியப் பல்கலைக்கழகங்கள் கம்பவாரிதிக்கு கலாநிதிப் பட்டங்களை வழங்கும். அதற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முந்திக் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தேன்.

தமிழகத்தில் நீங்கள் கலைஞர் கருணாநிதியின் நூலை ஆய்வு செய்தபோது, உங்கள் உரையின் உச்சம் கண்டு நடிகர் ரஜனிகாந் கண்ணீர் விட்ட செய்தி எல்லாம் அறிந்து நாம் பூரிப்படைந்தவர்கள்.

இந்திய தேசத்தில் இலங்கை ஜெயராஜ் பட்டிமன்ற நடுவர் எனும் போது, உங்களின் மிகப் பிரவாகமான அறிவும் பேச்சாற்றலும் எங்களுக்கு மிடுக்கைத் தரும்.

அதேவேளை வடக்கின் முதலமைச்சர் ஒரு அற்புதமான உத்தமர். நேர்மையானவர். அவர் மீது நீங்கள் வழுக் காண்பது என்பது வள்ளலாருக்கு எதிராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழக்குத் தொடுத்த விடயமாகி விடுமோ என்பது என் ஏக்கம்.

என்னைப் பொறுத்தவரை கம்பவாரிதி ஜெயராஜும் நீதியரசர் விக்னேஸ்வரனும் தமிழினத்தின் மிகப்பெரும் சொத்துக்கள். எனவே நீங்கள் இருவரும் முரண்பட்டுக்கொண்டால் அது உங்களுக்கல்ல தமிழ் மக்களுக்கே நட்டம் என்று நினைப்பவன் நான்.

எனவே உகரம் இணையத்தளத்தில் நீங்கள் எழுதியவை தொடர்பில் உண்மையைக் கூறுவது என் கடமை என்றுணர்ந்தேன். அதனால்தான் இவ்வன்பு மடலை தங்களுக்குப் பகிரங்கமாக எழுதிக்கொள்கிறேன். இந்தப் பகிரங்கமடல் பலருக்கும் தெளிவைத் தரும் என்ற நம்பிக்கையும் உண்டு.

போருக்குப் பின்பான எங்கள் நிலைமைகள் மிகவும் மோசமாகி வருவதை. தமிழ்மீது விசுவாசமுள்ள எவரும் உணர்ந்து கொண்டிருப்பர்.

தமிழ் அரசியல் தலைமைகளின் இராஜதந்திரமற்ற போக்கும் தாம் தாம் பதவியைப் பெறுவதற்கான முயற்சிகளும் எதிர்காலத்தில் அரசியல் பதவிகளைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்ட தன்மைகளும் தமிழினத்தின் மீது மிக மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இது ஒரு புறமாக இருக்க மறுபுறத்தில் எங்கள் இளம் சமூகத்தை சீரழிக்க- தமிழ் மக்களின் உன்னதமான பண்பாட்டுக் கோலங்களை வேரறுக்க ஒரு பெரும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த இரண்டிற்கும் மத்தியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் கவனிப் பாரற்றவர்களாக; ஏழ்மையின் உச்சத்தில் ஒரு நேர உணவுக்கும் ஏங்கும் பரிதாபத்தில் இருக்கும் அவலம் தொடர்ந்து கொண்டது.

இருந்தும் அரச தரப்பைச் சந்திக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்தை நிவர்த்திக்கும் வரை அந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணங்களையாவது அரசு வழங்க வேண்டும் என்று ஒருபோதும் கேட்டிலர்.

போர்ப்பாதிப்புக்குள்ளான மக்களின் வறுமையை உணர்ந்து கொள்ள முடியாத எங்கள் அரசியல் தரப்புகளால் ஏற்பட்ட பாழாய்ப் போன தலைவிதி இது.



சட்டவிரோத குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளின் புதிய தோன்றல்கள், தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய வளங்களை சூறையாடுதல் என்ற மிக மோசமாக அழிவு நடவடிக்கைகள் தொடர்ந்தன. இத்தகைய மிக மோசமான சம்பவங்கள் பலரையும் பாதித்தது. மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொது மக்கள் பலரும் இதுபற்றிக் கதைத்துக் கொண்டனர். தங்களுக்குள் தீராத மனக் கவலையை விதைத்துக் கொண்டனர்.

என்ன செய்வது தேர்தல் காலத்தில் வந்து போன நம் சீமான்கள் இப்போது வருவதில்லை. மக்களை வந்து சந்திப்பதில்லை. அப்படியானால் தமிழ்மக்களின் அவலங்கள் எங்ஙனம் தீர்க்கப்பட முடியும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ள முடியும்.

இத்தகையதோர் கட்டத்தில் தான் தமிழ்மக்களின் நலன்களைப் பேணுகின்ற பொது அமைப்பு ஒன்றை உருவாக்கினால் அது பயனுடையதாக இருக்கும் என்று கருதப்பட்டது. அந்த வகையில் ஐந்து பேர் கொண்ட ஏற்பாட்டுக் குழுவொன்று உருவாகியது.


அந்த ஏற்பாட்டுக்குழு அரசியல் கட்சித் தலைவர்களையும் மதத்தலைவர்களையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியது. இச் சந்திப்பின் போது மதத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் தமிழ் மக்களின் நலன் தொடர்பில் ஒரு பொதுவான - பலமான அமைப்புத் தேவை என்று வலியுறுத்தினர்.

தொடர்ந்து வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரை ஏற்பாட்டுக்குழு சந்திப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சந்திப்புக்கான அனுமதியை மின்னஞ்சல் மூலம் பெறுவதன்று முடிவாகி அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

(தொடரும்...)

புருசோத்தமன்

# தரம் -1 மாணவர்களின் பிரவேசமும் பாடசாலைக் கல்விக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பமும்



கருணாமூர்த்தி பத்மகாந்தன்
ஆசிரியர்,
யா/மிருசுவில் அரசினர்
தமிழ் கலவன் பாடசாலை

கல்விச் சூழலைப் பொறுத்தவரை ஆரம்பக்கல்வியானது வினைத்திறனுடையதாக்கப்படல் வேண்டும், மேம்படுத்தப்படல் வேண்டும், பலப்படுத்தப்படல் வேண்டும் என்ற கருத்தாடல்கள் முழு மூச்சுப் பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. அக் கருத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தேசிய மட்டம், மாகாணமட்டம், வலய மட்டம், கோட்டமட்டம், பாடசாலை மட்டம் எனப் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் அவை கண்காணிக்கப்பட்டு உண்மைத் தன்மைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. கட்டடம் ஒன்று படிப்படியாக பல அடுக்குகள் கட்டப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கும் அத்தனை தளங்களையும் தாங்கக்கூடிய தாங்குதிறன் கொண்ட அத்திபாரம் அவசியமாகின்றது. அதனைப்போல் இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியை தரமானதாக்வும், உயர்வானதாகவும், உறுதியானதுமாக மாற்றிக்கொள்ள ஆரம்பக் கல்வி அத்திபாரமாக அமைய வேண்டும்.

இந் நிலையில் ஆரம்பக் கல்வித்துறையில் புதிதாக தரம் ஒன்றினுள் பிரவேசிக்கும் மாணவர்கள் தொடர்பான வரவேற்புக்கள், கரிசனைகள், அறிதல்கள் எனப் பல்வேறு விடயங்களிலும் அதிகூடிய சிரத்தையுடன் செயற்படுதல் அவசியமாகின்றது. மாறுபட்ட ஓர் சூழலில் இருந்து புதியதோர் சூழலுக்கு வருகின்ற போது பல்வேறுபட்ட பிரச்சினைகள், பல்வேறு குணவியல்புகள்கொண்ட மாண வர்கள் மற்றும் ஆசிரியர்களைச்சந்திக்கநேரிடுகிறது. ஆகவேதான் பிறிதொரு சூழலிலிருந்து வருகின்ற மாணவர்களை பாடசாலையில் மூத்த சகோதர நண்பர்களால் மலர்ச்செண்டு வழங்கியும், மலர்மாலை அணிவித்தும் இன்முகத்துடன் வரவேற்கப்படுகின்றனர். இது **கால்கோள் விழா** என்ற பெயரில் நாடு பூராகவும் தேசிய ரீதியில் இடம் பெறுகின்றது. இந் நிகழ்வானது பாடசாலைகளின் வசதிக்கேற்றவாறு எளிமையாகவும், விமர்சையாகவும் கொண்டாடப்படுகின்றது.

கொண்டாட்டத்தின் தன்மை எவ்வாறு இருப்பது என்பது இங்கு முக்கியமல்ல. நிச்சயமாக எல்லாப் பாடசாலைகளும் இதனை தமது இயலுமைக் கேற்றவாறு வடிவமைத்து செயற்படுத்தப்படல் வேண்டும் என்பது அவசியம். இதன் மூலம் பாடசாலையில் தமக்கு ஆதரவான ஓர் குழுவினர் உள்ளனர் என்ற உணர்வு ஏற்பட்டு பிள்ளைகள் பாடசாலையை விரும்பும் நிலை ஏற்படுகின்றது.

இந்நிகழ்வுடன் தொடர்புடையதாயும் இவ் வரவேற்பு நிகழ்விற்கு முன்னராக இடம்பெற வேண்டியதுமான செயற்பாடாக **பிள்ளையை இனங்காணல்** செயற்பாடு விளங்குகின்றது. இப்பிள்ளையை இனங்காணல் செயற்றிட்டமானது 1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்வி மறுசீரமைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டு சீர்செய்யப்பட்டு 1999 முதல் பிள்ளைகளை அறிந்து கொள்வோம் எனும் நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2016இல் சில திருத்தங்களுடன் **பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்** என்ற தலைப்பின் கீழ் பாடசாலைகளில் நடைமுறைக்கு வருவதுடன் தரம்-1 இல் புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### *பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச் சிகரமான ஆயத்தம்*
### நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள்

1. முதலாம் தரத்தில் பிரவேசிக்கும் பிள்ளையிடத்தே பாடசாலை தொடர்பான விருப்பை ஏற்படுத்தல்.
2. முதலாம் தரத்தில் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கு இடையே நட்பை உருவாக்கல்.
3. மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையே சிறந்த நட்புடனான தொடர்பாடலை உருவாக்கல்.
4. மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றல்கள், தனியாளிடைத் திறன்கள் என்பவற்றை வருட ஆரம்பத்திலே ஆசிரியர் இணங்காணல்.
5. முறைசார் கல்வியினுள் பிரவேசிக்கும் மாணவர்களது இயலுமைகள், இயலாமைகள், ஆற்றல்களை இணங்கண்டு அதனடிப்படையில் எதிர்கால கல்விச் செயன்முறையினை மேம்படுத்த உதவுதல்.

### மகிழ்ச்சிகரமான ஆரம்பத்தின் அவசியம்

பாடசாலைகளைப் பொறுத்தவரை, தமது **பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்** எனும் இந்நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகம் செய்வதன் அடிப்படை நோக்கங்களாக,

1. முன்பள்ளிச் சூழலில் இருந்து பாடசாலைச் சூழலுக்கு இடம் மாறும்போது பிள்ளையிடம் நிகழ வேண்டிய மாற்றங்களை இலகுபடுத்தல்.
2. பிள்ளைகளிடம் அடிப்படைத் திறன்கள் எந்தளவு விருத்தியடைந்துள்ளது என ஆசிரியர்களும் பெற்றோர்களும் அறிய வாய்ப்பளித்தல்.

எனவே இதன் மூலம் முதலாம் தரத்தில் புதிதாக இணைந்து கொள்ளும் பிள்ளைகளின் ஆற்றல் மற்றும் பலவீனத் தன்மைகளை இனங்கண்டு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அதன் மூலம் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்ளவும், வினைத்திறனாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை விடுத்து இச் செயன்முறையினூடாக வெளிப்படுத்தப்படுகின்ற பிள்ளைகளது திறன்களை உரிய வயதிலுள்ள வேறு பிள்ளைகளது திறன்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது என்பதனை மனதில் ஆழமாகவும் உறுதியாகவும் நினைவுபடுத்தல் வேண்டும். மகிழ்ச்சிகரமான ஆரம்பம் செயற்பாடுகள் மூலம் இனங்கண்ட பலம், பலவீனங்களை அறிக்கைப்படுத்தி, நாளாந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இவற்றைத் தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும். இச் செயற்பாடுகளின் மொத்த விளைவுகள் யாவும் பிள்ளைகளது ஒட்டுமொத்த விருத்தியையும் இலக்காகக் கொண்டு அமைதல் அவசியமாகின்றது.

பாடசாலை என்கின்ற புதிய சூழலுக்குள் பிரவேசிக்கின்ற பிள்ளைகளிடம் இருக்க வேண்டிய தயார் நிலையை இரண்டு பிரதான இயல்புகளுட்ன் தொடர்புபடுத்த முடியும்.

1. பிள்ளைகளிடம் இயல்பாகவே வரவேண்டிய இசைவாக்கம்
2. தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளல் என்பனவாகும்.

இவ் இயல்புகளை 3 பரிமாணங்களில் நோக்க முடியும்.

1. பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார் நிலை
2. பாடசாலைகளில் பிள்ளைகளுக்கான தயார் நிலை
3. குடும்பம் அல்லது பெற்றோரின் தயார் நிலை

இங்கு பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார் நிலையினைக் கண்டறிதலை அடிப்படையாகக் கொண்டே இப் **பாடசாலைக் கல்விக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பம்** எனும் நிகழ்ச்சித்திட்டமானது காணப்படுகின்றது.

புதிதாக தரம் ஒன்றில் அனுமதிக்கப்படும் பிள்ளைகளை இனங்காண வேண்டியதன் அவசியம்

இப்பிள்ளைகளது வாழ்வில் பாடசாலைச் சூழல் என்பது புதியதாக அமைகின்ற அதேவேளை அவர்களது வாழ்வில் இவ் இனங்காணல் என்பது மிக முக்கியமானதாகும். இது அவர்களது எதிர்கால கற்றல் கற்பித்தலை ஆசிரியர்கள் சிறப்பாக திட்டமிட்டு செயற்படுத்த உறுதுணையாக அமையும். பிள்ளைகள் பிரவேசிக்கின்ற பாடசாலைச் சூழல் என்பது புதிதாகும். அவர்கள் இது வரை காலமும்பழகியமூத்தோர், பெற்றோர், ஆசிரியர்கள், சிநேகிதர்கள் எவருமே அங்கில்லை. எனவே பழக்கமற்ற இப்புதிய சூழல் அவர்களுக்கு சவால் நிறைந்ததாக அமையக்கூடும். அதன் காரணமாக அவர்களிடத்தில் மன அமைதியின்மை, பயம், பதகளிப்பு, விரக்தி என்பன ஏற்படக் கூடும். பாடசாலைச்சூழல் என்பது மிகவும் வெறுப்பானதொன்றாக மாறி விடக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இத்தகைய பாதகமான நிலைமைகள் அவர்களது முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்துவிடும்.

எனவே தான் இம்மகிழ்ச்சிகரமான கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் என்ற நிகழ்ச்சித்திட்டத்தினூடாக சில இலகுவான செயற்பாடுகளை முன்வைத்து தரம் 1 இல் பிரவேசிக்கின்ற பிள்ளைகள் பாடசாலைச் சூழலுடனும் ஆசிரியர்களுடனும் ஏனைய மாணவர்களுடனும் மெது மெதுவாக விருப்புடனான தொடர்புகளைப் பேணி மகிழ்ச்சிகரமானதும் ஆரோக்கியமானதுமான அனுபவங்களைப் பெற்று பாடசாலைச் சூழலிலும் பாடசாலைக்கல்வியிலும் பற்றுதலை உண்டாக்கி ஓர் உடன்பாடான ஆரம்பமொன்றை ஏற்படுத்த சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுக்கவும் முயற்சிக்கப்படுகிறது.

பிள்ளைகளுக்கு மட்டும் புதிய சூழல் சவாலாக அமைவதில்லை. ஆசிரியர்களும் புதிய மாணவர் குழாத்தினை எதிர்கொள்கின்ற இச்சமயம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். பாடசாலைக்கு வரும் பிள்ளைகளில் முன்பள்ளியில் கற்றலை பூரணப்படுத்திய பிள்ளைகள், முன்பள்ளிக்குச் செல்லாத பிள்ளைகள், வறிய குடும்பப் பின்னணி கொண்ட பிள்ளைகள், செல்வந்தப் பிள்ளைகள், நடுத்தர வசதி படைத்த பிள்ளைகள், கிராமப்புறச் சூழலில் வளர்ந்த பிள்ளைகள், நகர்ப்புறச் சூழலில் வளர்ந்த பிள்ளைகள், சிறு சிறு குறைபாடுகள் கொண்ட பிள்ளைகள் எனப் பலதரப்பட்ட பிள்ளைகள் காணப்படலாம். எனவே தனது வகுப்பிற்கு வரும் பிள்ளைகள் யார்? அவர்களது இயலுமைகள் யாது? இயலாமைகள் எவை? அவர்களது விருப்பு வெறுப்புக்கள் எவை? போன்ற பல்வேறு வினாக்களுக்கு விடை கண்டு கொள்ள வேண்டும். இவ் வகை யில் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாக வைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு செயற்படுத்த இலகுவாகின்றது. எனவே இத் தன்மைக்கு பிள்ளைகளை இனங்காணல் என்பது மிக அவசியமாகின்றது.

பிள்ளைகளது பலங்களையும் பலவீனங்களையும் இனங்காண்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பங்களை இப்பொறிமுறையானது அமைத்துக் கொடுக்கிறது. பிள்ளைகளிடம் காணப்படும் இயலுமைகளை சரியான முறையில் திசைப்படுத்துவதும் பலவீனங்களுக்கு பரிகாரம் காண்பதும் சிறு பராயத்திலேயே தலையிட்டு மேற்கொள்ளப்படல் வேண்டும். அச்சிறு பராயத் தலையீடே வெற்றிகரமான பெறுபேறுகளை வழங்கும். இது பெரும்பாலான ஆய்வுகளின் உறுதியாகும். இவ்வகையில் பிள்ளை களிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய அடிப்படை வாழ்க்கைத் திறன்களை சிறுபராயத்தில் இருந்தே விருத்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு சிறு பராயத்தில் விருத்தி செய்வதை விடுத்து பிற்பட்ட வளர்ந்த காலங்களில் அத் திறன்களை விருத்தி செய்வதென்பது இலகுவல்ல. கடினமாகும். இது பெரும்பாலான உளவிய லாளர்களின் கருத்தாகும்.

இந்நிகழ்ச்சித்திட்ட செயன்முறையின் மூலம் பிள்ளைக ளின் அடிப்படை வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் முன்பள்ளி ஆசிரியர்களை கரிசனை காட்டச் செய்வதும் பெற்றோர்களிடம் தமது பிள்ளைகளின் விருத்தி நிலை தொடர்பாக நிலவுகின்ற மறையான மனப்பாங்குகளை அகற்றுவதும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிள்ளைகளைப் பொறுத்தவரை தனியார் வேறுபாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. இத் தனியார் வேறுப்பாடுகள் அவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தாக்கம் செலுத்துகின்றது. எனவே ஒவ்வொருவரதும் தனியார் இயல்புகளை ஆசிரியரானவர் இனங்கண்டு கொள்வதன் மூலம் தொடர்ந்து அத்தனியாள் வேறுபாடுகளுக்கேற்றவாறு தனது கற்றல் கற்பித்தல் செயற்பாடு களை இனங்காணல் என்பது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

(தொடரும்)

# ஹிலாரியின் கருத்தால் சர்ச்சை



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட எதிர்பார்த்துள்ள டொனால்ட் டிரம்ப் முஸலிம்கள் தொடர்பில் வெளியிட்ட கருத்தானது ஐ.எஸ். தீவிரவாதிகள் மேலும் பலரை ஆட்சேர்ப்பதற்கே வழிவகை செய்துள்ளதாக தான் தெரிவித்திருந்த விமர்சனத்தை ஆதரித்து அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் சார்பில் மேற்படி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளார்.


இந்நிலையில் அவர் விவாத நிகழ்ச்சியொன்றின் போது எதிர் வேட்பாளரான டொனால்ட் டிரம்ப் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கான சிறந்த ஆட்சேர்ப்பாளர் என குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து இந்த விமர்சனம் குறித்து ஹிலாரி மன்னிப்புக் கோர வேண்டும் என டொனால்ட் டிரம்ப் கோரியிருந்தார்.

சிரிய அகதிகள் அமெரிக்காவில் மீளக் குடியமர்த்தப் படுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த டொனால்ட் டிரம்ப். எதுவித சான்றுகளும் இல்லாத நிலையில் 9:11 தாக்குதல்களை நியூ ஜெர்ஸியிலுள்ள அமெரிக்க முஸ்லிம்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததாக தெரிவித்து கடும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் அவரது கருத்துக்கு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது அவரது சொந்தக் கட்சியைச் சேர்ந்த அவரது எதிர்ப்பாளர்களும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் ஹிலாரி கிளின்டன் தனது விமர்சனம் சரியான ஒன்றென தெரிவித்துள்ளார். தான் இது தொடர்பில் மன்னிப்புக் கோரப் போவதில்லை என அவர் தெரிவித்தார். (இ)




# சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை

## போலி மென்பொருள் வர்த்தகர்கள் கைது

சைபர் தாக்குதல்களிலிருந்து இணையத்தள பாவனையாளர்களைப் பாதுகாக்கும் வகையில் போலி மென்பொருள் வர்த்தகர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இணையத்தள பயன்பாட்டின் போது சைபர் தாக்குதல்கள் மற்றும் வைரஸ் பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிப்புக்குள்ளாகும் கணனி இயந்திரங்கள் முழுமையாக சேதமடைந்து விடுவதுண்டு.

இதற்கான காரணம் போலி மற்றும் தரம்குறைந்த மென்பொருள் பாவனை என்பனவாகும்.

பெரும்பாலான கணனி வர்த்தகர்கள் தாங்கள் விற்பனை செய்யும் கணனி மற்றும் மடிக்கணனிகளில் இவ்வாறான போலி மென்பொருளைகள் மற்றும் தரம் குறைந்த மென்பொருள்களை பதிப்பித்து விற்பனை செய்கின்றனர்.

தற்போது அவ்வாறு போலி மற்றும் தரம்குறைந்த மென்பொருள்களை பதிப்பித்து கணனி மற்றும் மடிக் கணனிகளை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களத்தின் விசேட குழுவொன்று தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கைது செய்யப்படும் வர்த்தகர்களுக்கு எதிராக மோசடி மற்றும் புலமைச் சொத்து மோசடி சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

புலமைச் சொத்து மோசடி சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுகின்றவர்கள் பாரிய அபராதத் தொகையொன்றை செலுத்த நேரிடுவதுடன், சிறைத் தண்டனை அனுபவிக்கவும் நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# அப்துல் கலாமுக்கான வாக்குறுதியை இந்திய அரசு நிறைவேற்றவில்லை

ராமேஸ்வரத்திலுள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் ஜனாஸா அடக்கப்பட்டுள்ள இடத்தல் மணிமண்டபம் கட்டுவதாக இந்திய மத்திய அரசாங்கம் அறிவித்திருந்தும் இதுவரை அதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுககப்படாதுள்ளதாக அப்துல் கலாமின் உறவினர்களும், பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மிகப்பெரிய விஞ்ஞானியாகவும், நாட்டின் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றி கோடிக்கணக்கான மக்களின் அன்பை பெற்ற அப்துல் கலாம் கடந்த ஜூலை மாதம் காலமானார்.

இவர் அடக்கம் செய்யப்பட்ட ராமமேஸ்வரத்தில் மணிமண்டபம் கட்டப்படும் என்று அறிவித்திருந்த இந்திய மத்திய அரசு, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததோடு, அடிப்படை வசதிகளைக்கூட செய்து தரவில்லை என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ)

# ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை பெருக்கி தொழில் வாய்ப்பற்றோர் எண்ணிக் கையினை குறைப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு அமைய கொழும்பினை தலைமையக மாகக் கொண்ட பிரபல ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு தையலாளர், இயந்திர இயக்குநர் போன்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்வரும் (2015. 12.30) புதன்கிழமை அன்று காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை நேர்முகத்தேர்வு யாழ்.மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டப கீழ்த் தளத்தில் நடைபெறவுள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தராதரத்தினை உடைய பெண் விண்ணப்பதாரிகள் இந் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றி தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம் என அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# இரத்ததான தடை நீக்கம்

அமெரிக்காவில் ஓரின சேர்க்கையாளர் இரத்ததானம் வழங்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஓரின சேர்க்கையாளர்கள் இரத்த தானம் செய்ய ஆயுள்கால தடை விதிக்கப்பட்டி ருந்தது.

அதற்கு அங்கு எதிர்ப்பு எழுந்து ள்ளது. தங்களுக்கும் இரத்ததானம் வழங்கும் உரிமையை வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

ஏற்கனவே அமெரிக்காவில் ஓரின சேர்க்கையாளர் திருமணத் துக்கு அங்கீகாரம் மறுக்கப்பட்டு வந்தது. சமீபகாலமாக பல மாகாணங்கள் ஓரினசேர்க்கை திருமணத்தை அங்கீகரித்து சட்ட பூர்வமாக்கியுள்ளன.

அதை தொடர்ந்து ஓரின சேர்க்கையாளர்கள் திருமணமும் நடத்தி வைக்கப் படுகிறது. எனவே. ஓரின சேர்க்கையாளர்கள் இரத்த தானம் வழங்கும் உரிமையை வழங்க அமெரிக்க உணவு மற்றும் சத்து ணவுத்துறை நிர்வாகம் முடிவு செய்தது.


இந்த நிலையில் அவர்கள் இரத் ததானம் வழங்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. (இ)

# அடுத்த ஆண்டை குரங்கு ஆண்டாக கொண்டாடவுள்ள ஜப்பான் மக்கள்

(டோக்கியோ)

ஜப்பானில் விலங்குகளை போன்று ஆடை அணிந்து வைத்தியசாலையில் உள்ள ஜன்னல்களை பணியாளர்கள சுத்தம் செய்து வருகின்றனர்.

வசந்தகாலம் என்று அழைக்கப்படும் பெப்ரவரி மாதத்தில் சந்திரனை பின்பற்றும் வகையில் ஜப்பானியர்கள் புத்தாண்டை கொண்டாடுவது வழக்கம். ஒவ்வொரு விலங்குகளை மையமாக கொண்டு அவர்கள் புத்தாண்டை கொண்டாடுவர்.



இந்த ஆண்டை செம்மறி ஆண்டாக கொண்டாடிய மக்கள், அடுத்த ஆண்டை குரங்கு ஆண்டாக கொண்டாடவுள்ளனர். இதனையொட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள குழந்தைகள் வைத்தியசாலையில் ஜன்னல்களை சுத்தம் செய்பவர்கள் செம்மறி ஆடு மற்றும் குரங்கை போல உடை அணிந்து வேலை செய்து வருகின்றனர். 15 மாடி கட்டடத்தில் அந்தரத்தில் தொங்கியபடி அவர்கள் வேலை பாரத்துக்கொண்டே குழந்தைகளை மகிழ்ச்சிபடுத்தி வருகின்றனர். (இ)

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சேவாலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆழிப் பேரலையால் உயிர் நீத்த எம் உறவுகளின் நினைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள குருதி வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை கோண்டாவிலில் அமைந்துள்ள சேவா லங்கா மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என சேவா லங்கா திட்ட இணைப்பாளர் க.உயிதன் அறிவித்துள்ளார்.

இந் நிகழ்வானது கடந்த 5 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கு யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்து குருதி கொடையாளர்களாக கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலதிக தகவல் தேவைப் படுவோர் 021 222 9850, 021 222 8361, 077 716 1955 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# அன்பளிப்பு

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன ஏற்பாட்டில் புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கல் நிகழ்வு நாளை 26ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை பட்டின சபை வீதியிலுள்ள சங்கானை கலாசார மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் எஸ். அனுராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# தந்தையை கொலை செய்தவரை 12 துண்டுகளாக்கிய இளைஞன்

தனது தந்தையைக் கொன்றவரை, 12 வருடங்கள கழித்து, வெட்டிக் கொலை செய்த இளைஞன், கைது செய்யப்பட்டுள்ளான்.

அலாம் கான் என்ற இந்த இளைஞன், 12 வயதுச் சிறுவனாக இருந்தபோது, 2003 ஆம் ஆண்டில், அவனது தந்தையை ஒருவர் கொன்றுள்ளார். கொலை செய்த நபர், குடும்ப நண்பரொருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்குப் பின்னர், தான் யாரெனத் தெரிவிக்காமல், திட்டம் தீட்டி வந்த அந்த இளைஞன், சரியான தருணம் பார்த்து, தனது தந்தையைக் கொன்றவரை, கடந்த வாரம் கொன்றுள்ளான். அந்நபரை வெட்டிக் கொன்றது மாத்திரமன்றி, அவரை 12 துண்டுகளாக வெட்டியுள்ளான்.

அவனைக் கைது செய்த போது, தனது குற்றத்தை அவன் ஏற்றுக் கொண்டதாக நேற்று முன்தினம் தெரிவித்த பொலிஸார், தனது குற்றம் குறித்து, எந்தவித வருத்தத்தையும் அவன் வெளியிடவில்லை எனத்தெரிவித்தனர்.

கொலை செய்யப்படப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், உத்தரப் பிரதேசத்திலுள்ள மொரடாபாத்திலுள்ள அவனது வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ)

# சிறார் சட்ட மசோதா நிறைவேறியது

**கடும் குற்றங்களில் ஈடுபடும் சிறுவர்களை, வயது வந்தோராகக் கருதி நடவடிக்கை எடுக்க வகை செய்யும் சிறார் நீதிச் சட்டதிருத்த மசோதா நேற்று முன்தினம் மாநிலங்களவையில் விவாதத்துக்குப் பின் நிறைவேறியது. கொடுமையான குற்றச்செயல்களில் ஈடுபடும் 16 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வயது வந்தோராகக் கருதி தண்டனை அளிக்க வகை செய்யும் சிறார் நீதி (குழந்தைகள் மீதான அக்கறை மற்றும் பாதுகாப்பு) சட்டதிருத்த மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் அறிமுகம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.**

நிர்பயா பலாத்காரம் மற்றும் கொலை வழக்கில், குற்றவாளிகளில் ஒருவரான சிறுவன் 3 ஆண்டு தண்டனைக் காலத் துடன் விடுவிக்கப்பட்டதற்கு நாடு முழுவதும் எதிர்ப்பு நிலவிய நிலையில் இம்மசோதா கொண்டு வரப்பட்டது.

மசோதாவை, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மேனகா காந்தி அறிமுகம் செய்து பேசியதாவது,

இம்மசோதா மிகுந்த பரிவுடனும், தெளிவாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. சிறார் குற்றங்கள் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. நீங்கள் இதைவிட அதிக தெளிவான, மிக நுட்பமான மாறுதல்களைக் கொண்ட, பரிவு கொண்ட மசோதாவை உருவாக்க முடி யாது.

சிலர் இந்த மசோதாவை சாதாரணமாக கருதுகின்றனர். எந்தவொரு குற்றமும் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டதாக இருந்தால் அதனை இந்த மசோதா சிறார் குற்றமாகக் கருதாது.

நிர்பயா பலாத்கார வழக்கில் தொடர்புடைய சிறார் குற்றவாளி விடயத்தில் நம்மால் ஏதும் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால், இம்மசோதாவைக் கொண்டு வருவதன் மூலம், ஏராளமான சிறுவர்களை இது போன்ற குற்றங்களில் ஈடுபடாமல் தடுத்து விடலாம்.

எந்தவொரு சிறுவரும் நேரடியாக சிறைக்கு அனுப்பப்படமாட்டார்கள். நிபுணர்களையும், உளவியல் வல்லுநர்களையும் கொண்ட நீதி அமர்வு, அந்தக் குற்றம் குழந்தை மனநிலையில் செய்யப்பட்டதா அல்லது முதிரச்சி பெற்ற மனநிலையில் செய்யப்பட்டதா என்பதைத் தீர்மானிக்கும்.

நீதிமன்றம், அவர்களை வயது வந்தோருக்கான சிறையில் அடைக்க உத்தரவிட்டாலும், மேல் முறையீடு செய்ய அதிகாரம் உள்ளது. சிறார் குற்றவாளி, 21 வயது வரை சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் அனுமதிக்கப்படுவார். அதன் பிறகு மறுஆய்வு செய்யப்படும்.

அவர்கள் ஒருபோதும் தீவிர குற்றவாளிகளுடன் அடைக்கப்படமாட்டார்கள். இதுமிகவும் நுட்பமான மாறுதல்களைக் கொண்ட மசோதா.

நாம் பாதுகாக்க வேண்டியது பாதிக்கப்பட்டவர்களையா? அல்லது குற்றவாளிகளையா? சில சிறுவர்கள செய்யும் குற்றங்களின் தீவிர தன்மையைக் கருத்திற் கொண்டு, இம்மசோதாவை நிறைவேற்றுவது அவசியம்.

இது எனது மசோதாவோ, அரசின் மசோதாவோ அல்ல. உங்களின் (காங்கிரஸின்) மசோதா. உங்களால் ஆரம்பிக்கப்பட்டு, எங்களால் முடித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு மேனகா காந்தி பேசினார்.

இதையடுத்து பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் வெங்கய்ய நாயுடு, மசோதா ஏற்கனவே பலமுறை விவாதப்பட்டியலில் இடம் பெற்றிருந்ததை சுட்டிக் காட்டினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் இவ் விவாதத்தை தொடங்கி வைத்தார். அப்போது நிர்பயாவின் பெற்றோரை, குறிப்பாக அவரின் தாயை பாராட்டினார். அந்த தாய் தனது மகளுக்காக மட்டும் போராடவில்லை, நாட்டில் வேறு நிர்பயா உருவாகக் கூடாது எனப் போராடினார் என்றார்.

மேலும் அவர் பேசும் போது, "ராஜீவ் காந்தி ஆட்சியின்போது சிறார் குற்றவாளியின் வயது வரம்பு 16 ஆக குறைக்கப்பட்டது. 2000 இல் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் 18 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது மீண்டும் ராஜீவ் காலத்துக்கே வந்துள்ளனர்" என்றார்.

விவாதத்தின்போது, தி.மு.க, ராஷ்டிரிய ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம், மார்க்சிஸ்ட், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளும், நியமன எம்.பி. அனு அகா ஆகியோரும் மசோதாவை நாடாளுமன்ற தேர்வுக்குழுவுக்கு பரிந்துரைக்க வலியுறுத்தினர். மசோதாவை அவசரமாக சட்டமாக்க வேண்டிய அவசியமில்லை என தி.மு.க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அ.தி.மு.க. எம்.பி. நவநீத கிருஷ்ணன் பேசும்போது, "சிறார்களைப் பாதுகாப்பது அவசியம். மசோதாவில், சிறார், பாதிக்கப்பட் டவர்கள், அவர்களின் குடும்பத்துக்கு சட்ட உதவிகள் கிடைப்பதற்கு வகை செய்யப்படவேண்டும்" என்றார்.

காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ் கட்சிகள் மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்தன. விவாதத்துககுப்பிறகு, குரல்வாக்கெடுப்பு மூலம மசோதா நிறைவேற்றப்பட்டது.

குரல் வாக்கெடுப்புக்கு முன்பாக, மார்க்சிஸ்ட் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

மசோதா மீதான விவ்ாதத்தை நிர்பயாவின் பெற்றோர் பார்வையாளர் மாடத்திலிருந்து கவனித்தனர்.

. மத்திய அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வியை நிர்பயாவின் பெற்றோர் நேற்று முன்தினம் காலை சந்தித்தனர். அப்போது சிறார் நீதி சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றுவது குறித்து மத்திய அரசு சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. (இ)

# 47 மீனவர்களையும் விடுவிக்க வேண்டும்

## முதல்வர் ஜெயா கடிதம்



இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழகத்தை சேர்ந்த 47 மீனவர்களையும் உடனே விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனஇந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்கள் 6 பேர் கடந்த 19ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற போது, நடுக்கடலில் அவர்களை அவர்களது இயந்திரப் படகுகளுடன் இலங்கை கடற்படையினர் பிடித்து சென்று விட்டனர். தமிழக மீனவர்கள் 6 பேரும் தற்போது இலங்கை காங்கேசன்துறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் இப்படி கடத்திச் செல்லப்படுவது அதிகரித்து விட்டது. பாக்ஜலசந்தி பகுதியில் மீன்பிடிப்பவர்களை இலங்கை கடத்தி செல்லும் நடவடிக்கை உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். பாக்ஜலசந்தியில் தமிழக மீனவர்கள் தங்கள் பாரம்பரிய பகுதியில் அமைதியாக மீன்பிடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

1974, 1976ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இந்தியா - இலங்கை ஒப்பந்தப்படி வரையறுக்கப்பட்டுள்ள சர்வதேச கடல் எல்லையை தமிழகம் ஏற்கவில்லை என்பதில் அரசு உறுதியாக உள்ளது. இது தொடர்பான வழக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தமிழக மீனவர்கள் ஆழ்கடல் பகுதிக்கு சென்று மீன்பிடிக்க ரூ.1520 கோடியில் சிறப்பு ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக நான் 03.06.2014 மற்றும் 07.08.2015 அன்று மத்திய அரசுக்கு தாக்கல் செய்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

ஆனால் அதற்கு மத்திய அரசு இன்னும் ஒப்புதல் கொடுக்கவில்லை. தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 56 படகுகள் கடந்த சில மாதங்களாக இலங்கை கட்டுப்பாட்டில் உள்ளது. நீண்ட நாட்களாக பயன்படுத்தாததாலும், வடகிழக்கு பருவமழையில் நனைந்ததாலும் அந்த படகுகளும், கருவிகளும் சேதம் அடைநதுள்ளன. இது ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தில் நிரந்தர இழப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அந்த படகுகளை மீட்க மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் தாங்கள் வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு கடந்த 19ஆம் திகதி கடத்தப்பட்ட 6 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் உள்ள 47 தமிழக மீனவர்களை உடனே விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் 4 பேர் இயந்திர படகில் ஏற்பட்ட கோளாறால இலங்கை கடற்பகுதியில் தத்தளிக்க நேரிட்ட போது அவர்களையும் இலங்கை கடற்படை பிடித்து சென்று விட்டது. அவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (இ)

# தாயகம் திரும்பி தொழில் பெறுவதற்கு தமிழக அகதி பட்டதாரிகள் விருப்பம்

இலங்கையில் அமைதி நிலவும் நம்பிக்கையில் தாயகம் திரும்ப தமிழகத்தில் இலங்கை அகதிகளின் மத்தியில் உள்ள பட்டதாரிகள் விரும்புதாக இந்திய நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு சென்று இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களை சந்தித்து உரையாடியிருந்தார்.

இதன்போது அவர் இன்னும் ஆறு மாதக்காலப்பகுதிக்குள் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

இதனையடுத்து தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் மத்தியில் உள்ள பட்டதாரிகள் தொழில்வாய்ப்பை கருத்திற் கொண்டு இலங்கை திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

இதில் பல ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று மேற்படிப்புக்களை மேற்கொள்ளவும் விருப்பம் கொணடுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நான்கு பட்டதாரிகள் இதன் அடிப்படையில் இலங்கைக்கு திரும்பி அரசாங்கத்தின் தொழில்வாய்ப்பு திட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாக ஈழ அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் கல்விக்கான இணைப்பாளர் ஆர். பத்மநாதன் தெரிவித்துள்ளார். (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



### மார்பில்

மார்பில் மச்சம் இருப்பது நல்ல பலன்களை குறிக்கும் என்று சொல்லலாம். மார்பில் மச்சம் உடையவர்கள் பெரும் செல்வந்தராக வாழவில்லையென்றாலும் நிம்மதி கலந்த உற்சாகமும் மகிழ்வும் கொண்டு வாழ்வார்கள். மற்றவர்களுக்கு உதவி புரியும் மனப்பான்மையுடையவர்கள். பிறருக்கு தீங்கு செய்ய நினைக்க மாட்டார்கள். தாங்கள் விரும்பி மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி காண்பார்கள்.

வலது மார்பில் மச்சம் உள்ளவர்கள் வசதியுடையவர்களாக இருந்தாலும் எதிர்பாராத பல கஷ்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நேருவதன் மூலம் சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து துன்பகரமான வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கும். இவர்களுக்கு ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகள் அதிகமாக இருக்கும்.

இடது மார்பில் மச்சம் இருந்தால் ஆண்பிள்ளைகளை அதிகம் பெறுவார்கள். எந்த ஒரு காரியத்தையும் முடித்துவிடக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள். அழகான பெண்களைக் கண்டால் அவர்கள் மீது ஆசை கொண்டு ஏங்குவார்கள். வாழ்க்கைக்குரிய வசதிகள் ஏதுமின்றி ஏழைகளாகவே காலம் கழிப்பார்கள்.

மார்பின் மேல்பாகத்தில் மச்சம் இருந்தால் கோபம் கொள்ளாதவர்களாக இருப்பார்கள். எந்தக் காரியத்திலும் முழுமனதுடன் ஈடுபட்டு செய்து முடிப்பார்கள். தொடங்கிய காரியத்தை முடிக்கும் முன்பு அடுத்த காரியத்தில் ஈடுபட மாட்டார்கள். பிறர் செய்யும் காரியத்தில் குறை காண்பார்கள்.

இடது மார்பில் ஸ்தனத்திற்கு இடதுபுறம் மச்சம் இருந்தால் நெறி தவறிய வாழ்க்கையாளர்களாகவும் நிலையில்லா மனத்தவராகவும் கோபம் நிறைந்தவர்களாவும் இருப்பார்கள். எப்பொழுதும் பிரயாணம் செய்வதில் அதிகமான விருப்பம் உள்ளவர்கள்.

### அக்குளில்

அக்குள் என்பது தோளின் கீழ்ப் பாகம். அக்குளில் மச்சம் உள்ளவர்கள், ஏற்றத்தாழ்வற்ற ஒரே சீரான வாழ்க்கையில் வாழ்பவர்களாவர்.

வலது அக்குளில் மச்சம் இருந்தால் பிறவியிலேயே செல்வந்தராக விளங்குவார்கள். வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்றிருப்பார்கள். நல்லவர் என்று மற்றவர்களால் பாராட்டப் பெறுவார்கள். சுற்றத்தாருடனும் நண்பருடனும் பகிர்ந்துண்ணும் பண்பாளன். தனக்கேற்ற வாழ்க்கைத் துணையின் சேர்க்கையினால் வாழ்க்கை இனிக்கும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

1315

## தேனுக்கு ஆசைப்பட்ட நரி!

சயனாவனம் என்ற காட்டில் பல்வேறு விலங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. இயற்கை எழில் கொஞ்சும் அந்த காட்டில் ஓங்கி உயர்ந்த மரங்களும் நீரோடைகளும் பசும் புல்வெளிகளும் நிறைந்து இருந்தன. இதனால் விலங்குகள் உணவிற்கு பஞ்சமின்றி இருந்தன. அதே சமயம் அந்த காட்டினுள் வாழும் விலங்குகளை மனிதர்களோ பிறரோ துன்புறுத்துவது கிடையாது. வேட்டை யாடுதல் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனால் விலங்கினங்கள் மிகவும் நிம்மதியாக அந்த காட்டில் வாழ்ந்து வந்தது.

அந்த காட்டினில் குள்ள நரி ஒன்று வசித்து வந்தது. அது மிகவும் தந்திரம் கொண்டது. காட்டு ராஜாவான சிங்கத்தின் மந்திரிசபையில் முக்கிய பதவியில் இருந்தது. சிங்க ராஜாவிற்கே ஆலோசனை வழங்கும் பொறுப்பில் இருந்ததால் மிகவும் கர்வத்துடன் அது சுற்றி வந்தது.

அதை கண்டாலே மற்ற விலங்குகள் அஞ்சி நடுங்கி வணக்கம் தெரிவித்தன. அதை மதியாதவர்களை ஏகவசனத்தில் திட்டி அவர்களை தக்க சமயத்தில் பழிவாங்கிக் கொண்டு இருந்தது நரி. இதனால் நரி வருகிறது என்றாலே மற்ற விலங்குகளுக்கு கொஞ்சம் அச்சம்தான். அது என்ன சொல்லுமோ? அதன் வாயில் வீணாக மாட்டிக் கொள்ள வேண்டாமே என்று ஒதுங்கி சென்று கொண்டிருந்தன.

இது நரிக்கு மேலும் கர்வத்தை அளித்தது. தனது சொந்த தேவைகளுக்குக் கூட மற்றவர்களை எதிர்பார்க்க ஆரம்பித்தது. தினமும் ஒருவர் அதற்கு தேவையான உணவுகளை தயாரித்து வழங்க வேண்டும். சிங்க ராஜாவிடம் ஏதாவது உத்தரவை பெற வேண்டுமானால் நரி மந்திரிக்கு தேவையானதை செய்து கொடுப்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இப்படி நரி வைத்ததுதான் சட்டம் என்று அந்த காடே அல்லோ கலப்பட்டது.



ஒருநாள் நரி ஒரு மரத்தின் அடியில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. அப்போது மரத்தின் மேல் இருந்த தேன் கூட்டிலிருந்து தேனை உறிஞ்சிக் கொண்டிருந்தது கரடி ஒன்று. அந்த கரடி அப்படி தேனை உறிஞ்சும் போது ஒரு சொட்டுத் தேன் நரியின் முகத்தில் விழுந்தது. அதை தன் நாவால் நக்கியது நரி. அதன் சுவை அதற்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது.

"ஆகா! என்னே இனிப்பு! என்னே சுவை!" இந்த சுவையை நான் இதுவரை ருசித்ததே இல்லை! இது என்ன உணவு என்று தெரியவில்லையே!" என்று அப்படியே அண்ணாந்து பார்த்தது.

மரத்தின் உச்சியில் கரடி ஒன்று அமர்ந்து தேனை உறிஞ்சுவதை பார்த்து அதற்கு ஆத்திரமாய் வந்தது. இத்துணை சுவை நிறைந்த இதை கரடி உண்பதா? நாட்டின் மந்திரியான நான் அல்லவா உண்ண வேண்டும்? இந்த கரடிக்கு என்ன திமிர்! நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே உண்ணுகிறதே! அதை என்ன செய்கிறேன் பார் என்று மனதிற்குள் நினைத்தபடியே குரல் கொடுத்தது.

"ஓய் கரடியாரே! என்ன உண்ணுகிறீர்?"

"பார்த்தால் தெரியவில்லையா மந்திரியாரே?" கரடி இப்படி திருப்பிக் கேட்டதும் தன் அறியாமையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் "தெரிகிறது தெரிகிறது! ஆனால் உன் வாயால் சொல்லேன்! என்ன உணவு அது?" என்றது நரி

"சுவையான தேன்! இனிப்புத் தேன்! எனக்கு மிகவும் பிடிக்கும்! அதை அருந்திக் கொண்டிருக்கிறேன்!" என்றது கரடி.

"அது சரி! இனிப்புத் தேன் தான்! ஆனால் திருட்டுத் தேனை உண்ணுகிறாயே! உன்னை அரசரிடம் சொல்லி சிறையில் அடைக்க வேண்டும்"

"என்னது திருட்டுத் தேனா? இந்த காட்டில் விளைகிறது! உண்கிறேன்! இது எப்படி திருட்டுத் தேனாகும்?"

"இந்த காடு யாருக்குச் சொந்தம்? இந்த காட்டின் ராஜா யார்?"

"ஏன்? இந்த காட்டின் ராஜா சிங்கம்! என்று எனக்குத் தெரியாதா என்ன?"

"அப்படியானால் தெரிந்தே தான் குற்றம் செய்கி றாயா?"

"தேனைக் குடிப்பது ஓர் குற்றமா?"

"தேன் குடிப்பது குற்றமல்ல! ராஜாவுக்கு சொந்தமான தேனை குடிப்பது குற்றம்"

"இதென்ன விந்தை! தேனீக்கள் கூட்டில் சேமித்து வைக்கும் தேன் எப்படி ராஜாவுக்கு சொந்தமாகும்?"

"சரி! தேன் எப்படி கிடைக்கிறது?"

"பூக்களிலிருந்து தேனிக்கள் சேகரிக்கிறது!"

சரி இந்த காடு யாருக்கு சொந்தம்? சிங்க ராஜாவுக்குத் தானே! அப்படியானால் காட்டில் பூக்கும் பூக்கள் அவருக்குத் தானே சொந்தம்? அப்படி அவருக்கு உரிமையான பூக்களிலிருந்து தேனை திருடுவது தேனிக்களின் குற்றம்! அந்த தேனிக்களை கைது செய்து சிறையில் அடைக்க ராஜா உத்தரவு இட்டுள்ளார். தேனீக்கள் திருடி வைத்ததை நீ திருடி சாப்பிட்டு விட்டாய்! நீயும் குற்றவாளி!"

இப்போது கரடி கொஞ்சம் மிரண்டு போனது! ஆனாலும் விடாமல், "இதென்ன புதுக் கதையாக இருக்கிறதே! கர்லம் காலமாய் நாங்கள் தேனெடுத்துக் கொண்டிருக்கிறோம்! இப்போது"

"காலங்கள் மாறுகிறது கரடியாரே! இப்போது தேன்கூடுகள் அரசுக்கு சொந்தம்! அதை கொள்ளையடித்த உனக்கு என்ன தண்டணை கிடைக்குமோ? தெரியவில்லையே!"

"தெரியாமல் செய்து விட்டேன்! என்னை மன்னித்து விடுங்கள் மந்திரியாரே!"

" நீ செய்தது பெருங்குற்றம்! போனால் போகட்டும்! இந்த சுவையான தேனை தினமும் நீ என் வீட்டிற்கு கொண்டுவந்து தரவேண்டும்! அப்படி செய்தாயானால் உன்னை விட்டு விடுகிறேன்! ஒரு நாள் தவறினாலும் உன்னை ராஜாவிடம் மாட்டிக் கொடுப்பேன்! "

(தொடரும்)

12.2015
24

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1690 - யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- 1715 - சுவீடனின் துருப்புகள் நோர்வேயை ஆக்கிரமித்தன.
- 1777 - கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.
- 1851 - வோஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிடித்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.
- 1906 - ரெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: கிறிஸ்துமஸ் தினத்துக்காக போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1924 - அல்பேனியா குடியரசாகியது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஹொங்கொங் ஜப்பானியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: மலேசியாவின் சரவாக் மாநிலத் தலைநகர் கூச்சிங் ஜப்பானியரிடம் வீழ்ந்தது.
- 1951 - லிபியா இத்தாலியிடமிருந்து விடுதலை பெற்றது. முதலாம் ஜட்ரிஸ் லிபிய மன்னனாக முடிசூடினார்.
- 1954 - லாவோஸ் விடுதலை பெற்றது.
- 1968 - மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தில் நுழைந்தது.
- 1979 - ஆப்கானிஸ்தானின் கம்யூனிச அரசைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானை முற்றுகையிட்டது.
- 1979 - ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியான் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.
- 2005 - யோசப் பரராஜசிங்கம் படுகொலை: இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1818 - ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கில இயற்பியலாளர் (இ. 1889)
- 1822 - சார்ல்ஸ் ஹெர்மைட், ஒரு பிரெஞ்சு கணிதவியலர் (இ. 1901)
- 1837 - பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியா, மற்றும ஹங்கேரியின் அரசி (இ. 1898)
- 1881 - வான் ரமோன் ஹிமெனெஸ், எசுப்பானியக் கவிஞர், இலக்கியத்திற்கான நோபல் பரிசு நோபல் பரிசு பெற்றவர் (இ. 1958)
- 1905 - ஹோவார்ட் ஹியூஸ், அமெரிக்கப் பொறியாளர் (இ. 1976)
- 1924 - முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர் (இ. 1980)
- 1944 - ஆஸ்வால்டு கிராசியாஸ், இந்தியப் பேராயர்
- 1957 - ஹமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்
- 1969 - எட் மிலிபாண்ட், பிரித்தானிய அரசியல்வாதி

### இறப்புகள்

- 1524 - வாஸ்கோ ட காமா, போர்த்துக்கீச மாலுமி (பி. 1460)
- 1950 - பி. ஜி. வெங்கடேசன், திரைப்பட நடிகர்
- 1973 - ஈ. வெ. ராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் (பி. 1879)
- 1987 - எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின் முதலமைச்சர், திரைப்பட நடிகர் (பி. 1917)
- 1997 - டோஷிரோ மிபூன், யப்பானிய நடிகர் (பி. 1920)
- 2005 - ஜோசப் பரராஜசிங்கம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் (பி. 1934)
- 2005 - பி. பானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை (பி. 1925)
- 2008 - ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (பி. 1930)

# புதிய தேசிய அடையாள அட்டை ஜனவரியிலிருந்து விநியோகம்

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் புதிய தேசிய அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் தேசிய அடையாள அட்டைகள் புதிய அட்டைகளாக விநியோகம் செய்யப்படும் என தேசிய ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இதுவரையில் 9 இலக்கங்களில் வழங்கப்பட்டு வந்த தேசிய அடையாள அட்டை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 12 தொடர் இலக்கங்களைக் கொண்டதாக அமையும் என குறிப்பிட்டுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் டி.எம். ரஞ்சனி ஜயகொடி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய இலக்கங்களை கணனிகளில் உள்ளடக்கி மாற்றங்களைச் செய்வதற்கான ஒரு நாள் சேவைக்காக விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் ஆவணங்களை பொறுப்பேற்கும் கால அவகாசம் முற்பகல் 11 மணியுடன் பூர்த்தியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# நீதியை நிலைநாட்ட நடவடிக்கை



கடந்த 20 ஆண்டுகளாக அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக அமைச்சர் கபீர் ஹாஸிம் தெரிவித்தார்.

இந்த நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையானது மூன்று சுற்றுகளாக இடம்பெறும் என்றும், இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யும் நடவடிக்கையில் அரச நிர்வாகத்துறை அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஈடுபட்டு வருகின்றார் என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சித் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலார் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சி அங்கத்தவர்கள் கடந்த காலத்தில் அனுபவித்த துன்பங்களைக் கேட்டறிவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2016 ஆம் ஆண்டு நாம் நடவடிக்கை எடுப்போம்.

மேலும், கடந்த 20 ஆண்டுகளுக்கு அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்ட 35 ஆயிரம் பேரளவில் எமது தலைமையகத்துக்கு முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

இதில் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். இந்த முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்களுள் பரிந்துரை செய்யப்பட்ட முதலாவது தரப்பினருக்கு நிவாரணம் வழங்க அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யவுள்ளார்.

இதேவேளை, எஞ்சியுள்ள அனைவருக்கும் அடுத்து வருகின்ற அமைச சரவைக் கூட்டத்தொடர்களில் இரண்டு அமைச்சரவைப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவுள்ளார்.

மூன்று சுற்றுகளில் இந்தப் பத்திரங்களைத் தாக்கல் செய்து அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்ட தரப்பினருக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கையுடனான இரு தரப்பு உறவை விரிவுபடுத்த விருப்பம்

## சீன ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையுடனான இருதரப்பு உறவுகள் மேலும் விரிவாக்கப்படுவதை விரும்புவதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு, சீன ஜனாதிபதியை சந்தத்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.**

சீனாவுக்கான தூதுவர் நியமனம் தொடர்பான ஆவணங்களை பீஜிங்கில் உள்ள கிரேட் ஹோலில் நடந்த நிகழ்வில், சீன ஜனாதிபதியிடம், கருணாசேன கொடித்துவக்கு கையளித்திருந்தார்.

அதையடுத்து, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கும், இலங்கை தூதுவருக்குக்கும் இடையில் குறுகிய நேர கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இதன் போது, இலங்கைக்கான தனது பயணத்தை நினைவு கூர்ந்த சீன ஜனாதிபதி, இருநாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் வரலாற்று ரீதியான உறவுகள் குறித்தும் எடுத்துக் கூறியுள்ளார். இலங்கையின் புதிய தூதுவரின பதவிக்காலத்தில், சீன- இலங்கை இருதரப்பு உறவுகள், மேலும் விரிவடையும் என்று எதிர் பார்ப்பதாகவும, சீன ஜனாதிபதி தெரிவித்தார். (இ)

# கொச்சி துறைமுகத்தில் இலங். போர்க்கப்பல்கள்

இலங்கை கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் இந்தியாவின கொச்சி துறைமுகத்துக்கு மூன்று நாட்கள் பயணத்தை மேற்கொண்டுள்ளன.

இலங்கை கடற்படையின் பாரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பலான, எஸ்.எல்.என்.எஸ். சமுததிர, அதிவேக ஏவுகணைக் கப்பலான எஸ்.எல்.என். எஸ். நந்திமித்ர ஆகிய இரண்டு போர்க்கப்பல்களுமே, கொச்சி துறைமுகம் சென்றுள்ளன.

இந்தப் போர்க்கப்பல்களின் கட்டளை அதிகாரிகளான கப்டன் டி.எஸ்.டயஸ், கப்டன் எம்.எஸ். செனிவிரத்ன மற்றும் டில்லியில் உள்ள இலங்கை தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரசன்ன ஹெவகே ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்படையின் தென்பிராந்திய தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஆர்.பி.பண்டிட்டை சந்தித்து பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

இலங்கை போர்க்கப்பல்கள் கொச்சி துறைமுகத்தில் தங்கியிருக்கும் போது, இருநாட்டு கடற்படையினரும் இணைந்து பல்வேறு, துறைசார் செயற்பாடுகளில் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் இந்தியக் கடற்படையின் தென்பிராந்திய தலைமையகத்தின் பயிற்சி வசதிகளையும், இலங்கை கடற்படையினர் பார்வையிடவுள்ளனர்.

இலங்கையின் போர்க்கப்பல்கள இரண்டும், கொச்சி துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் அதிகாரமும்

ஒரு ஊரிலே மன்னன் இருந்தார்.

அவர் அயலில் உள்ள தேசத்துடன் படையெடுக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். அந்த இடத்தையும் தனது நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது அவரது ஆசை. எப்போது படையெடுக்கலாம் என்று யோசனை செய்தார்.

இப்படியாக யோசனை செய்து கொண்டிருந்த சமயத்திலே ஒரு பெரியவர் அவரைத் தேடிவந்தார். "என்ன மன்னா யோசனை?" என்றார்.

மன்னர் தனது யோசனையைச் சொன்னார்.

இந்த வேளையிலே மன்னருக்குத் தாகம் எடுத்தது. தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. உடனே அரண் மனை பணியாளரைக் கூப்பிட்டார்.

"போய் எனக்கு தண்ணீர் கொண்டுவா" என்று சொன் னார். அவர் சென்று ஒரு குவளையிலே தண்ணீர் கொண்டு வந்து ராஜாவிடம் கொடுத்தார். ராஜா அதை வாங்கி குடிப்பதற்காக வாய்க்கருகில் கொண்டு சென்றார்.

அந்த நேரத்திலே, "மன்னா... சற்று பொறுங்கள்!" என்று அந்தப் பெரியவர் சொன்னார். ஆவலோடு தண்ணீரைப் பருக வாய்க்கருகில் கொண்டு சென்ற மன்னன் அப்படியே நிறுத்திக் கொண்டார். பெரியவரை பார்த்தார்.

உடனே அந்தப் பெரியவர் சொன்னார்.

"மன்னா இப்போது உங்களை விட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்கு தண்ணீர் கொடுக்க மறுக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியென்றால் இப்போது ஒரு குவளை தண்ணீரை என்ன விலை கொடுத்து வாங்கு வீர்கள்?" என்று கேட்டார்.

"இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு... என்னுடைய அரசாங்கத்திலே பாதியையாவது கொடுத்து இந்த தண் ணீரை வாங்கத் தயங்கமாட்டேன்" என்றார்.

"சரி இப்போது கையிலுள்ள தண்ணீரை பருகுங்கள்" என்றார் பெரியவர்.

மன்னர் ஆவலாக தண்ணீரை பருகி முடித்தார். சற்று நேரம் கடந்த பின்னர் மறுபடியும் இந்தப் பெரியவர் பார்த்துக் கேட்டார், "மன்னா... நீங்கள் ஒரு குவளை தண்ணீரை குடித்து முடித்து விட்டீர்கள்.... இப்போது அந்தத் தண்ணீர் வெளியில் வரக்கூடிய பாதை அடைப்பட்டு போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை வெளியேற்றுவ தற்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்வீர்கள்? என்று கேட் டார்.

மன்னர் யோசித்தார். "அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், என்னுடைய அரசாங்கம் பூராகவும் அதற்கு ஈடாக தரவும் தயங்க மாட்டேன்" என்றார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார் "எந்த அரசாங் கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையோ அந்த அரசாங்கத்தை அடைய வேண்டுமென்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே... அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" என்றார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதிலே தெளிவு உண்டானது. தன் மனதிலே உண்டான வெறியை விரட்டி அளித்தார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி செய்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

80

## ஜெமனியின் "இன்சானியத்" மாபெரும் வெற்றி

**ஜிப்பி**

இப்படத்தில் இன்னொரு பெரிய சிறப்பு என்ன வென்றால் ஜிப்பி என்ற மனிதக் குரங்கு முக்கிய வேடத்தில் நடித்தது!

இதில் நடிப்பதற்கு என்றே ஜிப்பி அதன் முதலாளியுடன் அமெரிக்காவில் இருந்து சென்னைக்கு விமானத்தில் பறந்து வந்தது.

**ஜெமினி ஸ்டூடியோவில் ஜிப்பிக்கு ராஜமரியாதை!**

பொதுவாக நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணுகளுடன் பழகாத வாசன், ஜிப்பியுடன் அன்புடன் பழகினார். அதன் காரணமாக படத்தில் ஜிப்பி பிரமாதமாக நடித்தது.


படத்தில் திலீப்குமாருக்கு உதவியாக பல வீர தீரச் செயல்களை ஜிப்பி செய்யும். குழந்தையை வில்லனிடமிருந்து காப்பாற்றும்! கத்திச்சண்டை கூடப்போடும்!


இன்சானியத் ஓகோ என்று ஓடியது. நடிப்பில் ஜிப்பிக்குத்தான் முதல் இடம்!

குரங்கு சேஷ்டைகள் செய்யும் பையனை ஜிப்பி என்று கிண்டல் செய்யும் பழக்கம் இனிசானியத் படத்துக்குப் பிறகுதான் வந்தது.

**இரும்புத் திரை**

பிறகு ஜெமினி உருவாக்கிய பிரமாண்டமான சமூகப் படம் இரும்புத்திரை. இதில் சிவாஜி கணேசனும் வைஜெயந்திமாலாவும் ஜோடியாக நடித்தனர்.





**ஜெமினி படத்தில்**

சிவாஜி கணேசன் நடிப்பது அதுவே முதல்முறை. சிவாஜியை காதலித்து தோல்வியடையும் வேடத்தில் சரோஜா தேவி நடித்தார்.

இதில் இன்னொரு விசேஷம் வைஜயந்தி மாலாவின் தாயார் வசுந்தராதேவி, நீண்ட இடைவெளிக்குப் பின் இப்படத்தில் நடித்தார்.

சொந்த வாழ்க்கையில் தாயும் மகளுமான வசுந்தராவும் வைஜயந்திமாலாவும் குடும்பப் பிரச்சினைகளால் பிரிந்திருந்தனர். அவர்களை ஒன்று சேர்த்து தாயும் மகளுமாகவே நடிக்க வைத்தார் வாசன்.

இரும்புத் திரை ஒரே நேரத்தில் பைகாம் என்ற பெயரில் இந்தியிலும் தயாராகியது.

இதிலும் வைஜயந்தி மாலா தான் கதாநாயகி அவருக்கு ஜோடியாக திலீப்குமார் நடித்தார்.

தமிழ், இந்தி இரு படங்களையும் வாசன் டைரக்ட் செய்தார். வசனத்தை கொத்தமங்கலம் சுப்பு எழுதினார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாபநாசம் சிவன், கொத்தமங்கலம் சுப்பு ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு இசை: எஸ்.வி. வெங்கட்ராமன்.

1960 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி பொங்கல் அன்று வெளியான இரும்புத் திரை வெற்றிப்படமாக அமைந்தது. எனினும் தமிழ்ப் படத்தை விட இந்தி பைகாம்தான் சூப்பர் ஹிட்!

**மோட்டார் சுந்திரம்பிள்ளை**

படத் தொழிலில் இளைய தலைமுறையினர் தலையெடுக்கத் தொடங்கிய காலகட்டத்தில் தன் மகன் எஸ்.பாலசுப்பிர மணியனையும் படத் தொழிலில் ஈடுபடச் செய்ய விரும்பிய எஸ்.எஸ். வாசன், அதற்கான பயிற்சிகளைக் கொடுத்தார். (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 347

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...நீங்கள் மனதிலிருந்து இயங்கிக்கொண்டிருக்கும் வரை மேலும் மேலும் கேட்டுக்கொண்டுதான் இருப்பீர்கள். ஆராய்ந்து பகுத்து இறுதியில் அதிருப்தியில் வந்து முடித்து விடுவீர்கள்.

இதயத்திலிருந்து இயங்கும்பொழுது உங்களுடைய எல்லா ஆராய்தலும் நின்றுவிடும். நீங்கள் கடந்த காலத்தை கூறுபோட்டு பார்க்கவும் மாட்டீர்கள்.

எதிர்காலத்தை நினைத்து கவலைப்படவும் மாட்டீர்கள். எந்தவிதமான எடை போடுவதலும் இன்றி வெறுமனே நிகழ்காலத்தில் இருப்பீர்கள்.

இந்த நிலையில் நீங்கள் திருப்தியுடனும் நன்றியுணர்வுடனும் மட்டுமே இருப்பீர்கள். உங்களுக்குள் ஒரு புதிய வெளி திறக்கப்பட்டிருக்கிறது.

இந்த வெளியை நீங்கள் கண்டுபிடித்துவிட்டால் இதற்கு முன்பு நீங்கள் எதிர்மறை எண்ணங்களாலும் அதிருப்தியாலும் செலவழித்த எல்லா சக்தியும் விடுவிக்கப்பட்டு நீங்கள் சக்தியால் நிரப்பப்பட்டு ஆனந்தமயமாகவும் ஒருங்கிணைக்கப்பட்டதாகவும் உணர்வீர்கள்.

பிறகு நன்றியுணர்வே உங்கள் பிரார்த்தனையாகிவிடும்; நன்றி என்பது உங்கள் மந்திரமாகிவிடும்!

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையை நோக்கிய நன்றியுணர்வு நிலையில் இருக்கும்பொழுது உங்களுக்குள் பொங்கும் சக்தியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.



இது அனுபவபூர்வமாகத்தான் புரிந்துகொள்ளப்பட வேண்டும். உங்கள் வழியில் வரும் ஒவ்வொரு விடயமும் மிகுந்த திருப்தியைக் கொடுக்கும்.

அது பிரபஞ்ச இருப்புத் தன்மையிலிருந்து மேலும் மேலும் ஈர்க்கும்; பிரபஞ்ச இருப்புத் தன்மை உங்கள் மீது பொழிந்து கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

திடீரென்று எல்லாம் ஒருபுதிய பரிமாணத்தை எடுத்துவிடும். மேலும் மேலும் அதிகமான ஆனந்தத்தை உணர முடியும். உங்களைக் கடந்து செல்லும் ஒவ்வொரு கணமும் உங்களைத் திக்குமுக்காடச் செய்யும். வெறுமனே இருத்தலே மிகவும் தாங்க முடியாததாகத் தோன்றும். இதை உங்களுக்கும் இந்த உலகம் முழுவதற்குமே ஒரு .ஆசீர்வாதமாக உணர்வீர்கள்.

நீங்கள் கேட்கும் பொழுது தெளிவாகத் தவறவிட்டு விடுகிறீர்கள்; நன்றியுணர்வுடன் இருக்கும் பொழுது பொழியப்படுகிறீர்கள்.

எப்பொழுதும் வெறுமனே நன்றியுணர்வுடன் இருங்கள். அதுவே அனைத்திற்கும் பிரதான திறவுகோலாகும். ஆன்னால் அந்த நன்றியுணர்வு உங்கள் இருப்புத் தன்மையிலிருந்து வரவேண்டும்.

புற விளிம்பிலிருந்து அல்ல. இருப்புத் தன்மையிலிருந்து நன்றியுணர்வு வரும்பொழுதுதான், விடயங்கள் நிகழ ஆரம்பிக்கும்.

உறங்கச் செல்லும் பொழுது இன்னொரு நாள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இருந்ததற்கான நன்றியுணர்வுடன் உறங்கச் செல்லுங்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# சரத்பொன்சேகாவை சிறையிலடையுங்கள்

(கொழும்பு)

**பீல்ட் மார்ஷல்சரத்பொன்சேகாவை உடன் கைது செய்ய வேண்டும் என்று "தாயநாட்டுக்கான இராணுவஅமைப்பு" கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அந்த சங்கத்தின் தலைவர் மேஜர் அஜித் பிரசன்ன இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.**



ஊடகவியலாளர்மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் ஃமைக்கல் பேரேரா வெளியிட்ட கருத்தை அடிப்படை யாக கொண்டே அவர இந்தக்கோரிக்கையை விடுத்தார்.

சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போது அவருடைய விசேட குழு ஒன்றே, கீப்னொயா என்பவரை தாக்கியது என ஜோசப் மைக்கல் பேரேரா நாடாளுமன்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே இதனடிப்படையில் சரத் பொன்சேகா கைது செய்யப்படவேண்டும் என்று அஜித் பிரசன்ன கோரிக்கை விடுத்தார். பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி தெரிவித்த கருத்து தொடர்பிலும் அஜித் பிரசன்ன கருத்து தெரிவித்தார்.

இறுதி யுத்தகாலத்தில் விடுதலைப்புலிகளுடனானமோதலில் தமிழ் மக்களை தொகுதிகளாக கொலை செய்வதற்கு இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாக பிரகீத் எக்னெலிகொட ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.

இது சம்பந்தமாக அவரை பழிவாங்கும் நோக்கிலேயே அவர் கடத்தப்பட்டார் என சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

எனினும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் ஹுசேனின் அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் இலங்கை இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி மக்களை கொன்றதாக தெரிவிக்கப்படவில்லை.

அப்படியானால் இரசாயன ஆயுதம் பயன்படுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்ட செய்தி பொய்யானது என்று பிரசன்ன தெரிவித்தார்.

இந்தநிலையில் சந்தியாவை ஏன் இந்த பொலிஸார் விசாரணை செய்யவில்லை என்றும் பிரசன்ன கேள்வி எழுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## புவனேந்திரன் தயாபரன்

(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)



(சி-3087)

காற்றாகி எங்கள்
மூச்சாகி - எம்
இதயத்தில்
கலந்த செல்வமே
நின் சிரிப்பும் செல்லச்
சேட்டைகளும்
எம் கண்முன்னே
நிழலாடுதடா
நீ இன்றிய வாழ்வை
யாரால் நிரப்பிட
முடியும் நீ என்றும் எம்
நினைவுகளில்
தெய்வமாக

பிறப்பு 2000 09 10

இறப்பு 2015 01 03


குமுழமுனை
வல்லவராயன்கட்டு, முழங்காவில்
தொடர்பு- 077 305 8786

உன் பிரிவால் துயருறும:- தந்தை-புவனேந்திரன், தாய்-உதயநந்தினி, தங்கை-அகநிலா, தம்பி-நிலவன், சித்தி-பிரபாழினி, அத்தை-ராஜி, தர்ஷி (பிரான்ஸ்), மாமா-ஜெயதாஸ் , சித்தப்பா-வசந்தன், சயந்தன்.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 583

Search for people, places and things Nagendram Home

ஜனகா




மஞ்சு





தர்ஷிகா




சர்மினி



சியானா



ஸ்றா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொன்சேகாவை அமெரி. கை கழுவியதா?

இலங்கையுடனான உறவுகளை அமெரிக்கா வலுப்படுத்திக் கொண்டுள்ள போதிலும், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய விவகாரங்களில், தனது பிடியை அமெரிக்கா தளர்த்திக் கொள்ளவில்லை என்பதை ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் வீசா விண்ணப்பத்தை அமெரிக்கா முடக்கியுள்ளதன் மூலம் உணர முடிகிறது.

முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் தங்கியுள்ள தனது இரு மகள்மாரையும் பார்வையிடுவதும், அங்குள்ள இலங்கையர்களுடன் கலந்துரையாடல் நடத்துவதும்தான் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவின் பயணத் திட்டத்துக்கான அடிப்படைக காரணமாகக் கூறப்படுகிறது.

அதற்காக அவர் விமானப் பயணச் சீட்டையும் முன்பதிவு செய்திருந்தார்.

வீசாவுக்கு விண்ணப்பித்து இரண்டு வாரங்கள் ஆகிய போதிலும் கொழும்பிலுள்ள 'அமெரிக்கத் தூதரகம் அவரது வீசா விண்ணப்பம் தொடர்பாக எந்தப் பதிலையும் வழங்கவில்லை.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இதுபற்றி அமெரிக்கத் தூதரகத்திடம் தொடர்பு கொண்டபோது வீசா விண்ணப்பத்துக்கு இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை என்று பதிலளிக்கப்பட்டதாக சரத் பொன்சேகாவின் செயலாளர் சேனக டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்பதிவு செய்திருந்த விமானப் பயணச் சீட்டை சரத் பொன்சேகா கடைசிநேரத்தில் ரத்துச்செய்ய நேரிட்டதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் உள்ள இலங்கைச் சமூகத்தினரைச் சந்திக்க வருமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமே சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்திருந்ததாகவும், ஆனால் அவருக்கு வீசா வழங்க அவர்களே மறுத்தது குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் கூறியிருக்கிறார் சேனக டி சில்வா.

அமெரிக்காவில் வதிவிட உரிமையைப் பெற்றிருந்த சரத் பொன்சேகா கடந்த ஐந்து ஆண்டுகளாக அங்கு பயணம் மேற்கொள்ளாத நிலையில் அவரது வதிவிட உரிமை காலாவதியாகி இருந்தது.

சரத் பொன்சேகாவின் விசா விண்ணப்பத்தை பகிரங்கமாக நிராகரிக்காமல் அதனை முடக்கி வைத்திருந்து அவரது பயணத்தை தடுத்திருக்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை புதியதொரு விடயமல்ல. ஏனென்றால் கடந்த காலங்களில் இலங்கை இராணுவ அதிகாரிகள் பலருக்கு அமெரிக்கா இவ்வாறு விசா வழங்க மறுத்திருக்கிறது.

மேயர் ஜெனரல் ஜெகத் டயஸ், மேயர் ஜெனரல் சுகந்த ரணசிங்க, மேயர் ஜெனரல் சவேந்திர சில்வா போன்றவர்களுக்கு அமெரிக்கா விசா வழங்கவில்லை. அல்லது தமது பாதுகாப்புக் கல்லூரிகள் பயிற்சிக் கருத்தரங்குகளில் அனுமதி வழங்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இராணுவத்தினர் மீதான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளைக் காரணம் காட்டியே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவின் விசா நடைமுறைகளின்படி தனது விசா விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என்பதை சரத் பொன்சேகா உணராது இருந்திருக்கமாட்டார்.

ஏனென்றால் சரத் பொன்சேகாவே இறுதிக்கட்டப் போருக்குத் தலைமை தாங்கியவர். போருக்குத் திட்டமிட்டு தலைமை தாங்கி இராணுவத்தை வழிநடத்தியவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவேதான்.

இறுதிக்கட்டப் போரில் மீறல்கள் இடம்பெற்றன என்பது சர்வதேச சமூகத்தின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது.

இந்த விடயத்தில் அமெரிக்கா இன்னும் கூடுதலான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

அமெரிக்காவிடம் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் பற்றிய ஆதார பூர்வமான சான்றுகளும் சாட்சியங்களும் இருப்பதாகப் பரவலான கருத்துகள் உள்ளன.

குறிப்பாக போர் நடந்த பகுதிகளில் அமெரிக்கா செய்மதி மூலம் படங்களை எடுத்திருந்தது. அவை போர்க்குற்றங்களுக்கான வலுவான ஆதாரங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

இவைதவிர வேறு பல நேரடி சாட்சிகளையும் அமெரிக்கா வைத்திருப்பதாக கூறப்படுகின்றது.

அவற்றில் சில இராணுவ அதிகாரிகளும் அடங்கியிருப்பதாகவும் முன்னர் தகவல்கள் வெளியாகின.

ஆனால் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சோகாவைப் பொறுத்தவரையில் தான் நடத்திய போரில் போர்க்குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதே அவரது உறுதியான நிலைப்பாடு.

எனினும் வெள்ளைக்கொடி விவகாரம் உள்ளிட்ட ஒரு சில விதிவிலக்கான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனாலும் போர்க்குற்றங்கள் இடம்பெற்றது நிரூபிக்கப்பட்டால் அதற்குத் தான் பொறுப்பேற்றகத் தயார் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்திற்கு பொறுப்பானவர் என்ற வகையில் சரத் பொன்சேகா அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும் தனது இராணுவம் தவறு செய்யவில்லை என்பதே அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

தனக்குத் தெரியாமல் மேலிருந்து இடப்பட்ட உத்தரவுகளால் எங்கேனும் ஒன்று இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தால் அவற்றுக்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

இந்தச்சூழலில்தான் சரத் பொன்சேகாவுக்கான கதவை அமெரிக்கா அடைத்திருக்கிறது. போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் நிலையில் அவருக்கு விசா வழங்காமல் விட்டதன் மூலம் அமெரிக்கா ஒரு செய்தியைக் கூற வந்திருக்கிறது.



இலங்கையுடன் அண்மையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கங்கள், போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்ற அமெரிக்க கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தாது என்பதே அந்தச் செய்தி.

சரத் பொன்சேகா ஒன்றும் அமெரிக்காவுக்கு விரோதமானவர் அல்ல. அமெரிக்காவின் ஆசியுடன்தான் அவர் 2010 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

அதைவிட கடந்த 2010 ஆம் ஆண்டு கடைசியாக அமெரிக்கா சென்றிருந்த சரத் பொன்சேகாவிடம் அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்திருந்தனர்.

அந்த விசாரணையை கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான சாட்சியத்தை திரட்டும் நோக்கில் நடத்தப்பட்டதாகவே மகிந்த ராஜபக்ஷ தரப்பு குற்றஞ்சாட்டியது.

விசாரணை நடத்தப்படவுள்ளது என்பதை அறிந்து சரத் பொன்சேகாவை உடனடியாக நாடு திரும்புமாறு கோத்தபாய ராஜபக்ஷ பணித்திருந்தார்.

சரத் பொன்சேகா அதற்குப் பின்னர் அமெரிக்கா சென்றிருக்கவில்லை. அதனால் அவர் எந்தச் சர்ச்சைகளுக்குள்ளும் சிக்கிக் கொள்ள நேரவில்லை.

இப்போது அவர் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பித்து அது நிராகரிக்கப்பட்டுள்ளதன் மூலம் அவர் தன்னைச் சர்வதேச கண்காணிப்புக்குரியவர் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்.

மனித உரிமை மீறல்களைக் காரணம் காட்டி இலங்கைப் படை அதிகாரிகளுக்கான பயிற்சிகளை நிராகரிக்கக்கூடாது என்று அமெரிக்காவிடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஆனால் அமெரிக்கா இந்த விடயத்தில் அவ்வளவு இறங்கிப் போகத் தயாராக இல்லை.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சிக்கியவர்களைத் தனது நாட்டுக்குள் அனுமதிக்க அமெரிக்கா தயாராக இல்லை.

இலங்கை விவகாரத்தில் விட்டுக் கொடுத்தால் வேறு பல நாடுகளில் உள்ள பலரும் அதே வழியைப் பின்பற்ற முனைவார்கள் என்று அமெரிக்கா கருதுகிறது.

அண்மையில் இலங்கை வந்த அமெரிக்க உயர் அதிகாரிகளான சமந்தா பவரும், தோமஸ் சானொனும் கூட மனித உரிமைகள் நிலையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருக்கின்றனர்.

இதனை அடிப்படையாக வைத்தே பாதுகாப்புச் சார்ந்த உறவுகளுக்கான கதவைத் திறக்க திட்டமிட்டிருக்கிறது அமெரிக்கா.

அரசாங்கம் நடத்தவுள்ள போர்க்குற்ற விசாரணைகளின் போக்குத்தான் சரத் பொன்சேகாவுக்கு மட்டுமன்றி ஏனைய இலங்கைப் படை அதிகாரிகளுக்கும் அமெரிக்க விசா கிடைக்குமா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கும்.

சுபத்ரா



# குறைகேள் அரங்கு...

## மூத்த பிரஜைகள் ஏமாற்றம்

70 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு மாதா மாதம் உதவித் தொகையாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற அரசின் வாக்குறுதியை நம்பி அதைப்பெற்றுக் கொள்ளும் மூத்த பிரஜைகள் பலரும் உரிய அதிகாரிகளை அணுகியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என மூத்த பிரஜைகள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

நாடு தழுவிய ரீதியில் கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதியோர் தினம் கொண்டாடிய இந்த நல்லாட்சி அரசாங்கம் முதியோருக்கு கொடுத்த வாக்குறுதிப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்களை வழங்குவதில் ஏன் காலதாமதம் காட்டுகின்றது எனப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு வழங்கும் பணிப்புரைகள் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை என்று மூத்த பிரஜைகள் கவலை வெளியிட்டுள்ளனர். அரசு அறிவித்தபடி கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு இல்லையா? என மூத்த பிரஜைகள் கேள்வி யெழுப்பியுள்ளனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதி நினைவுக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் "கைலாசபதியும் ஒப்பியல் இலக்கியமும்" என்ற தலைப்பில் தொடக்கவுரையினை யா/யூனியன் கல்லூரி உப அதிபர் வே.சேந்தனும் கருத்துரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.குமரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இக்கருத்துரையினை தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (இ)

# பால்மா விலை அதிகரிக்காது

இறக்குமதி செய்யப்படும் பால் மாக்களின் விலைகள் எந்தவிதத்திலும் அதிகரிக்கப்படமாட்டாது என கைத் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களின் விலை அதிகரிக்கப்பட வுள்ளதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் 2016ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் போது தெரிவிக்கப்பட்ட விதத்திலேயே பால்மாக்களின் விலைகள் அமையும் எனவும். இது தொடர்பில் பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுமேயானால். அவர்களுடன் கலந்துரையாடத் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

## 2236 சுற்றிவளைப்புக்கள்

கிறிஸ்தவப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபை நாடு முழுவதும் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 64 இலட்சம் ரூபாவை அரசாங்கத்து க்குப் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. நுகர்வோர் விவகார சட்டத்தை மீறிய வியாபாரிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் மூலம் இந்த நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

2236 சுற்றிவளைப்புக்களை அதிகார சபை அதிகா ரிகள் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக பொருட்களை விற்பனை செய்தல். விலை காட்சிப்படுத் தாமை. பற்றுச் சீட்டு வழங்காமை. தரமற்ற பொருட்களை விற்பனை செய்தல் உட்பட நுகர்வோர் சட்டத்தை மீறிய பல வியாபாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

இந்த சுற்றிவளைப்புக்கள் டிசெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் நேற்றுமுன் தினம்வரை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை அறிவித்துள்ளது. (இ)

## நாலக உட்பட மூவருக்கு மறியல்

நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் நாலக கொடஹேவா உட்பட மூவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர்கள். பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் கடந்த 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற 5 மில்லியன் ரூபாய் மோசடி தொடர்பிலேயே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே அவர்களது விளக்கமறியல் நடிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ்ச்சங்கத்தின் நாவலர் விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் ஆறுமுகநாவலர் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவரும் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினருமாகிய பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மக்கள் வங்கி உத்தியோகத்தர் சி.சசீவன் நாவலர் வணக்கப்பா இசைக்கின்றதுடன் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.ஐங்கரன் வரவேற்புரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்கவுரையையும் நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது 'நாவலர் கனவு' என்ற பொருளில் சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சிறப்புரையாற்ற வுள்ளார். தொடர்ந்து நாவலர் வழியில் நாம் நடக்க பெரிதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவரின் எப்பணி என்ற பொருளில் தமிழ்ச்சங்க உபதலைவர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கருத்தாடற்களம் இடம்பெறும். இதில் ஆன்மீகப் பணியே என கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண் முகனும். கல்விப் பணியே என சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க கண்டுவும். சமூகப்பணியே என யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரை யாளர் சி.ரமணராஜாவும். அரசியல் பணியே என உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.செல்வமனோகரனும் கருத்துரைக்கவுள்ளனர்.

நிறைவு நிகழ்வாக கலைமாமணி சிறுப்பிட்டியூர் சத்திதாஸ் வில்லிசைக் குழுவினர் வழங்கும் காலத்தை வென்ற காவலன் என்ற பொருளில் வில்லிசை இடம்பெறும். (இ-5)

# தாயிடம் இருந்து குழந்தைகளுக்கான எச்.ஐ.வி. தொற்றுதலை தவிர்ப்போம்

உலக எயிட்ஸ் தினம் மார்கழி முதலாம் திகதி கொண்டாடப்படும். இவ் வேளையில்எச்.ஐ.வி வைரஸ் உலகளாவிய ரீதியில் சமூக நலனிற்கும் அபி விருத்திக்கும் மிகப்பெரிய சவாலாக விளங்குவதை அறிவீர்களா?

உலகளாவிய ரீதியில் 35.5 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி. தொற்றுடன் வாழ்வதாக 2012 இல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17.7 மில்லியன் பெண்களும் 2 இலட்சம் சிறார்களும் அடங்குவர். இதே வேளை கருத்தரிக்கும் பருவ மங்கையரின் (Reproductive age group) மரணத்திற்கு பிரதான காரணிகளில் ஒன்றாக எச்.ஐ.வி. விளங்குகின்றது.

இலங்கையில் 2014 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக்கமைய 1278 ஆண்களும் 796 பெண்களும் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் அதிகரித்துவரும் மதுபாவனை, போதைப் பொருள் பாவனை, தவறான இணையத்தளங்களின் பாவனை போன்றவற்றின் தூண்டுதலினால் ஏற்படும் தவறான பாலியல் நடவடிக்கைகள் எச்.ஐ.வி. தொற்றுக்கான வாய்ப்புகளை மேலும் அதிகரித்துள்ளது.

துவறான பாலியல் தொடர்பு காரணமாக எச்.ஐ.வி.யினால வயதுவந்தோர் பாதிக்கப்படுகின்ற அதேவேளை குழந்தைகள் பிரதான எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான தாயிடமிருந்து கர்ப்பகாலத்திலும் பிரசவத்தின் போதும், பிறந்த பின் தாய்ப்பாலினூடாகவும் எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாகுவா. இலங்கையில் தாயிடமிருந்து குழந்தைக்கு பரவிய எச்.ஐ.வி. தொற்றினால் 71 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளதுடன் இத்தொகை 100 இற்கு மேல் காணப்படலாம் என்ற அச்சமும நிலவிவருகின்றது.

தாய், தந்தையருடைய தவறினால் ஏதுமறியாத குழந்தையொன்று எச்.ஐ.வி. தொற்றுடன் பிறப்பதை எவ்வாறு அனுமதிக்கலாம். வருங்கால சந்ததி முளையிலேயே கருகுவதை அனுமதிக்கலாமா? எனவே திருமணத்திற்கு முன்னரான பாலியல் தொடர்புகளை அறவே தவிர்த்தலும் உங்கள் வாழ்க்கைத் துணை அல்லாத ஒருவருடன் பாலியல் ரீதியான தொடர்புகளை முற்றாக தவிர்ப்பதன மூலமும் எச்.ஐ.வி. தொற்றிலிருந்து ஒருவர் தன்னைப் பாதுகாக்க முடியும். ஒருவேளை வாழ்க்கைத்துணை எச்.ஐ.வி. தொற்றுககு ஆளாகியிருப்பதை அறிந்திருந்தால் அருகிலுள்ள பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் நோய்க்கான சிகிச்சை நிலையத்தில் அதற்கான தடுப்பு மருந்துகளையும மருத்துவ ஆலோசனைகளையும் பெறுவதன் மூலமும் தானும் தன்னுடைய வாழ்க்கைத் துணையும் நீண்ட காலம் நலமாக வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். தொற்றுக்குள்ளான நபர் மூலமோ அல்லது எச்.ஐ.வி. தொற்றுள்ள பெண்ணோ கர்ப்பமடைவதைத் தவிர்ப்பது சாலச் சிறந்ததாகும்.

எனினும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான ஒருபெண் கர்ப்பமடைவாராயின் முதல் 14 வாரங்களுக்குள் அவர் எச்.ஐ.வி.நோய்த் தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் நோய்க்கான சிகிச்சை நிலையங்களில் பெற்றுக் கொள்வாராயின் தொற்றுநிலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு தாயிலிந்து வயிற்றில் வளரும் குழந்தைக்கான எச்.ஐ.வி. தொற்றை முற்றாகத் தவிர்க்க முடியும்.

இன்றையகாலகட்டத்தில் தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் உதவியுடன் ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்மார்களும் தமது பிரதேச ஆரம்ப சுகாதார கர்ப்ப கால சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்யும்போது எச்.ஐ.வி. திரையிடல் பரிசோதனையை பெற்றுக் கொளள கூடியதாக ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் எச்.ஐ.வி. தொற்று உறுதிப்படுத்தப்படுமிடத்து எச்.ஐ.வி. மற்றும்எயிட்ஸ் (AIDS) மருத்துவ நிபுணர், குழந்தை நலநிபுணர் ஆகியோரின் ஒருங்கிணைந்த ஆலோசனைப்படி குழந்தை பிறப்பு, குழந்தை பிறந்த பின்னர் பாலூட்டும் வழிமுறைகள், குழந்தைக்கான எச்.ஐ.வி. தொடர்பான சிகிச்சை என்பவற்றைப் பெற்று எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பிறக்கும் குழந்தையை பாதுகாத்துக் கொள்ள முடியும். அணுவளவு உள்ள வைரஸ் ஆறறிவு படைத்த மனிதனின் அபிவிருத்தியை சிதைப்பதை அனுமதிப்பதா? தங்கள் குழந்தை மீதும், குடும்பத்தின் மீதும் தேசத்தின் மீதும் அக்கறை கொண்டவர்கள் இதை அனு மதிக்கலாமா? சற்றே சிந்திப்போம்.

வைத்திய கலாநிதி
எம்.தக்ஷாயினி

# அடுத்த வருடம் ஜூலை முதல் பொலித்தீன் பாவனைக்கு தடை

உணவுப் பொருட்களை பொதியிடப் பயன்படுத்தும் பொலித்தீனை (லஞ்சீட்) தடை செய்வதற்கு சுற்றுச் சூழல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த திட்டத்தின் முதற் கட்டமாக எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் லஞ்சீட் பாவனையினை தடை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

லஞ்சீட் பாவனைக்கு பதிலாக உணவுப் பொருட்களை பொதியிடுவதற்குப் பொருத்தமான பாத்திரங்கள் மற்றும் வாழை இலையை பயன்படுத்துவதற்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன் வைக்கவுள்ளதாக சுற்றுச் சூழல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொலித்தீன் பாவனையினை முழுமையாக இல்லாதொழிப்பதனை பிரதான நோக்கமாகக்கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இத்திட்டத்தை எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சுற்றுச் சூழல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் மேர்வின் லால் தர்மசிறி தெரிவித்துள்ளார். இதன் முதற கட்டம் அரச சேவைகள் திணைக்களம் மற்றும் கல்வியமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் லஞ்சீட் பாவனையினை தடைசெய்யும்வேலைத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் மற்றும் அரச, தனியார் துறை யினர் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் முனனெடுக்கப்படவுள்ளன. (இ)

# ரயில் மிதிபலகையில் பயணம் ஆபத்தை உணராத பயணிகள்

புகையிரதத்தில் மிதி பலகையில் பயணம் செய்தல் தடைசெய்யப்பட்டும் இன்றும் பயணிகள் மிதிபலகையில் நின்று பயணிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிரத மிதி பலகையில் நின்று பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று புகையிரதத் திணைக்களம் பயணிகளுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதனையடுத்து இறுதி காலம் மிதி பலகையில் நின்று பயணம் செய்யும் பயணிகளது எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டது.

ஆனால் தற்போது மீண்டும் மிதி பலகையில் நின்று பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது.

இவ்வாறான பயணம் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதுடன் பல அசம்பாவிதங்கள் இதுவரை ஏற்பட்டுமுள்ளது.

. இப்பயணங்கள் புகையிரத்திலே அதிகமான சனநெரிசல் வேளையிலே இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு புகையிரத திணைக்களம் உரிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

சன நெரிசல் புகையிரதத்தில் கூடுதலாக காணப்பட்டால் கூடுதலான புகையிரத சேவைகளை நடத்த தீர்மானிக்க வேண்டும்.

அத்துடன் புகையிரத பயணத்தின் போது யாசகம் முற்றிலும் தடைசெய்யப்பட்டும் மீண்டும் யாசகம்பெறுவோரின்எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

யாசகம் புகையிரதப் பயணத்தில் இடம்பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 23.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.45 | 145.68 |
| பவுண்ட் | பிரிட்டன் | 208.92 | 216.69 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.74 | 160.13 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.08 | 148.25 |
| டொலர் | கனடா | 100.93 | 105.31 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.36 | 106.33 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.24 | 104.28 |
| ரூபா | இந்தியா | 2.1671 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 380.8443 |
| குவைத் | டினார் | 472.7886 |
| ஓமான் | ரியால் | 372.9988 |
| கட்டார் | ரியால் | 39.4364 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.2656 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0955 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 160 | 180 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 650 | 700 | 1000 | 800 |
| தக்காளி | 140 | 120 | 110 | 160-200 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 20-30 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 100 | 160 | 160 | 120 |
| கரட் | 200 | 250 | 200 | 200-320 | 320 | 200 |
| பூசணி | 60 | 50 | 30-40 | 50 | 60 | 50 |
| புடோல் | 120 | 150 | 100 | 120 | 160 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 160 | 100 | 200 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 60 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 400-500 | 400 | 280 |
| வெண்டிக்காய் | 180 | 150 | 100 | 200 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 250 | 300 | 250 |
| லீக்ஸ் | 140 | 160 | 100 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 200 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | 300 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 450 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | 280 | 240 | 250 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 40 | 50 | 80 | 50 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 200 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-40 | 50 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 120 | 200 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 200 | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 100 | — | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | 50 | 80 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## வெலிக்கடைச் சிறையில் மீண்டும் சிங்களவர்கள் வெறியாட்டம் 61

### ரயில் மீது தாக்குதல்

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் வண்டி ஒன்றை ஆயுதம் தாங்கிய சிங்கள வெறியர்கள் தாக்கினார்கள். ரயிலில் இருந்த தமிழர்களைக்கொன்றார்கள்.

திருகோணமலையில் சிங்கள மாலுமிகள் துப்பாக்கிகளுடன் தமிழர் வீடுகளைத் தாக்கினார்கள். வீடுகளுக்கு தீ வைத்தார்கள்.

### அமிர்தலிங்கம்

இலங்கைத் தமிழர் தலைரான அமிர்தலிங்கம் தலைமன்னாரில் இருந்து கப்பலில் ராமேஸ்வரம் வந்து அங்கிருந்து டில்லிக்குப் போய் பிரதமர் இந்திராவைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் கப்பல் போக்குவரத்து ரத்தாகிவிட்டதால் இது முடியவில்லை.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு டெலிபோன் செய்து நான் கொழும்பு சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்ல வேண்டும்.

பிறகு டெல்லி சென்று இந்திரா காந்தியைச் சந்திக்க வேண்டும். நான் கொழும்பு செல்ல பாதுகாப்பு கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் பாதுகாப்பு தர ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார்.

இலங்கையில் வெலிக்கடை சிறையில் தமிழ்ப் போராளிகள் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்ததும் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஆர்ப்பாட்டங்களும் கண்டன ஊர்வலங்களும் முழு அடைப்பும் நடந்தன.


இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வேண்டுமானால் தமிழ் ஈழம் அமைப்பதுதான் ஒரே வழி என்று தமிழர்களை எண்ண வைத்த நிகழ்ச்சியாகக் கறுப்பு ஜூலை கலவரம் (25-07-1983) அமைந்தது.

### கொந்தளிப்பு

வெலிக்கடை சிறையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட தமிழ்ப் போராளிகள் கொல்லப்பட்டதைக் கேளவிப்பட்டதும் தமிழகம் உணர்ச்சிப் பிழம்பாகக்கொதித்து.

அ.தி.மு.க., தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து,



தி.மு.க சார்பில் ஜூலை 27 ஆம் திகதி அண்ணா சதுக்கத்தில் இருந்து அண்ணா அறிவாலயம் வரை தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் பேரணி நடந்தது.

பாராளுமன்றத்திலும் டில்லி மேல்- சபையிலும் இலங்கைப் பிரச்சினை சூடு கிளப்பியது. டெல்லி மேல் சபையில் அப்போது தி.மு.க. உறுப்பினராக இருந்த வைகோ பேசுகையில், இது மனிதாபிமான பிரச்சினை. இலங்கைத் தமிழர்களைப் படுகொலை செய்வதை நிறுத்துமாறு இலங்கைக்கு மத்திய அரசு இறுதி எச்சரிக்கை விடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

### கறுப்புச் சின்னம்

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை கறுப்புச் சின்னம் அணிய எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழக அமைச்சரவை முடிவு செய்தது.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை நடந்த போது பிரதமர் இந்திரா காந்தி சிக்கிம் மாநிலத்தில் இருந்தார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறுகையில் இலங்கையில் இப்போது நடந்து வரும் சம்பவம் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.

அதனால் எனது சிக்கிம் பயணத்தை ஒருநாள் முன்னதாக முடித்துக்கொண்டு அவசரமாக டில்லிக்குத் திரும்புகிறேன்.

இலங்கை நிலைமையை நேரில் கண்டறிய வெளி விவகார மந்திரி நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றார்.

### ஜெயவர்த்தனவுடன் சந்திப்பு

கலவரமும் கொலையும் நடந்து கொண்டிருந்த ஜூலை 27 ஆம் திகதி இந்திரா காந்தி ஜெயவர்த்தனவுடன் டெலிபோனில் பேசினார்.

இதைத் தொடர்ந்து வெளி விவகாரத் துறை மந்திரி நரசிம்மராவ் இலங்கைக்குச் சென்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசினார். தமிழர்க்குப் பாதுகாப்பு அளிக்கும்படி ஜெயவர்த்தனவைக் கேட்டுக் கொண்டார்.

இலங்கை கலவரம் பற்றி இந்திய அரசாங்கத்தின் வேதனையை ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்தார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர் அமிர்தலிங்கத்தைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யும்படி இலங்கை அதிகாரிகளிடம் நரசிம்மராவ் தெரிவித்தார். இதை அவர்கள் நிராகரித்துவிட்டனர்.



(தொடரும்)

பொதுவாழ்வு என்பது புயல் வீசும் கடலுக்கு ஒப்பானது. எனினும் அதைக் கடந்து குறிப்பிட்ட இடத்தைச் சேர்வதில் இன்பம் இருக்கிறது.
-எம்.என்.ராய்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையின் உதயத்தால் பயம் கொண்டோரின் கூக்குரல் பாரீர்

தமிழ் மக்களின் ஒரே பலம் ஒற்றுமை என்பதை எவரும் மறந்து விடக் கூடாது. அந்த ஒற்றுமை குலைந்து போகுமாக இருந்தால், அதனால் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள்-தமிழினம் என்ற உண்மையையும் நாம் இவ்விடத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனினும் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து அதில் இருந்து பதவியைப் பெற்றுக் கொள்ள நினைக்கின்ற கொடுமை நடந்தேறுகின்றது.

அண்மையில் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை மதத்தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் இணைந்து அமைத்தனர். அந்த அமைப்பினர் இது ஓர் அரசியல் கட்சியோ மாற்றுத் தலைமையோ இல்லை அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் நலன்களை கவனிக்கின்ற அமைப்பு என்று வெளிப்படையாகக் கூறிய போதிலும், இல்லை இது அரசியல் கட்சிதான்; மாற்றுத் தலைமைதான் என்று ஒரு சிலர் விடாப்பிடியாக நிற்கின்றனர்.

தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சி அல்ல என்று மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் வெளிப்படையாகக் கூறியுள்ளனர். தமிழ் மக்கள் பேரவையில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சித் தலைவர்களும் இது அரசியல் கட்சி அல்ல தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் அமைப்பு என்று பட்டவர்த்தனமாகத் தெரிவித்துள்ளனர்.

இருந்தும் தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட்டு விடக் கூடாது; அவர்கள் ஒற்றுமைப் பட்டால் எங்கள் அரசியல் பிழைப்பு அம்போ என்றாகிவிடும் என்று பயம் கொண்டவர்கள் தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சி என்று விமர்சிக்கின்றனர்.

இங்குதான் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும் பிரித்தாளும் தந்திரம் வெளிப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு பின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வியில் சிலர் தாமே என்று கற்பனை செய்து கொண்டு அதற்கேற்றால் போன்ற சூழமைவை ஏற்படுத்துவதற்காக சூழ்ச்சி செய்கின்றனர்.

இந்தச் சூழ்ச்சித் தனங்களை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் ஒற்றுமைப் பலம் உயர வேண்டுமாயின் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் சந்தித்து தமக்குள் இருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகளை நிவர்த்திக்க வேண்டும்.

எனினும் பதவி ஆசை பிடித்த அரசியல்வாதிகள் சிலர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் முதல்வர் விக்னேஸ்வரனும் சந்திப்பதை தடை செய்ய முயற்சிப்பர் என்பதும் உண்மை.

எதுவாயினும் தமிழ் மக்கள் பேரவையின் எதிர்காலப் பணி நிச்சயம் அந்த அமைப்பின் நோக்கத்தை வெளிப்படுத்தும். அதுவரை பொறுத்திருந்து பார்க்கமுடியாதவர்கள் கூக்குரல் இடட்டும். அதைப் பற்றி கவலை கொள்ளத்தேவையில்லை.

உண்மையும் நீதியும் எங்குள்ளதோ அங்கு இறை ஆசியும் தூய பணியும் வெற்றியும் இருக்கும் என்பதே உண்மை.

# ஹிருணிகாவின் ஆதரவாளர் ஆறு பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கையில் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பாதுகாப்பு வாகனம் ஒன்றை பயன்படுத்தி நபர் ஒருவரை கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அவரது 6 ஆதரவாளர்களை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார் அவர்களை அடையாள அணிவகுப்பொன்றில் நிறுத்துவதற்கு அனுமதி தருமாறு நீதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதி சந்தேகநபர்களை எதிர்வரும் 04-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அன்றைய தினம் அவர்களை அடையாள அணிவகுப் பொன்றில் நிறுத்துமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் டிஃபெண்டர் வாகனம் ஒன்றை பயன்படுத்தி சந்தேக நபர்கள் கொழும்பு தெமட்டகொடை பகுதியில் ஒருவரை கடத்தியுள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இதனிடையே, இந்த சம்பவத்துடன் தனக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று கூறியுள்ள ஹிருணிகா பிரேமச்சந்திர தனது ஆதரவாளர்களின் நடவடிக்கையை கண்டிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே தான் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-12)

# கல்லால் அடித்துக் கொல்லும் பெண்ணின் தண்டனை இரத்து!

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் கல்லால் அடித்துக் கொல்லப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்த இலங்கைப் பணிப் பெண் அந்தத் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார்.

அவரது தண்டனை சிறைத் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் துணை வெளியுறவு அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கருணை மனு சவுதி அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

திருமணமாகாத இலங்கையர் ஒருவருடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டே கடந்த ஆகஸ்டில் அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

அந்தப் பெண்ணை கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்றும் அவருடன் குற்றவாளியாக காணப்பட்ட இலங்கை ஆணுக்கு 100 கசையடிகள் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தப் பெண்ணின் தண்டனைக்கு எதிராக இலங்கையில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இரண்டு பிள்ளைகளின் தாயான இந்த 45 வயதுப் பெண் தொடர்பான வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சவுதி அரேபியா இந்த மாதத்தின் முற்பகுதியில் உடன்பட்டிருந்தது.

இப்போது அவரின் தண்டனை குறைக்கப்பட்டுள்ள செய்தி தொடர்பில் சவுதியின் ஊடகங்களில் உடனடியான கருத்துக்கள் எதுவும் வெளியாகியிருக்கவில்லை. (எ-12)

## தனக்குத்தானே தீ மூட்டியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனக்குத் தானே தீ மூட்டி எரிந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இதில் நெல்லியடியைச் சேர்ந்த துரைராசா பிரதீபன் (வயது -30) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

பொலிஸ் நிலைய அழைப்பை ஏற்று அங்கு சென்ற மேற்படி நபர் தனக்குத் தானே மண்ணெண்ணெயை ஊற்றி தீ மூட்டிய சம்பவம் கடந்த 20ஆம் திகதி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

தீ மூட்டி எரிந்த நபரை பொலிஸ் காப்பாற்றி உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மேற்படி நபர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் உயிரிழந்தார். (எ-5,30)

## ஏல விற்பனை

திண்மக்கழிவகற்றலை மேம்படுத்தும் முகமாகவும் யாழ்.மாநகரசபையின் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நடவடிக்கையின் ஓர் அம்சமாகசபையின்பாவனையில் இல்லாத பழுதடைந்த கணனிகள், அதற்கான பற்றரிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரங்கள் என்பன எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் மீள்சுழற்சிக்காக ஏலவிற்பனை செய்யப்படவுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## கிறிஸ்மஸ் தினம்

யாழ்ப்பாணம் சத்ய சாயி சேவா நிலையத்தின் கிறிஸ்மஸ் தினம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிறிஸ்மஸ் பாடல்கள், பாலவிகாஸ் மாணவர்களின் நிகழ்வுகள், நத்தார் கீதங்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் யாழ்.ஆயர் இல்லத்தின் மறைமாவட்ட குரு முதல்வர் வண பிதா. ப.ஜோசப்தாஸ் ஜெபரட்ணத்தின் நத்தார் சிறப்புரையும் இடம்பெறும். (இ-5)

## சத்திய தரிசனம்



### நிம்மதிக்கான வழிமுறை


❖ ஆசைக்கு ஒரு உச்ச வரம்பை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். இதுவே நிம்மதிக்கான வழிமுறை.

❖ செய்யப் போவதையே சொல்லுங்கள். சொன்னதையே செயல்படுத்துங்கள்.

❖ மனிதன் கடமையில் பொறுப்புடன் இருந்தால், அதற்குரிய நற்பலன் கிடைத்தே தீரும்.

❖ பெண் என்பவள் பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை தேடித் தருபவளாக இருக்க வேண்டும்.

❖ கல்வி என்பது விவேகத்தையும், நன்மை தீமையை பகுத்தறியும் திறனையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவன் கோயில்களில் சிவனுக்கு முன்பு நந்தி அமர்ந்திருப்பது ஏன்? அது யார்?

நந்தி அவதரித்த இடம் (மண் உலகம்) தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றில் அந்தணக்குறிச்சி என்னும் ஊர். சிலாத முனிவருக்கும் சித்திரவதி என்னும் பெண்ணுக்கும் மகனாகக் கிடைத்தவர். குழந்தையில்லா முனிவர் சிவனை நோக்கி செய்த புத்ரகாமேஷ்டி எனும் யாகத்தின் பலனாக சிவபெருமானின் அருளால் மகனாக பூமியில் இருந்து வந்தவர். இவருக்கு ஜெபேசர் என சிலாத முனிவர் பெயர் வைத்தார். மித்ரர், வருணர் என்ற இரண்டு முனிவர்கள் ஜெபேசர் எட்டாம் வயதில் மரணம் அடைவார் என கூற அதை கேட்டு சிலாத முனிவர் மிகவும் வேதனையுற்றார். இதை அறிந்து ஜெபேசர் திருவையாறு சூர்ய தீர்த்தத்தில் சிவபெருமானை நோக்கி கழுத்தளவு நீரில் நின்று பத்து வருடங்களுக்கு மேலாக தவம் செய்து கோடி முறைக்கு மேலாக பஞ்சாட்சர மந்திரம் கூறியவுடன் அவர் முன் தோன்றிய சிவபெருமான் உமக்கு என்ன வரம்வேண்டுமென திருவாய்மொழிய அதற்கு ஜெபேசர், பெருமானே தாங்கள் முன் அமர்ந்து எப்பொழுதும் தங்களின் திருநாமத்தை உச்சரிக்கும் பெரும் வரம்வேண்டும் எனப் பணித்தார். அதற்குச் செவிசாய்த்த சிவபெருமான் உமது அனுமதி பெற்றே எமை வந்து பணிவார்கள் என திருவுளம் அருளினார்.சிவசாரூபமும் ஸ்ரீநந்தி எம்பெருமான் முதல் குருவாகவும் அருள் பெற்றார். தரிசனம் செய்ய வருவோர்க்கு அருள் வழங்கும் அதிகாரத்தை பெற்றார். திருமழப்பாடியில் வியாக்ரபாதா மகள் சுயம்பிரபை என்ற பெண்ணை மணந்தார். இவரின் திருமணம் திருமழப்பாடியில் நடந்தது.

# இந்தியா- பாகிஸ்தான் தொடருக்கு முன்னாள் கப்டன் கங்குலி முழு ஆதரவு



இந்தியா - பாகிஸ்தான் இடையேயான கிரிக்கெட் தொடருக்கு இந்திய அணியின் முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி முழு ஆதரவு தெரிவித்துள்ளார்.

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட போது செய்தியாளர்களிடம் கங்குலி கூறியதாவது.

"இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் நடக்க உள்ள நிலையில் இருநாட்டு ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது.


தனிப்பட்ட முறையில் பாகிஸ்தான் உடனான தொடருக்கு என்னுடைய முழு ஆதரவு உண்டு. இருப்பினும் தொடர் நடப்பதை தீர்மானிக்கும் காரணிகள் பல உள்ளன" என்றார்.

அவுஸ்திரேலியா உடனான இருபது-20 தொடருக்கான அணியில் யுவராஜ் சிங் மற்றும் ஆசிஷ் நெஹ்ரா தேர்வு செய்யப்பட்டது குறித்த கேள்விக்கு பதிலளித்த கங்குலி,

"வயதினை விட ஆட்டத்தின் திறன் தான் முக்கியமானது" என்று தெரிவித்தார்.

மேலும் டில்லி கிரிக்கெட் சங்கத்தில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் அதனால் கருத்து தெரிவிக்க முடியாது என்றும் கங்குலி கூறினார். (க)

# ஒருநாள் போட்டியில் இடம்பெறாதது ஏமாற்றமே-யுவராஜ் சிங் கவலை



ஒருநாள் போட்டியில் இடம் பெறாதது ஏமாற்றம் அளிக்கிறது என இந்திய அணியின் சகலதுறை துடுப்பாட்டக்காரரான யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இருபது-20 போட்டியில் விளையாடுவதற்காக இந்திய அணியில் யுவராஜ் சிங் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து யுவராஜ்சிங் கூறுகையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 போட்டியில் விளையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

அதேநேரத்தில் ஒருநாள் போட்டியில் இடம்பெறாதது ஏமாற்றத்தை தருகிறது.

ஏமாற்றம்தனிப்பட்ட கருத்து, இதில் நான் தவறாக புரிந்து கொள்ளப்படமாட்டேன் என்று நம்புகிறேன். இந்தச் சூழலில் கூறியது திரிக்கப்படமாட்டாது என்று நம்புகிறேன். அணியில் இடம் கிடைக்காமல் வெளியில் இருந்த காலகட்டமே, மீணடும் இந்திய அணியில் இடம் பெற என்னை வழிநடத்தியது.

ஏனெனில் தனனம்பிக்கை தான்எனது அடிப்படை குணம். ஓய்வறையில் வீரர்கள் என் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எனக்கு தேவையான ஆதரவு கிடைக்கும் என்றே கருதுகிறேன் என தெரிவித்துள்ளார். (க)

# முதலிடத்தில் அஸ்வின்




சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலான ஐ.சி.சி. டெஸ்ட் போட்டிகளுக்கன தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

சகல துறை ஆட்டக்காரர்களுக்கான பட்டியலில் இந்திய அணிவீரரான அஸ்வின் 419 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார், இவரது டெஸ்ட் சராசரி 31.68 ஆகும்.வங்கதேச வீரர் சகீப்- அல்-ஹசன் 2ஆவது இடத்திலும், பிராட் (இங்கிலாந்து) 3ஆவது இடத்திலும், பிலாண்டர்(தென்னாபிரிக்கா) 4ஆவது இடத்திலும் உள்ளனர்.

ஸ்டார்க்(அவுஸ்திரேலியா), முகமது ஹபீஸ்(பாகிஸ்தான்), மொய்ன் அலி(இங்கிலாந்து), ஸ்டெய்ன்(தென்னாபிரிக்கா), மத்யூஸ்(இலங்கை) ஆகியோர் 6 முதல் 10ஆவது இடங்களில் உள்ளனர். (க)

# தேசிய கராத்தே சுற்றுப் போட்டி; மகாதேவா மாணவர்கள் சாதனை



2015 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 19ஆம் திகதியன்று கொழும்பு மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மகாதேவா சுவாமிகள் இல்லத்தைச் சேர்ந்த வீர. வீராங்கனைகள் 4 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலம் என்ற ரீதியில் 11 பதக்கங்களை வென்றுள்ளனர்.

தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்,

T.றஜீவன் 15 வயதுப்பிரிவு குமித்தே வெண்கலப்பதக்கம், K.சிந்துஜன் 15 வயதுப்பிரிவு குமித்தே வெண்கலப் பதக்கம், M. தர்சன் 21 வயதுப் பிரிவு குமித்தே வெள்ளிப்பதக்கம், A.கமலினி 48 k குமித்தே தங்கப்பதக்கம், K.பவானி 15 வயதுப்பிரிவு 39k குமித்தே தங்கப்பதக்கம், K.லக்குனா 16 வயதுப்பிரிவு 53 k குமித்தே தங்கம் காட்டா வெண்கலம் K.சாலினி 16 வயதுப்பிரிவு 51k குமித்தே வெண்கலம், காட்டா வெள்ளி, M.சௌமியா 16 வயதுப் பிரிவு 53 k குமித்தே வெண்கலம், காட்டா தங்கம்.

இவர்கள் மாகாண மட்டப்போட்டியில் 36 பதக்கங்களை வென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

இவர்களுடன் நடுவர்கள், பெண்கள், விடுதி முகாமையாளர் க.கலா தேவி மற்றும் கராத்தே ஆசிரியர் சென்சே விஜயராஜையும் படத்தில் காணலாம். (க)

# இந்திய அணித் தேர்வில் நான் தலையிடமாட்டேன்

## ரவி சாஸ்திரி தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அவுஸ்திரேலிய் சுற்றுப்பயணம் செய்து 5 ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் ஆட்டத்தில் விளையாடுகிறது.

அவுஸ்திரேலிய தொடருக்கான இந்திய' அணி வீரர்கள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்திய அணிக்கான தேர்வு குழு கூட்டத்தில் தேர்வு குழு உறுப்பினர்கள் மற்றும் கப்டன் டோனி ஆகியோரே பங்கேற்றனர்.

அணியின் இயக்குநரும், முன்னாள் கப்டனுமான ரவிசாஸ்திரி இநத கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இதுகுறித்து ரவிசாஸ்திரியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது,

இந்திய அணி தேர்வில் நான் ஒருபோதும் தலையிட மாட்டேன். அணி தேர்வு குறித்து நான் எந்த கருத்தும் சொல்ல விரும்பவில்லை. இது எனது எல்லைக்கு வரவில்லை. என்னுடைய பணி வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமே.

இவ்வாறு அவர் கூறினார். (க)

# இரட்டையர் உலக சம்பியனாக சானியா- ஹிங்கிஸ் ஜோடி தெரிவு



சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் (ஐ.டி.எப்.) ஒவ்வொரு ஆண்டும் டென்னிசில் சிறப்பாக செயற்படும் வீரர், வீராங்கனைகளுக்கு உலக டென்னிஸ் சம்பியன் விருதுகளை வழங்கி வருகிறது.

இந்த ஆண்டில் மகளிர் ஒற்றையரில் அமெரிக்க 'நம்பர் வன்' நட்சத்திரம் செரீனா வில்லியம்ஸ் உலக சம்பியன் விருதுக்கு தெரிவாகியுள்ளார். இது இவருக்கு வழங்கப்படுவது 6ஆவது முறையாகும்.

அதே போல் ஆடவர் ஒற்றையரில இந்த சீசனில் 3 கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற 'நம்பர் வன்' வீரர் நோவக்ஜோகோவிச்தொடர்ந்து 5ஆவது முறையாக உலக சம்பியன் விருதை பெறவுள்ளார்.

மேலும், மகளிர் இரட்டையரில் 'நம்பர் வன்' கூட்டணியான இந்தியாவின் சானியா மிர்சா- சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி இரட்டையர் உலக சம்பியன் விருதை தட்டிச் சென்றுள்ளது. பாரீசில் நடக்கும் பிரெஞ்ச் ஓபன் டென்னிசின் போது இந்த ஐ.டி.எப். உலக சம்பியன் விருதுகள் வழங்கப்படும். (க)

## ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேக நபர்களுக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 4-ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நிரோசா பெர்னான்டோ உத்தர விட்டுள்ளார்.

வெல்லமட்பிட்டியைச் சேர்ந்த ஹெட்யாரச்சிகே பிரசாத் சந்தன குமார எனப்படும் சம்பத், மானல்லவைச் சேர்ந்த தெலி வலகெதர காமினி செனவிரட்ன மற்றும் ருவன்வெல்லவைச் சேர்ந்த பிரதீப் சமிந்த எனப்படும் வஜிர ஆகியோரின் விளக்கமறியல் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மேலும் சில சந்தேக நபர்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த வகையில் பல்லசாமி சுரேஸ்(காணவில்லை), சிவகாந்தன் விவேகானந்தன் (வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றார்), ரொய்ஸ்டன் டுசேன் (வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றார்) மற்றும் நேவி சம்பத் ஆகியோரும் வழக்கின் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (எ-12)

## ஆட்டோ-மோ. சைக்கிள்கள் விபத்து மூவர் படுகாயமடைந்தனர்

(கரணவாய்)

ஆட்டோ மற்றும் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றைய தினம் பிற்பகல் 3.30 மணியளவில் வடமராட்சி நெல்லியடி புதிய சந்தைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் கரணவாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இரு இளைஞர்கள் மற்றும் கரணவாய் தெற்கு மண்டான் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய வயோதிபர் என மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்ற இரு மோட்டார் சைக்கிள்களில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் வீதியில் குறுக்கே சென்ற நாய் ஒன்றில் மோதியதுடன் முன்னால் வந்து கொண்டிருந்த ஆட்டோவுடனும் மோதி விபத்துக்குள்ளானார்.

இதேவேளை வயோதிபர் பின்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற அவ் இரு இளைஞர்களும் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வயோதிபரது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளாகினர்.

இவ் விபத்துச் சம்பவத்தில் நாய் ஒன்று பரிதாப கரமாக உயிரிழந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-5,60)

# நன்னீர்த் திட்டத்துக்கு மருதங்கேணியில் எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, மருதங்கேணி கடற்றொழிலாளர்கள் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக நேற்றைய தினம் காலை எட்டு மணிமுதல் மதியம் வரையிலான அரைநாள் உண்ணாவிரத போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். இப்போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தனும் கலந்து கொண்டிருந்தார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்திலிருந்து கடல்நீரை சுத்திகரித்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீராக எடுத்துச்செல்லும் திட்டமொன்று மத்திய அரசினால் கொண்டுவரப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக குறித்த கடற்பரப்பில் இருந்து குறிப்பிட்டளவு கடல் நீரும் பரிசோதனைக்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டத்திற்கு ஒரு பகுதியினர் ஆதரவு தெரிவித்துள்ள போதிலும், குறித்த திட்டத்தினால் கடலில் மீன்வளம் குறைந்து விடும் எனவும், நன்னீராக்கும் தொழிற்சாலை கழிவுகள் கடலில் கலப்பதனால் கடல் நீர் மாசடைவதோடு கடலில் உள்ள அனைத்து வளங்களும் அழிந்து போகும் ஆபத்து இருப்பதாக கூறி இன்னொரு பகுதியினர் குறித்த திட்டத்திற்கு எதிர்ப்பு காட்டி வருகின்றனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த கடற்தொழிலாளர்களும் குறித்த பிரதேசத்திலிருந்து கடல்நீரை கொண்டுசெல்லும்போது, தமது வாழ்வாதார தொழிலான மீன்பிடி பாதிக்கப்படுமென பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன், கடல் நீரை சுத்தமாக்குவதற்காக அதி வலு கொண்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படும்போது, அதனால் கடல் வளம பாதிக்கப்படும் நிலை ஏற்படுமெனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், தமது ஜீவனோபாயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் குறித்த திட்டத்திற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோமென மருதங்கேணி மக்கள் இந்த அடையாள உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். மக்களின் இப்பிரச்சினை தொடர்பில் வடக்கு மாகாண சபையிலும் உறுப்பினர் சுகிர்தனால் கொண்டு வரப்பட்டு விவாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போராட்டத்தில் வட்க்கு மாகாண விவசாய அமைச்சர், கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்திற்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



போராட்டத்தின் முடிவில் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் மருதங்கேணி பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டதோடு, ஜனாதிபதி பிரதம மந்திரிக்கான மகஜர் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனுக்கான மகஜர் சுகிர்தனிடம் கையளிக்கப்பட்டது. மேற்படி உண்ணாவிரத போராட்டத்தின் போது பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-4-5-60-63)

## ரயில் மோதியவர் நேற்று மரணம்

(உரும்பிராய்)

புகையிரதத்துடன் மோதுண்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீசாலையில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையை ஆட்டோ கடக்க முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதம் மோதித் தள்ளியது.

இச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த சின்னத்துரை பிரசன்னா (வயது 22) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று காலை 10 மணியளவில் உயிரிழந்துள்ளார்.(எ-12,30)

## அனுமதியின்றி புகைப்படம் வெளியீடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யோகா பயிற்சியில் ஈடுபடும் படத்தை தனது மகன் நாமல் ராஜபக்ஷ தனது அனுமதியின்றி வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பிரகீத் காணாமற்போன விவகாரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள புலனாய்வாளர்களை சந்திப்பதற்காக வெலிக்கட மருத்துவமனைக்கு சென்ற வேளையே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நான் யோகபயிற்சியில் கடந்த சில வருடங்களாக ஈடுபட்டு வருகிறேன், எனினும் இந்த விடயம் ஊடகங்களிற்கு தெரியாது. கடந்தவாரம் நான் எனது மகனுடன் யோகா பயிற்சிநிலையத்திற்கு சென்றதை தொடர்ந்தே வெளியுலகிற்கு இந்த விடயம் தெரியவந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய யோகா பயிற்சியே எனது உடல் நிலை இந்தநிலையில் இருப்பதற்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார். (எ-12)

## சட்டவிரோத குடியேற்றத்தை நிரூபித்தால் அரசியலை துறப்பேன்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடமேற்கே உள்ள வில்பத்து தேசிய சரணாலயத்தினுள் தன்னால் சட்டவிரோதமான முறையில் முஸ்லிம் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், உடனடியாக அரசியலிலிருந்து விலகிவிடத் தயார் என்று அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

வில்பத்து சரணாலயத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோத குடியேற்றங்களை மேற்கொண்டுவருவதாகவும், அதற்காக காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பௌத்த பிக்குகள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

வில்பத்து, சிங்கராஜ மற்றும் யால சரணாலயங்கள் அழிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஒன்றியம் கடந்த சனிக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பௌத்த அமைப்பான தேசிய சங்க சம்மேளனத்தின் பிரதான செயலாளர் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர், வில்பத்து சரணாலய அழிப்புக்கு அமைச்சர் ரிசாத் பதியூதீன் தான் காரணம் என்று குற்றஞ்சாட்டினார்.

அமைச்சர் ரிசாத் பதியூதீன் மிகப் பெரியளவில் காடுகளை அழித்து வருகிறார் என்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலிருந்தே கூறி வருகிறோம் என்றார் பாகியங்கல ஆனந்த சாகர தேரர்.

இதனிடையே, நேற்று ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் ரிசாத் பதியூதீன், வில்பத்து சரணாலயம் தன்னால் அழிக்கப்பட்டு வருவதாக தன் மீது தொடர்ந்தும் பொய்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதாக கூறினார்.

வில்பத்து சரணாலயத்திற்குள் ஒரு முஸ்லிம் குடும்பத்தையேனும், நான் சட்டவிரோதமாக குடியேற்றியிருப்பதையோ அல்லது நான் காடழிப்பை மேற்கொண்டிருப்பதையே உறுதிப்படுத்தினால் நான் அரசியலிலிருந்து விலகுவேன் என்றார் ரிசாத் பதியூதீன். (எ-12)

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

(கொழும்பு)

சில நாட்களுக்கு முன்னர் தாயொருவர் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகளை பிரசவித்த சம்பவம் ஒன்று அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

கர்ப்பப்பை சிக்கல் காரணமாக 28 வாரங்களில் பிறக்க வேண்டிய குழந்தைகளை 31 வாரங்களாக தாயின் கர்ப்பப்பையில் வைத்து ஆரோக்கியமாக பராமரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முதலாக கர்ப்பப்பை சிக்கலை குறைத்து கொள்வதற்காக வாய் மூலம் கொடுக்க வேண்டிய மருந்தை யோனி வழியாக அனுப்பி, 31 வாரங்களுக்கு தாயின் கர்ப்பப்பையில் குழந்தைகளை ஆரோக்கியமாக வைத்து பராமரித்தமை சாதனையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-12)

## மரண அறிவித்தல்



திருமதி **பூபதி பசுபதி**
**(பூமணி)**

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் உடுவில் டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி பசுபதி (பூமணி) நேற்று புதன்கிழமை (23.12.2015) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-தங்கம்மாவின் அன்பு மகளும், சபாபதி பசுபதி (இளைப்பாறிய மொழி பெயர்ப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, யோசப், பூபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், சுபஸ்ரீ பவானியின் (ஆசிரியை-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும், சுபஸ்ரீயின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(2963) **தகவல்:-குடும்பத்தினர்**

## ஜெனிவா கூட்டத் தொடரில்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவையின்வருடாந்த வரைவு வேலைத்திட்டத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வு 2016ஆம் ஆண்டு யூன் மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற இம்மாநாட்டின் 30ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் அமுலாக்கம் தொடர்பான மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மூல மேம்படுத்தல் விளக்கமளிப்பு இடம்பெறவிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அதன் பரிந்துரைகளின் அமுலாக்கம் தொடர்பில் 32ஆவது அமர்வில் வாய்மூல மேம்படுத்தல் தெளிவுபடுத்தல் ஒன்றையும், 34ஆவது அமர்வில் விரிவான அறிக்கை ஒன்றையும் சமரப்பிக்குமாறு மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் அலுவலகத்திடம் கோரப்பட்டுள்ளது.

அதன் பிரகாரமே எதிர்வரும் யூன் மாதம் அமர்வில் இலங்கை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளகப் பொறிமுறை உருவாக்கப்பட்டு மார்ச் மாதமளவில் அதனை செயற்படுத்த எதிர்பார்ப்பதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது சுட்டிக் காட்டத்தக்கதாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது அமர்வு அடுத்த யூன் 13ஆம் திகதி தொடக்கம் யூலை முதலாம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

## பிரதமர் ரணில்...

பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. சுமார் பத்து நாட்கள் வரை அவர் அங்கு தங்கியிருக்கவுள்ளார்.

புத்தாண்டு தொடக்கத்தின் பின்னர் நாடாளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றும் நடவடிக்கை நெருங்கி வரும் வேளையில் பிரதமர் மீண்டும் நாடு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-12)

## கிராம இராச்சி...

கொழும்பில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிராம இராச்சியம் தொடர்பில் அச்சம் கொண்டிருப்பதாகவும் இது தொடர்பில் அவர்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை என்றும் இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2500 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அக் குழுக்களின் ஊடாக பிரதேச சபை மாகாண சபை என அனைத்து சபைகளுக்கும் இக் குழுக்கள் உள்ளீர்க்கப்படும் எனக் கூறிய அவர் கிராமங்களை சேர்ந்த அரசியல்வாதிகள் மதகுருக்களை உள்ளடக்கி குழு அமைக்கப்பட்டு கிராம அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

இது தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்த அவர் உண்மையில் இதன் ஊடாகத்தான் வடகிழக்கின் தனித்துவம் பாதுகாக்கப்படும் என்றும் இது தொடர்பான திட்டங்களுடன் கூட்டமைப்புடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் மேலும் தெரிவித்தார். (எ-12)

## கூட்டமைப்புக்கு...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறிப்பாக இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட வரைபு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்று தயாரித்து அதற்கமைய செயற்படுவதற்காக பல தரப்பினர்களையும், உள்ளடக்கியதாக தமிழ் மக்கள் பேரவையென்ற அமைப்பொன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த அமைப்பு தொடர்பில், பல விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த அமைப்பு தமிழ் மக்களுக்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதில் பல கட்சிகளினதும் மற்றும் பொது அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் எனப் பலரும் அங்கம் வகிக்கின்றனர்.

கலை, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாத்து சீரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்கும் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஆயினும் இது கூட்டமைப்பிற்கு எதிராக உருவாக்கப்பட்டதாக சில தரப்பினர் கூறினாலும் அவ்வாறு அந்த நோக்கம் இருபதாக நான் நினைக்கவில்லை.

குறித்த அமைப்பானது இவ்வாறு செயற்பட்டால் தமிழ் மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும், ஆனால் கூட்டமைப்பிற்கு எதிராக அந்த அமைப்போ அல்லது அந்த அமைப்பின் உறுப்பினர்களோ செயற்பட்டால் தமிழ் மக்களிடமிருந்து எதிர்ப்புக்களே ஏற்படும்.

இந்த அமைப்பில் இணைந்து கொள்வது தொடர்பில் நான் சார்ந்த கட்சியான ரெலோவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் நாங்கள் அதில் இணைந்து கொள்வது தொடர்பில் பரிசீலிப்போம்.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவைகளை முன்னிலைப்படுத்தி தமிழ் மக்களுக்குச் சார்பானதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த அமைப்பு தொடர்பில் சிலர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

அவ்வாறு இந்த அமைப்பு கூட்டமைப்பிற்கு எதிராகச் செயற்பட்டால் மக்கள் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பார்கள் என்றார். (எ-12)

## திறைசேரிக்கு புதிய செயலர்!

(கொழும்பு)

திறைசேரியின் புதிய செயலாளராக பேராசிரியர் ராசீன் சாலி நியமிக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நிதி அமைச்சின் பல முக்கிய பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரித்தானிய விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

கௌரவத்திற்குரிய சர்வதேச பொருளியலாளரான சாலி, வர்த்தக சமூகத்தின் மரியாதைக்குரியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-12)

## இந்திய மீனவர்...

மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்

நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்திய போது நீதவான் அவர்களை ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-9)

## கொலைச் சந்தேக நபர்கள்...

அதிகாலை மேற்படி மூவரையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வவுனியா பொலிஸார் தெரிவிக்கையில்,

வவுனியா பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய மூவர், தம்மை கண்டவுடன் ஓட முற்பட்டவேளை, சந்தேகம் அடைந்து மூவரையும் கைது செய்தோம்.

அவர்கள் பயணம் செய்ததாக நம்பப்படும் பட்டா வாகனம் உட்பட ஒரு பிஸ்ரல், ஒரு நாட்டுத்துப்பாக்கி, 2 முகத்தை மூடி அணியும் மாஸ்க் மற்றும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் பணம் என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன,

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் இலங்கையின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற கொலை, கொள்ளை சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இரட்டை கொலை வழக்கில் தேடப்பட்டுவரும் குற்றவாளி.

கொழும்பு, பதுளை, யாழ்ப்பாணம் பகுதிகளை சேர்ந்த மூன்று சந்தேக நபர்களும் யாழ்ப்பாணத்தில் பிரபல வியாபாரி ஒருவரை கொலை செய்து கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அது கைகூடாத நிலையிலேயே வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-12,250)

## இணையத்தளத்...

பிர்சுரிக்கப்பட்டிருக்கும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க தெரிவித்தார்.

இந்த காலப்பகுதியில் வாக்காளர் இடாப்பில் உள்ள பெயரில் குறைப்பாடுகள் காணப்படுமாயின், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருக்கு அல்லது தேர்தல்கள் செயலகத்திற்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

WWW.ELECTION.LK எனும் இணையத்தள முகவரியூடாக 2015 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தேர்தல்கள் செயலகம அறிவித்துள்ளது. (எ-12)

## பெண் சிறைக்கைதி...

காவலர்களுக்கு வழங்கிவந்த பெண் கைதியொருவர் காலி சிறைச்சாலைக்கு பலவந்தமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வெலிக்கட சிறைச்சாலையின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதை அந்த சிறைக்கூடத்தில் சட்டவிரோத வியாபாரங்களில் ஈடுபட்டு வந்த ஏனைய பெண் கைதிகள் குதூகலமாகக் கொண்டாடி மகிழ்ந்ததாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நிதி மோசடி வழக்கொன்றில் 18 வருடங்கள் தண்டனை பெற்றிருக்கும் இந்தப் பெண் கைதி தொடர்ந்து எட்டு வருடங்கள் வெலிக்கட சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் காலப் பகுதியில் சிறைச்சாலையின் மதில் சுவருக்கு வெளியில் வனாத்தமுல்ல பகுதியிலிருந்து உள்ளே வீசப்படும் போதைவஸ்து பைக்கற்றுகள், கைப்பேசிகள் போன்ற சட்டவிரோதப் பொருட்களை பொறுக்கி வந்து பெண் சிறைக்காவலர்களிடம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

எனினும், இவரது இந் நடத்தை சட்டவிரோத வியாபாரங்களைச் செய்துவந்த ஒருசில பெண் கைதிகளுக்கு இடையூறாக இருந்தபடியால் அவர் பல்வந்தமாக காலி சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. (எ-12)

## தற்போது...

உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு சொந்தமான டிபெண்டர் வாகனத்தில் நபர் ஒருவரைக் கடத்திய விவகாரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கம் தொடர்ந்தும் மகிந்த ராஜபக்ஷ அச்சுறுத்தலிலே இருப்பதாக கந்தானை நாகொட பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைக் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுபபிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

## 31ஆம் திகதி...

எட்டியுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையும், 24 ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை இரு கட்டங்களாக நடைபெறறமை குறிப்பிடத்தக்கது. (எ-12)


வடமாகாண ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

வியாழன் (இன்று) காலை 10.00 - 3.00 மணி வரை

சனி, ஞாயிறு, திங்கள் காலை 9.30 - 3.30 மணி வரை

T.P 0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

இப் பரீட்சைக்கான தவசேகரின் வழிகாட்டி நூலை ரூபா 300 இற்கு வகுப்பிலோ / பிரபல புத்தக நிலையங்களிலோ பெற்றுக் கொள்ள முடியும்.

(C-3096)

WORLD MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
THE POLAR EXPRESS
A Christmas magic train (animation movie, all audiences)
(2004,96 min)
On
Thursday 24 Decembre 2015 at 4.00 p.m.
at
Alliance Française de Jaffna,
61, kachcheri-Nallur Road, Jaffna
Phone : 021 222 8093
English Language. English subtitles.
Free entrance.
(2367)
பிரெஞ்சு வகுப்புகளும் நடைபெறுகின்றன





SCIENCE HALL கல்வி நிலையம்
வைத்தியசாலை முன்பாக சிவநகர், 7ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

2018க்கான A/L விஞ்ஞான / கணித பிரிவுகள் / தொழில்நுட்ப பிரிவுக்கான பாடங்களும் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் : 26-12-2015
நேரம் : காலை 9.00 மணி

உயிரியல்
P. சுரேந்திரன் (B.Sc Hons)
திருமதி S. றதிகலா (B.Sc Hons, Dip Ed)

பௌதிகவியல்
T. தேவதாஸ் (B.Sc, Med, SLES)
S.K. கைறேகன் (B.Sc Hons)

இணைந்த கணிதம்
K. சுதன் (B.Sc , MSC, Di.Ed)
S.மயூரன்(B.Sc )

இரசாயனவியல்
K. வாணிமுகுந்தன் (B.Sc , MSC, Di.Ed)
S.மகேஸ்வரன் (பிரபல ஆசிரியர் Sp.Trd.sci)

விவசாய விஞ்ஞானம்
J. இளவேந்தன் (B.Sc .Agri)
N.சாந்தகிரி (Sp.Trd.Agri)

பொறியியற் தொழில்நுட்பவியல்
S.K. கைறேகன் (B.Sc Hons)
V.அனுரன் (Eng.Tech)

விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும்
N.சாந்தகிரி (Sp.Trd.Agri)
J. இளவேந்தன் (B.Sc . Agri)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
K. யோதிப்பிரகாஸ் (B.Sc )
J. இளவேந்தன் (B.Sc . Agri)

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்
வி.றவீந்தர் (HND IT)

தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
K. வாணிமுகுந்தன் (B.Sc ,MSC Dip.in.Ed)
S.K. கைறேகன் (B.Sc Hons)
K. சுதன் (B.Sc , MSC, Dip.in.Ed)
P. சுரேந்திரன் (B.Sc Hons)
வி.றவீந்தர் (HND IT)

(2962)

நிர்வாகி
0772802296

நீங்களும் முகவராகலாம் - உங்கள் ஊரில் இருந்தவாறே வருமானம் ஈட்டலாம்.

V2 TRAVELS & TOURS





சர்வதேச விமானபயணச்சீட்டுகள் ,சர்வதேச பொதிகள் சேவை, உள்ளூர் பொதிகள் சேவை உட்பட 10 இற்கும் மேற்பட்ட சேவைகளை உள்ளடக்கிய எமது நிறுவனத்திற்கு பிரதேசவாரியாக அனைத்து மாவட்டங்களிலும், பிரதேசங்களிலும், ஊர்களிலும் முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

மாதம் 25,000/= மேற்பட்ட வருமானத்தினை பெற்றுக்கொள்ளலாம்.





DHL SKYNET FedEx aramex PROMPT XP

நேர்முகத்தேர்வு மற்றும் தொழில்விளக்கம் : 27-12-2015
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.
0768226243
(C-3090)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.